# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 331 ஐப்பசி 06ஆம் நாள் திங்கட்கிழமை 23 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 28


# அரியாலையில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

## மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஒக்ரோபர். 23


யாழ்ப்பாணம் அரியாலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இளைஞர் ஒருவரைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றனர். பட்டப் பகலில் நடந்த இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

அரியாலை உதயபுரத்தைச் சேர்ந்த டொன்போஸ்கோ டெஸ்மன் (வயது -25) என்ற இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டார். கடற்றொழிலாளியான இவர் தனது நண்பனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவருக்கு இரு தடவைகள் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. ஆனால், துப்பாக்கிக் குண்டு அவரது சுவாசக் குழாயையும் தாக்கிச் சென்றதால் சிகிச்சை பயனளிக்காமல் அவர் நேற்றிரவு உயிரிழந்தார்.

"டெஸ்மன் தனது வீட்டில் உணவு உட்கொண்டபோது ஓர் அலைபேசி அழைப்பு வந்தது. உடனடியாகவே வீட்டிலிருந்து புறப்பட்டார். அதன் பின்னர் அவர் சுடப்பட்டார் என்ற தகவல்தான் கிடைத்தது" என்று அவரது உறவி

>> 25



# உதயன் மீது வடமராட்சியில் சீறிப் பாய்ந்தார் சுமந்திரன்

## அரசைத் தர்மசங்கடத்துக்குள் தள்ளுகின்றதாம்

கரணவாய், ஒக்.23

அச்சு ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு அரசை தர்மசங்கடத்துக்குள் தள்ளி வருகின்றன. குறிப்பாக வடபகுதியில் இருந்து வெளிவருகின்ற உதயன் பத்திரிகை இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது.

இவ்வாறு நேற்றுச் சீறிப் பாய்ந்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ .சுமந்திரன்.

>> 25

# அரசமைப்புக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றதாம் ஊடகங்கள்

கொழும்பு, ஒக். 23

ஊடகங்கள் அரசமைப்புக் குறித்தே அதிகளவில் முக்கியத்துவம் கொடுத்து இப்போது செய்திகளை வெளியிட்டு வருகின்றன. நாட்டைப் பிளவுபடுத்தப் போவதாகவும், மகாநாயக்க தேரர்களைக் குழப்பத்

>> 04

# தடைகள் பல வந்தாலும் புதிய அரசமைப்பு வரும்

கொழும்பு, ஒக். 23

தீய சக்திகள் எவ்வாறு தடைகளை ஏற்படுத்த முயற்சித்தாலும் புதிய அரசமைப்பை உருவாக்கும் பயணத்தை நாம் நிறுத்திக் கொள்ளப்போவதில்லை. புதிய அரசமைப்பு சரியான நேரத்தில் உருவாக்கப்

>> 04

## புதிய அரசமைப்பின் ஊடாக

# நாட்டைக் கூறுபோட்டால் கையொப்பமிடமாட்டேன்

கொழும்பு, ஒக். 23

நாட்டைக்கூறுபோடும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுமானால் அதில் நான் கையொப்பமிடமாட்டேன் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சட்டமொன்று நிறைவேறியதும், அதில் சபாநாயகர் கையொப்பமிட்ட பின்னரே அது முழுமை பெறும். நடைமுறைக்கும் வரும்.

மீரிகம பகுதியில்

>> 25

# கைதிகளுக்கு ஆதரவாக இன்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 23

அநுராதபுரம் சிறைச்சாலையில்தொடர்உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 3 தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைக்கு தலைசாய்த்து உடன் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்குமாறு வலியுறுத்தி நீதி அமைச்சுக்கு முன்னால்

>> 25

# சிறை வைத்தியசாலையில் அரசியல் கைதிகள் சேர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவரும், பலவந்தமாகச் சிறைச்சாலை மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் 4ஆண்டுகளாக நடைபெற்ற வழக்கை அநுராதபுரம் நீதிமன்றுக்கு இடமாற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த மாதம் 25ஆம் திகதி, தமிழ் அரசியல் கைதிகளான ம.சுலக்சன், க.தர்சன், இ.திருவருள் மூவரும் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

>> 25

# 2 கிலோ கேரளக் கஞ்சா வவுனியாவில் நேற்று மீட்பு

*யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது*

>> 25

# சிங்கள, பௌத்த அடையாளத்தை பாதுகாப்பதே அரசினது நோக்கம்

*இப்படிச் சொல்கிறார் அமைச்சர் சரத் பொன்சேகா*

கொழும்பு, ஒக். 23

சிங்கள, பௌத்த அடையாளத்தை தக்கவைத்து, ஒற்றையாட்சியைப் பாதுகாப்பது அரசின் நோக்கம். எனவே புதிய அரசமைப்புக்குச் சிங்கள மக்கள் ஆதரவளிக்கவேண்டும். இவ்வாறு அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை முற்றாக ஒழிக்கும் வகையிலும், தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்காகவும் புதிய அரசமைப்பு உருவாக வேண்டும் என்று சோபித தேரர் உள்ளிட்டவர்கள் அன்று வலியுறுத்தினர். அதை அரசு செய்ய வேண்டும்.

புதிய அரசமைப்புக்கு

>> 25

# சுமந்திரன், அடைக்கலநாதன் அரசின் சூழ்ச்சிக்குத் துணை

*சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு*

வவுனியா, ஒக்.23

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், செல்வம் அடைக்கல நாதன் போன்றவர்கள் தமிழ் பிரதேசங்களை சிங்களப் பிரதேசமாக்கும் அரசின் சூழ்ச்சிக்குத் துணைபோகின்றனர். நேற்று நடைபெற்ற அரச தலைவருடைய நிகழ்வில் அவர்கள்

>> 25

# குளத்திலிருந்து இளைஞர் சடலமாக மீட்பு

வவுனியா, ஒக்.23

வ்வுனியா, கல்மடுக் குளத்தில் இருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். குளத்துக்கு குளிக்கச் சென்றே அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. வவுனியா ஈச்சங்குளம், மறவன்குளம் பகுதியைச் சேர்ந்த நடராசா சந்தனகுமார் (வயது-36) என்பவரே உயிரிழந்தவராவார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்மடுக் குளத்துக்குக் குளிக்கச் சென்ற மற்றுமொருவரால்

>> 25

# மைத்திரியின் செயல் அரசியல் கைதிகளின் சிக்கலை நீர்த்துப்போகச் செய்யும் முயற்சி

## பொது அமைப்புக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 23

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 35க்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து பெரிய போராட்டங்களை முன்னெடுத்திருந்தும்கூட, அவர்கள் சார்ந்த பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு மாறாக ஏனைய சிலரை அழைத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பேசியதானது அரசியல் கைதிகளின் பிரச்சினையைத் திசை திருப்பும் மற்றும் நீர்த்துப்போகச் செய்யும் முயற்சியேயாகும்.

இவ்வாறு பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து விடுத்துள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

14 தரப்புக்கள் இணைந்து கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள அந்த ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

எமது போராட்டங்களே, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் சபை ஒத்திவைப்புப்

>> 25




# உதயனின் ஏற்பாட்டில் "மகிழ்களம் 2017"










தென்மராட்சி, ஒக்.23

"உதயன்" குழுமத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிப்பிரதேசமுன்பள்ளிச்சிறார்களுக்கான "மகிழ்களம் 2017" நிகழ்வுகள் நேற்று சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் 85 முன்பள்ளிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

முன்பள்ளிச் சிறார்களின் இசையும், அசைவும் மற்றும் முன்பள்ளி ஆசிரியைகளின் இசையும் அசைவும் நிகழ்வுகளுடன் 20 முன்பள்ளிகளின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

தேசிய நிலைத் தடகளப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் பொன்னாடை போர்த்தி, பரிசில்கள் வழங்கி மதிப்புறுத்தப்பட்டனர். அனைத்து முன்பள்ளிச் சிறுவர்களுக்கும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

"உதயன்" குழுமத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் "உதயன்" நிர்வாக இயக்குநர் திருமதி யசோதை சரவணபவன், யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண கல்வித் திணைக்கள ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உதவித் தவிசாளர் கு.சதாசிவமூர்த்தி, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஓய்வுநிலைப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீ.விமலேஸ்வரி, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர். ந.சிவபாலன், தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

# கௌரவமற்ற முறையில் செயற்படுகின்றது அரசு

## சிரிவிமல தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.23

தற்போதைய அரசு மகா சங்கத்தினருடன் கௌரவமற்ற முறையில் நடந்துகொள்கின்றது. வரலாறு முழுவதிலும் நாடு செல்ல வேண்டிய பாதையைச் சரிசெய்து கொடுத்தது மகா சங்கத்தினரே இவ்வாறு கெப்படியா கொட சிரிவிமல தேரர் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுத் தேரரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெறச் சென்ற போதே தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

இருந்த கருமம் போதாது என்று மக்கள் இன்னொரு கருமமாக இந்த அரசைத் தேர்ந்தெடுத்தனர், தற்பொழுது தேர்ந்தெடுத்த அரசு இருந்த அரசை விட மோசமாகவுள்ளது.

தற்போதைய அரசு ஏதாவதொரு சூத்திரத்தை வைத்து தேர்தலைப் பிற்போட்டு வருகின்றது. மக்கள் தற்பொழுது மாட்டியுள்ள அரசிலிருந்து விடுபடுவதற்கு சந்தர்ப்பத்தைப் பார்த்துள்ளனர். நாட்டின் தலைவர்கள் யார் யாரோ பின்னால் சென்று அதிகாரத்தைப் பெற்றுக்கொள்கின்றனர்.

அவர்கள் அது தங்களுக்கு புண்ணியத்துக்காக கிடைத்த ஒன்று என்று நினைப்பதில்லை. இத்தகையவர்கள், ஒரு புறத்தில் வங்கியை நாசமாக்குகின்றனர். மறுபுறம் கல்வியையும் நாசமாக்கும் வரை பார்த்துள்ளனர் - என்றார். (ந.ரி4)

# புதையல் அகழ்வில் ஈடுபட்ட 5 பேர் கைது

மட்டக்களப்பு,ஒக்.23

புதையல் அகழ்வில் ஈடுபட்ட பெண் உட்பட 5 பேரை ஏறாவூர் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து புதையல் அகழ்வுக்குக் கொண்டு சென்ற உபகரணங்கள் மீட்கப்பட்டன.

மொனராகலை பிரதேசத்தை சேர்ந்த இவர்கள் நேற்று மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர் எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# வீடு திரும்பத் தாமதித்த பெற்றோர்: மகன் செய்த அதிர்ச்சிகர சம்பவம்

கண்டி, ஒக்.23

பேருவளை காலவில பிரதேசத்தில் தனது வீட்டுக்கு இளைஞன் ஒருவன் நேற்றுத் தீ வைத்துள்ளான்.

20 வயதுடைய குறித்த இளைஞரை தனிமையில் விட்டு, பெற்றோர் பயணம் ஒன்றை மேற்கொண்டனர். பெற்றோர் வீடு திரும்புவதற்கு தாமதமாகியதால், கோபமடைந்த இளைஞன் வீட்டுக்குத் தீ வைத்துள்ளான் எனத் கூறப்படுகிறது. வீட்டில் இருந்த கடதாசிகளை இணைத்து வீட்டுக்கு தீவைத்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மற்றும் அளுத்கம தீயணைப்பு பிரிவும் விரைந்து தீயணைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சம்பவம் குறித்து அளுத்கமப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி5)



## இயந்திரம் மூலம் நாற்று நட்டு நஞ்சற்ற நாடாக மாற்றுவோம்

### விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

இரசாயனப் பசளைகளுடன் சேதனப் பசளைகளையும், வேளாண்மைச் செய்கைக்கு இடுவதன் மூலம் உச்ச விளைச்சலைப் பெறலாம் என்பதை வெல்லாவெளிப் பிரதேச விவசாயிகள் நிரூபித்துள்ளார்கள்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு செல்வாபுரம் கிராமத்தில் 14 ஏக்கரில் இயந்திரம் மூலம் நெல் நாற்று நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தெரிவித்ததாவது:

வேளாண்மைச் செய்கையில் நவீன தொழில் நுட்பமும் அதற்குரிய பசளைப் பிரயோகத்தையும், சிறந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றமை வரவேற்கத்தக்கதும், பாராட்டத்தக்கதுமாகும்.

இயந்திரம் மூலம் நடுகை செய்தால் அடுத்து வரும் சிறுபோகத்தில் விவசாயிகளின் வளர்ச்சியும், வருமானமும் அதிகரிக்கும். எதிர்வரும் சிறுபோகத்தில் இயந்திரம் மூலம் நாற்று நட்டு வேளாண்மைச் செய்கையில் ஈடுபட முன்வரும் அனைத்து விவசாயிகளுக்கும் தலா இரண்டு ஏக்கருக்கு அரைவாசி மானிய அடிப்படையில் விதைநெல் வழங்கப்படும்.

இந்தச் செய்கையின் மூலம் பயிரின் செறிவு, நோய்த்தாக்கங்கள் இன்மை, களைகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற பலவற்றுக்குரிய செலவுகளும் மிகக்குறைவாகத்தான் தேவைப்படும்.

இயந்திரம் மூலம் நெல்நாற்று நட்டு வேளாண்மை செய்கையில் ஈடுபட்டால் எதிர்காலத்தில் நஞ்சற்ற நாட்டைக் கட்டியெழுப்பலாம் - என்றார்.

விவசாயப் போதனாசிரியர் எஸ்.சசிகுமாரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு தெற்கு உதவி விவசாயப் பணிப்பாளர் எம்.சிவஞானம், பெரும்பாக உத்தியோகத்தர் கே.உதயகுமார் மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(ற-ரி5)

# சிறையில் இருக்கும் கவிஞர் சதீஸின் நூல்கள் வெளியீடு

### அரசியல் கைதிகள் விடுவிப்பை வலியுறுத்தி நிகழ்வு முடிவில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி எழுத்தாளர்களின் ஏற்பாட்டில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சதீஸ் என்பவரின் "விடியலைத் தேடும் இரவுகள்", "சிறையிலிருந்து சிங்கள சகோதரனுக்கு" என்னும் நூல்களின் வெளியீடு நேற்று நடைபெற்றது. இலங்கைவேந்தன் மண்டபத்தில் எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வை எழுகலை இலக்கியப் பேரவை ஏற்பாடு செய்திருந்தது.

நூலை சிறையிலிருக்கும் கவிஞர் விவேகானந்தனூர் சதீஸ் அவர்களின் தாயார் மகேஸ்வரி வெளியிட்டு வைக்க யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி பெற்றுக்கொண்டார்.





நிகழ்வில் இலக்கியவாதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

வெளியீட்டு நிகழ்வின் இறுதியில் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. நிகழ்வு மண்டபத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ற-101.106)

## கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் கைதான இருவருக்குப் பிணை

காங்கேசன்துறை,ஒக்.23

கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட இருவரை மல்லாகம் நீதிமன்றம் பிணையில் வெளியேசெல்ல அனுமதித்தது. எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

காங்கேசன்துறை கட்டுவன் பகுதியில் வைத்து இருவர் நேற்று கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டனர்.

17 மற்றும் 19 வயதுடைய இரு இளைஞர்களே நேற்று கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற் படுத்தப்பட்ட போதே இவ்வாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார்.

(ரி2, 26)

## ஐந்திலுள்ள அக்கறை உயர்தரத்தில் இல்லை

### யாழ். பல்கலைதுணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்பாணம் ஒக்23

தரம் 5 இருக்கும் அக்கறை சாதாரண தரம் உயர்தரம், ஆகியவற்றில் மாணவரும் சரி பெற்றோரும் சரி கவனம் எடுப்பதிலை. அதனாலேயே யாழ்ப்பாணம் கல்வியில் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இவ்வாறு யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை மதிப்புறுத்தும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

அன்பொளி கல்வியகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணம் கல்வியில் முன்னிலை பெற்றிருந்தது. தற்போது கல்வியின் தரம் பின் தங்கியுள்ளது.

மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யும் வீதமும் குறைவாகவே காணப்படுகின்றது.

பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் பெற்றோர்கள் கரிசனையுடன் அயராது உழைக்கவேண்டும்.- என்றார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முக குமாரும் கௌரவ விருந்தினராக சாரங்கா நகைமாட உரிமையாளர் திரு.சிவபாஸ்கரனும் அவரது பாரியாரும் கலந்து கொண்டனர்.

(ற)

## குற்றச் செயல்களைத் தடுக்கும் பிரிவினரால் வட மாகாணசபை உறுப்பினருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.23

வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களைத் தடுக்கும் பிரிவினரால் நேற்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த வடக்கு மாகாண சபை உறுப்பினரை 23 ஆம் திகதி முன்னிலையாகுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

தனக்கு நேரம் இல்லையாதலால் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு தான் முன்னிலையாவதாகவும் அவர் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டது.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்ய செவ்வி தொடர்பில் பௌத்த தேரர் ஒருவர் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார் எனக் கூறப்படு கிறது. இது தொடர்பிலேயே அவரை முன்னிலை யாகுமாறு கூறப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி2.26)

## துன்னாலையில் இளைஞன் கைது

வடமராட்சி, ஒக்.23

துன்னாலை வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மேலும் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். எனத் தெரிவிக்கப்படுகிறது.

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டார்.

இந்த இளைஞன் துன்னாலைப் பகுதியில் வைத்து நேற்றுக் காலை நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி2, 26)

உங்கள்
பிரதேசங்களில்
நடக்கும்
நிகழ்வுகளை
உலகறியச் செய்ய
எமக்கு அனுப்புங்கள்



உதயன்
DIGITAL
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555

## தடைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும். இவ்வாறு அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சி மாற்றத்தின் பின்னர் இரண்டு ஆண்டுகளில் நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்தப் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளோம். முக்கியமானது, புதிய அரசமைப்பு உருவாக்கமாகும். நாட்டின் நீண்டகாலப் பிரச்சினைக்கு நிரந்த தீர்வு பெற்றுக் கொடுக்கவேண்டும் என்றால் நடைமுறையில் உள்ள துருப்பிடித்த அரசமைப்பை மாற்றியமைக்க வேண்டும்.

இலங்கையின் மூவின மக்களுக்கு ஏற்ற, அனைவரையும் அங்கீகரிக்கும், சம உரிமைகளை உறுதிப்படுத்தும், அதிகாரங்களைப் பகிர்ந்து நாட்டைப் பலப்படுத்தும் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

நாட்டின் அபிவிருத்தியில் சகல மக்களினதும் முழுப் பங்களிப்பும் அவசியம். அனைவரும் இணைந்து நாட்டினைக் கட்டியெழுப்ப வேண்டும். அதனைக் கருத்தில் கொண்டே நாம் அரசமைப்பினை உருவாக்க நினைக்கின்றோம். அதற்கான மக்கள் ஆதரவும் எமக்கு உள்ளது.

இந்தச் செயற்பாடுகளைத் தடுக்கவெனச் சில தீய சக்திகள் செயற்பட்டு வருகின்றன. மீண்டும் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தவும் மக்களால் தோற்கடிக்கப்பட்ட நபர்கள் மக்களைப் பழிவாங்கவும் முயற்சித்து வருகின்றனர்.

அதற்காகவே பௌத்த சிங்கள இனவாதத்தைக் கையில் எடுத்துகொண்டு வடக்கின் சில இனவாத சக்திகளை சரியாகப் பயன்படுத்திக்கொண்டு செயற்பட்டு வருகின்றனர். மகாநாயக்க தேரர்களையும் குழப்பி அவர்கள் மத்தியில் தவறான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

யார் எவ்வாறு செயற்பட்டாலும் தீய சக்திகள் எவ்வாறு தடைகளை ஏற்படுத்த முயற்சித்தாலும் புதிய அரசமைப்பை உருவாக்கும் பயணத்தை நாம் நிறுத்திக் கொள்ளப்போவதில்லை. புதிய அரசமைப்பு சரியான நேரத்தில் உருவாக்கப்படும்.

மக்கள் ஆதரவுடன் நாம் நாட்டின் தீர்வை உறுதிப்படுத்தும் புதிய அரசமைப்பை உருவாக்குவோம். புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதில் மட்டுமே நாட்டின் சகல பிரச்சினைகளினதும் தீர்வு தங்கியுள்ளது - என்றார். (உ-5,31)

## அரசமைப்புக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு உள்ளாக்கும் வகையிலும் கருத்துக்களை வெளியிடுகின்றன. நாட்டின் நல்லிணக்கத்தைச் சிதைவடையச் செய்யும் நடவடிக்கைகளை ஊடகங்கள் முன்னெடுக்கின்றன.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கும் நிகழ்வும் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாடுகளில் இடர்கள், அது தொடர்பான வேலைத் திட்டங்களுக்கே ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்கும். ஆனால் எமது நாட்டில், அரசமைப்புத் தொடர்பில் அதிகளவு முக்கியத்துவத்தை ஊடகங்கள் கொடுக்கின்றன.

உருவாக்கப்படாத அரசமைப்புக் குறித்துப் பொய்யான கருத்துக்களைப் பரப்பவேண்டாம். அரசமைப்பின் ஆரம்ப நடவடிக்கையேனும் முன்னெடுக்காத நிலையில் இல்லாத அரசமைப்பு உருவாக்கப்பட்டதாகவும் அது மோசமான ஒன்றாகவும் விமர்சித்து வருகின்றனர். அரசமைப்புக் குறித்துக் கருத்துக்கள் முன்வைக்க வேண்டிய அவசியம் இல்லை.

நாட்டுக்குப் பொருத்தமான, பொருளாதரத்தைக் கட்டியெழுப்பக்கூடிய, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான அரசமைப்பை உருவாக்குவது குறித்தே நாடாளுமன்றத்தில் கலந்தாலோசித்து அதில் உள்ள முரண்பாடுகளை ஆராய்ந்து தீர்மானம் எடுத்து வருகின்றோம்.

புதிய அரசமைப்புக் குறித்து தத்தமது கட்சிகளின் கருத்துக்களை முன்வைத்து விவாதம் செய்யவும் நாம் சகல அரசியல் கட்சிகளுக்கும் வாய்ப்புகளை வழங்கியுள்ளோம். இதனைச் சரியான வாய்ப்பாகப் பயன்படுத்தி கட்சிகளும் தமது நிலைப்பாடுகளை முன்வைக்கவேண்டும்.

நாம் அரசமைப்பை உருவாக்கும் போது அது குறித்த சரியான தெளிவைப் பெற்றுக்கொண்டு அதன் பின்னர் அரசமைப்புக் குறித்து விமர்சனங்களை முன்வையுங்கள். இப்போது அதற்கான காலம் இதுவல்ல. சகலரும் தமது நிலைப்பாடுகளை, காரணிகளை, ஆலோசனைகளை, பிரேரணைகளை முன்வைக்க சரியான காலம் கிடைக்கும். அனைவரதும் இணக்கத்தில் பொதுவான ஒரு அரசமைப்பு உருவாக்க முடியும்.

நாம் அரசமைப்புக் குறித்து நிலைபாட்டினை முன்வைத்த பின்னர் அதில் முரண்பாடுகள் இருக்குமாயின் அவற்றை வைத்துக்கொண்டு எம்மீதான விமர்சனங்களை முன்வையுங்கள். உருவாக்கப்படாத ஒரு விடயம் குறித்துப் பொய்யான தகவல்களின் பிரகாரம் அரசைக் குழப்பும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம். மக்களை ஒன்றிணைக்க வேண்டியதும் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய பல வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும். நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. மக்களின் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு அவற்றைச் சரிசெய்யவேண்டும். அவ்வாறு இருக்கையில் தேவையற்ற கருத்துக்களை முன்வைத்து மக்களைக் குழப்பும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் - என்றார். (உ-5,31)

# சாட்சியை அச்சுறுத்தும் கலாசாரம் வரலாற்றில் எப்போதுமில்லையாம்

### இப்போதுதான் முளைத்திருப்பதாகக் கூறுகிறார் பந்துல குணவர்தன

கொழும்பு, ஒக். 23

நிதி மோசடிகளை அம்பலப்படுத்துபவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படுவது அவர்கள் தாக்கப்படுவது போன்ற சம்பவங்கள், இலங்கை அரசியல் வரலாற்றில் இப்போதுதான் நடக்கின்றது. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிணைமுறி மோசடியில் சாட்சியமளித்தவர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். சாட்சியமளிப்பவர்கள் மட்டுமன்றி ஜூரிமார்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படும் சாக்கடை அரசியலே நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

மத்திய வங்கி நிதி மோசடிகளினால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. எனது கணிப்பீட்டின் பிரகாரம் 16 பில்லியன் ரூபாவுக்கு மேல் இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

ஆணைக்குழுவில் வழங்கப்பட்ட சாட்சியங்களின் மூலமாக மத்திய வங்கிக்கு ஏற்பட்ட பெரிய பொருளாதார பின்னடைவு அம்பலமாகியுள்ளது. நாட்டினதும் மத்திய வங்கியினதும் மீது உலக நாடுகள் வைத்திருந்த நம்பிக்கை வீண்போய்விட்டது. நாட்டுக்கு அபகீர்த்தியும் ஏற்பட்டுள்ளது.

ரவி கருணாநாயக்கவின் விடயத்தில் ஆணைக்குழு முன்பாக தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க முன்னிலையாகி சாட்சியமளிப்பாரென கூறியிருந்தார். சாட்சியமளிக்கும் பெயர்ப் பட்டியலில் அவரது பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் கால எல்லை நிறைவுறுவதனால் தலைமை அமைச்சரின் சாட்சியமானது எவ்வாறு பதிவாகும். அதற்கான சாத்தியம் எவ்வாறுள்ளது?

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிதி நிறுவனங்களில் இடம்பெற்ற இவ்வாறான மோசடிவிவகாரம் தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி ஆரம்பந்தொட்டு தொடர்ச்சியாக உண்மைகளை வெளிப்படுத்தி நாட்டுக்குத் தெரியப்படுத்தி வந்தோம்.

உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு மத்திய வங்கியில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பிலான ஆதாரபூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பித்து வெளிப்படுத்தியதும் நாமே. முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை பாதுகாக்க அரசு பலதடவைகள் முயற்சித்தமையையிட்டு நாம் பகிரங்கமாக அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவித்து வந்தோம்.

ரவி கருணாநாயக்க அமைச்சராகப் பதவி வகிக்கையில், அவருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது அவர் மீது விமர்சனங்களை முன்வைத்த நபர்களை தமது ஆதரவாளர்களைக் கொண்டு அவர் தாக்கவும் செய்தார். இவர்கள் போன்றோர் மக்கள் பிரதிநிதிகளா? லிட்றோ சமையல் எரிவாயு நிறுவனம், தேசிய லொத்தர் சபை போன்றன ரவி கருணாநாயக்கவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தவை. நான் தேசிய லொத்தர் சபையில் நிதி மோசடி செய்ததாக என் மீது அபாண்டமான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

தேசிய லொத்தர் சபையில் இடம்பெற்ற சம்பவம் குறித்து நான் உண்மை நிலையை வெளிப்படுத்தியவன். இறுதியில் என் மீதல்லவா பொய்க் குற்றம் சுமத்தினார்கள். இது குறித்து சபாநாயகரிடம் தொடர்ச்சியாக நான் கோரிக்கைகளை முன்வைத்து வந்தேன்.

கட்சியின் பொறுப்பு வாய்ந்த உறுப்பினராகவும் முக்கிய அமைச்சுப் பதவிகளை அலங்கரித்தவருமான ரவி கருணாநாயக்கவின் நிதி மோசடி விடயத்தை அம்பலப்படுத்துபவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படு மானால் இங்கு சட்ட ஒழுங்கு எங்குள்ளது என்று யோசிக்கத் தூண்டுகிறது. இது விடயத்தில் அரச தலைவர் உடனடியாக தலையிட்டு சாட்சியமளிப்பவர்கள் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (5,31)

# சாட்சிக்கு அச்சுறுத்தல் பொலிஸ் பாதுகாப்பு வழங்கத் தீர்மானம்

கொழும்பு, ஒக். 23

பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக்குழுவில் முன்னிலையாகிச் சாட்சி வழங்கிய பின்னர் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு நாட்டில் இருந்து வெளியேறியுள்ள அனிகா விஜேசூரியவின் சகோதரர் உட்பட குடும்ப உறுப்பினர்களுக்கு சிறப்புப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிணைமுறி விசாரணைகளின் போது அனிகா விஜேசூரிய முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் சொகுசு வீடு வாடகை கொள்வனவு தொடர்பில் பல திடுக்கிடும் விடயங்களை தெரிவித்திருந்தார். அந்த வீடு தன்னுடையது என்றும் வீட்டின் பரப்பு நீதிமன்றில் பிழையாக காட்டப்பட்டிருப்பதாகவும் சாட்சியமளித்திருந்தார்.

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பதவி பறிபோன பின்னர் அனிகா விஜேசூரியவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்ததாக பிணைமுறி தொடர்பில் விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக்குழுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கொலை மிரட்டல் காரணமாகவே அவர் நாட்டை விட்டுச் சென்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவரது குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று அரச தலைவர் ஆணைக்குழு கேட்டுக்கொண்டதற்கிணங்க நேற்று முதல் அவரின் வீட்டுக்கு சிறப்புப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5,31)

## விபத்தால் சிக்கிய கஞ்சா

கொழும்பு, ஒக். 23

அவிசாவளை - கொழும்பு பிரதான வீதியின் கொஸ்கம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் முன்னாள் பிரதியமைச்சர் கீதான்ஜன குணவர்தன காயமடைந்த நிலையில் அவிசாவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். குணவர்தனவின் காருடன் மோதிய காரை பொலிஸார் சோதனையிட்டபோது அதிலிருந்து 4 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கொஸ்கம பிரதேசத்தில் இரவு 10.30 மணியளவில் முன்னாள் பிரதியமைச்சர் அவிசாவளைப் பிரதேசத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கார், கொழும்பில் இருந்து அவிசாவளையை நோக்கிப் பயணித்த மற்றுமொரு காருடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

பிரதியமைச்சரின் காருடன் மோதிய மற்றைய காரை பொலிஸார் சோதனையிடும் போது, அதிலிருந்து 4 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது. சம்பவம் தொடர்பில் காரில் பயணித்த 28 மற்றும் 31 வயதான இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் மாளிகாவத்தை மற்றும் தல்துவப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். (5,31)



## பொகவந்தலாவயில் குழு மோதல் 2பேர் கைது 7பேருக்கு வலை வீச்சு

கொழும்பு, ஒக். 23

பொகவந்தலாவ டியன்சின் நகரப் பகுதியில் இரண்டு குழுக்களிடையே கடும் மோதல் ஏற்பட்டதால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

மோதலில் படுகாயமடைந்த இருவர் பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய 9பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய ஏழு பேரும் தலைமறைவாகியுள்ளனர். அவரைகளைத் தேடிப் பொலிஸார் சிறப்புத் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

பொகவந்தலாவையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விருந்து உபசாரமொன்றின்போது இரண்டு குழுவினரும் மது போதையில் இருந்த நிலையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அதன்பின்னர் கைகலப்பு ஏற்பட்டு அது பெரும் மோதலாக மாறியுள்ளது. இதையடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இவ்விரு குழுக்களும் தங்களை 'கேங் ஸ்டார்' என்று அடையாளப்படுத்திக் கொண்டே தொடர்ச்சியாக செயற்பட்டு வந்துள்ளனர். இதற்கு முன்னரும் இவ்வாறு மோதிக்கொண்டுள்ளனர் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5)

# கஞ்சா வைத்திருந்த இருவருக்கு ஒத்திவைத்த சிறைத் தண்டனை

*80 மணித்தியால சமூகப் பணிக்கும் உத்தரவு*

சாவகச்சேரி, ஒக்.23
கஞ்சா வைத்திருந்த இருவருக்கு தலா 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடச் சிறைத் தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளித்தது சாவகச்சேரி நீதிமன்று. அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்று 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபட வேண்டும் என்றும், குடிவெறுப்பு நிலையத்தில் சிகிச்சை பெற வேண்டும் என்றும் உத்தரவிட்டது.
உடைமையில் கஞ்சா வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட் டில் பொலிஸார் தாக்கல் செய்திருந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணைகளை அடுத்து ஒத்திவைத்த சிறைத் தண்டனை விதித்த நீதிமன்று 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவில் அவர்களை ஒப்படைக்க வேண்டும் என்றும், மேலும் குற்றவாளிகள் குடிவெறுப்பு நிலையத்தில் சிகிச்சை பெற வேண்டும் என்று உத்தரவிட்டதுடன், தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதித்தது. (ற-9)

# நாற்று விற்பனை செய்வோர் பதிவு செய்திருத்தல் அவசியம்

## விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை நிலயப் பொறுப்பதிகாரி அறிவுறுத்து

அச்சுவேலி, ஒக். 23
விதை உற்பத்தியாளர், நாற்று விற்பனை யில் ஈடுபடுவோர், பழ மரக்கன்று உற்பத்தி விற்பனையில் ஈடுபடுவோர் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை நிலையத்தில் பதிவு செய்து பதிவு இலக்கத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.
பதிவு செய்யாமல் தொழில் முயற்சியில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பதிவுகளை கோப்பாய் பூதர்மடத்தில் உள்ள விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை நிலையத்தில் மேற்கொள்ளலாம்.
இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ரமணதரன் அறிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை மூலம் நெல் உட்பட்ட சகல பயிர் வகை இனங்களின் விதைகளும் அத்தாட்சிப்படுத்தி வழங்கப்படுகின்றன. விதை அத்தாட்சிப்படுத்தல் மூலம் எமது பிரதேச பயிர்ச் செய்கைக்கு ஏற்ற பயிர் இனங்களை தெரிவு செய்வதுடன் முளை திறன் வீதத்தை அதிகரித்து விளைச்சலையும் அதிகரிக்கலாம்.
விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வோர், பயிர் நாற்றுக்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வோர், பழப்பயிர் நாற்றுக்களை உற்பத்தி செய்வோர் தவறாமல் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை நிலையத்தில் பதிவு செய்து கொள்வதோடு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பழப்பயிர் இனங்கள் தொடர்பான அத்தாட்சிப் படுத்தல் சுட்டிகளை பழப்பயிர் நாற்றுக்களில் ஒட்டிக் கொள்ளலாம். யாழ்ப்பாண மாவட்டத்தில் 56 பேர் உரிய முறையில் பதிவு செய்து தமது தொழில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.
பதிவு செய்யாமல் தொழில் முயற்சியில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மாரி மழையை அடுத்து பழமர நடுகையில் மக்கள் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகின்றனர். மா மரக்கன்றுகள் போன்ற பழ மரக்கன்றுகளில் அத்தாட்சிப் படுத்தல் தொடர்பான சுட்டிகள் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை பார்வையிட்டு கொள்வனவு செய்ய வேண்டும். என்றார். (ற-11)

# மரம் நடுகை



தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கோயிற்குடியிருப்புக் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கடலேரிக் கரையோரத்தில் சவுக்கு மரக்கன்றுகள் நடப்பட்டன. காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் கரையோரப் பிரதேச வளமிழந்த நிலத்தை 'மரம் நடுகை செய்யும் திட்டத்தின் கீழ்' 200க்கு மேற்பட்ட சவுக்கு மரக்கன்றுகள் நடப்பட்டன. (21-9)

# அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கை தென்மராட்சியில்

தென்மராட்சி, ஒக்.21
அனைவரும் தேசிய அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும் என்ற அரசின் அறிவிப்பை அடுத்து தென்மராட்சிப் பிரதேச செயலக தேசிய அடையாள அட்டைப் பிரிவு கிராம அலுவலர் பிரிவுகளில் அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.
பிரதேசத்தை 6 வலயங்களாகப் பிரித்து அங்குள்ள பொது இடங்களில் அடையாள அட்டைக்கான பதிவுகள், படம்பிடித்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
பிறப்புச் சான்றிதழ் இல்லாததால் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாதவர்களின் விவரங்கள் பெறப்பட்டு உரிய திணைக்களத்துடன் தொடர்புகொண்டு தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதேச செயலர் திருமதி தே.பாபு தெரிவித்தார்.
தேசிய அடையாள அட்டைக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்களும், அடையாள அட்டையைத் தொலைத்தவர்களும், திருமணச் சான்றிதழ் இன்மையால் கணவரின் பெயருடன் அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாதிருக்கும் பெண்களும் பின்வரும் இடங்களில் வந்து சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்படடுள்ளது.
இன்று திங்கட்கிழமை கச்சாய் அம்மன் கோயிலடியில் வெள்ளாம்போக்கட்டி, கச்சாய், பாலாவி, விடத்தற்பளை, கெற்பேலி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும், நாளை செவ்வாய்க்கிழமை கொடிகாமம் பிரதேச சபை மண்டபத்தில் கொடிகாமம் வடக்கு, மத்தி, தெற்கு ஆகிய பிரிவு மக்களுக்கும், மிருசுவில் தேவாலய மண்டபத்தில் உசன், கரம்பகம், எழுதுமட்டுவாழ் தெற்கு, வடக்கு, மிருசுவில் வடக்கு, தெற்கு பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும், எதிர்வரும் வியாழக்கிழமை 26 ஆம் திகதி வரணி கலாசார மண்டபத்தில் வரணி வடக்கு, வரணி, இயற்றாலை ஆகிய பிரிவுகளின் மக்களுக்கும் மந்துவில் பொதுநோக்கு மண்டபத்தில் தாவளை, இயற்றாலை, மந்துவில் வடக்கு ஆகிய பிரிவு மக்களுக்கும் சேவைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.23
பன்னாட்டு சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள் சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.
பாடசாலை அதிபர் ம். முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் 25 முதியோர்களுக்குத் தலா இரண்டாயிரம் ரூபாவும் ஜேர்மனியில் வசிக்கும்சோம.சிவகுல நாயகத்தின் 'பசுமை வழ்வுத்திட்டத்தின்' மூலம் வழங்கப்பட்டன.
நிகழ்வில் முதன்மை விருந்தி னராக சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் எம்.கலிஸ்ரஸ் கலந்து கொண்டார். (21)



யாழ்ப்பாணம் காரைநகர் இந்துக் கல்லூரியின் கல்விக் கண்காட்சி கடந்த 18ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.
கல்லூரி அதிபர் சிவந்தினி வாகீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் வலந்தலை வடக்கு அ.மி .த.பாடசாலை அதிபர் விமலாதேவி வில்வநாதன் கலந்துகொண்டார்.
மாணவர்களின் கல்வி சார்ந்த அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய இந்தக் கண்காட்சியில் அயல் பாடசாலை மாணவர்கள் ,ஆசியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர் . (21 -ரி)

*சி. க. கூ. ச. சமாசத்துக்கு*

# 1000 புதிய அங்கத்தவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவர்

## அதன் தலைவர் அருந்தவநாதன் தெரிவித்தார்

யாழ்ப்பாணம், ஒக்.23
யாழ்ப்பாண மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சங்கங்கள் ஊடாக ஆயிரம் இளையோர் மற்றும் மூத்த பிரஜைகளைப் புதிய அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது என்று சமாசத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட இயக்குநர் சபையின் தலைவரும் முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருமான வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.
சமாசத்தின் புதிய இயக்குநர் சபையின் கூட்டம் நேற்று சமாசத்தின் சபா மண்டபத்தில் தலைவர் வி.கே. அருந்தவநாதன் தலைமையில் கூடியது. இந்தக் கூட்டத்தில் சமாசம் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படுகின்ற திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டன. இதன் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இது தொடர்பில் மேலும் தெரிவித்த அருந்தவநாதன்; யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒவ்வொரு பிராந்தியங்கள் தோறும் இவ்வாறு அங்கத்தவர்கள் புதிதாக இணைக்கப்படுவர். அதனைவிட சமாசத்தில் மேலும் ஐம்பது சிக்கனக் கடன் வழங்கும் சங்கங்களைப் புதிதாக இணைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடந்த போர்க்காலச் சூழ்நிலையால் இது வரை செயற்படாமல் இருக்கும் ஐம்பது வரையிலான சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை மீளவும் சீரமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதைவிட அரச அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து சுமார் முப்பது மில்லியன் ரூபா சுழற்சி நிதிகளைப் பெற்று சங்கங்களின் தேவைக்குப் பயன்படுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். சமாசப் பணியாளர்களின் ஆளணித் திரட்டு விரைவாக மீளாய்வு செய்யவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது - என்றார். (21-17)

# மகோகனி மரப்பலகைகளை கொண்டு சென்ற சாரதி கைது

அனுமதிபத்திரம் இன்றி ஹப் ரக வாகனத்தில் மகோகனி மரப்பலகைகளைக் கொண்டு சென்ற வாகனத்தின் சாரதி ஒருவரைக் கைது செய்துள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. மானிப்பாய் வீதியில் இருந்து இளவாலைப் பகுதிக்குக் கொண்டு செல்ல முற்பட்ட போதே மரப்பலகைகள் மீட்கப்பட்டன. அவை 8ஆயிரத்து 500 ரூபா பெறுமதியானவை. சாரதிக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (21)



சுதுமலை தெற்குச் சாவற்கட்டு பகுதியைச் சேந்தவரும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய கந்தையா ஆனந்தவேல் என்பவருக்கு தேசமானிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. அவரின்சமூக சேவையைப் பாராட்டி இடர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் மனோ கனேசனால் இந்த விருது வழங்கப்பட்டது. (21-250)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 500 | 250 |
| கணவாய் | 800 | 600 | 300 | 1000 |
| பாரை | 600 | 500 | 500 | 500 |
| சுறா | 600 | 700 | 800 | – |
| சீலா | 400 | 400 | 300 | 400 |
| விளை | 600 | 400 | 450 | – |
| முரல் | 350 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 350 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 300 | – |
| ஓரா | 350 | 300 | 400 | 3– |
| திரளி | 250 | 200 | 250 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 160 | 100 |
| ஒட்டி | 200 | 200 | 300 | – |
| திருக்கை | 350 | 200 | 400 | 300 |
| மதனம் | 250 | 150 | 250 | – |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 150 | 200 | 400 | – |
| வாளை | 150 | 200 | 300 | – |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 60 | 90 | 80 | 60 |
| கத்தரி | 140 | 140 | 100 | 120 | 1260 |
| மரவள்ளி | 60 | 50 | 50 | 60 | 50 |
| பயிற்றை | 170 | 200 | 150 | 120 | 140 |
| பாகல் | 400 | 400 | 250 | 300 | 100 |
| க.கிழங்கு | 90 | 80 | 60 | 100 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 130 | 150 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 240 | 250 | 260 | 220 |
| பூசணி | 40 | 60 | 50 | 50 | 40 |
| தக்காளி | 200 | 200 | 160 | 180 | 180 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 80 | 60 |
| கீரை | 30 | 40 | 30 | 15 | 30 |
| பொன்னாங்கானி | 40 | 30 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 400 | 500 | 250 | 500 | 450 |
| புடோல் | 80 | 100 | 90 | 120 | 80 |
| கோவா | 140 | 100 | 120 | 140 | 140 |
| வெண்டி | 80 | 100 | 100 | 120 | 120 |
| போஞ்சி | 140 | 200 | 140 | 180 | 100 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 | 200 |
| தேங்காய் | 85 | 90 | 80 | 100 | 70 |
| உ.கிழங்கு | 100 | 110 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 240 | 250 | 300 | 150 | 240 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 15 |
| கறிமிளகாய் | 260 | 150 | 280 | 200 | 280 |
| கரட் | 100 | 160 | 90 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 240 | 200 | 400 | 120 | 360 |

### தென்மராட்சியின் பல பகுதிகளிலும்

# தென்னை, முருங்கைச் செய்கைகள் குரங்குகளால் கடுமையாகப் பாதிப்பு

### பிரதேச செயலர் சுட்டிக்காட்டினார்

யாழ்ப்பாணம், ஒக். 23
தென்மராட்சியில் முருங்கை, கடலைச் செய்கையை விவசாயிகள் கைவிடும் அவலம் நிகழ்கின்றது. இவற்றைப் பயிரிட முடியாதவாறு குரங்குகளின் கொடுமை அதிகமாகவுள்ளமையே இதற்குக் காரணம் என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே பிரதேசசெயலாளர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

தென்மராட்சியில் வசிக்கும் சாதாரண மக்கள் தொடக்கம் விவசாயி கள் வரைக்கும் முருங்கை மரங்களையோ அல்லது கடலைச் செய்கையையோ மேற்கொள்ளமுடியாத அளவுக்குக் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.

"திணைக்களத்தின் ஊடாக இந்த ஆண்டு 20 மில்லியன் ரூபா நிதி கிணறுகளைத் திருத்துவதற்காகக் கிடைத்துள்ளது. அறுவடைகளை உலர்த்துவதற்கென 3 மேடைகள் யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டு அமைக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரியில் இந்தப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. திணைக்களம் ஊடாக 15 புல் வெட்டும் இயந்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. தேனி வளர்ப்பில் இதுவரை 30 பேருக்கும், தேசிய உற்பத்தியின் கீழ் மேலும் 60 பேருக்கும் தேனிப்பெட்டிகள் விநியோகிக்கப்பட்டுள் ளன. அடுத்த ஆண்டில் ஆயிரம் பேருக்கு பலா, கொய்யா, யம்பு, நெல்லி உள்ளிட்ட மரங்களும் விநியோகிக்கப் படவுள்ளன.

இளம் விவசாயிகள் உருவாக்கத் திட்டத்தின்கீழ் 20 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. மாவட்ட விவசாயத்தின் 65 வீத நிலம் விதைப்பு முடிவடைந்துள்ளது" என்று யாழ்ப்பாண மாவட்ட நிலமை தொடர்பில் விவசாயத் திணைக்கள அதிகாரி கருத்துத் தெரிவித்தார்.

"தற்போது குடாநாட்டில் 13 குளங்களைத் திருத்தும் பணி இடம்பெறுகின்றது. அவற்றில் சிலவற்றில் அளவுக்கு அதிகமாக மண் அகழப்பட்டுள்ளது. குளங்களில் அளவுக்கு அதிகமாக மண் அகழ முடியாது. அவ்வாறு அகழ்ந்தால் உவர்நீர் ஊறிவிடும். குளம் எப்போதுமே விவசாயிகளுக்கானதே அன்றி உத்தியோகத்தர்களுக்கானது அல்ல. விவசாயிகளின் நலனே முக்கியம்" என்று கமநல சேவைத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

"அதிக மண்ணை எடுத்தால் மேலதிகமாக பெறப்படும் மண்ணின் கொடுப்பனவை நிறுத்துங்கள்" என் மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

"யாழ்ப்பாண விவசாயி களுக்குத் தற்போது புதிய திட்டம் கிடைத்துள் ளது. அவர்களுக்குப் புதிய காலபோக கடன் வழங்கி வருகின்றோம். முன்னர் வழங்கிய கடனை அறவீடும் செய்கின்றோம். புதிய பயிர்ச் செய்கை மேற்கொள்ள எண்ணும் எவரேனும் விவசாய சம்மேளனங்கள் ஊடாகத் தொடர்பு கொள்ள முடியும். அவ்வாறு விவசாயிகள் தொடர்பு கொண்டால் அவர்களுக்கான கடன் வசதி ஏற்பாடு செய்யப்படும். முன்னர் எடுத்த கடனைச் செலுத்தத் தவறிய விவசாயிகளுக்கு வங்கி இதுவரை வேறுகடன் வழங்குவது கிடையாது. ஆனால் இந்தமுறை முன்னர் ஓர் கடன் வழங்கியிருந்தாலும் அடுத்த கடனைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்புள்ளது" என்று கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கை வங்கி பிரதேச முகாமையாளர் தெரிவித்தார்.

"நாமும் காலபோக கடனை வழங்க தயாராகிவிட்டோம். அதேநேரம் தற்போது சோலர் கடன் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கி வருகின்றோம். இதற்கு 6 வீத வட்டியே அறவிடப்படுகிறது. இந்த ஆண்டு இதுவரைக்கும் 83 பேருக்கு 12.5 மில்லியன் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது" என்று மக்கள்வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.

"வங்கிகளில் பெறும் கடனை விவசாயிகள் மீளச் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த முடியாதவிட்த்து உடன் தொடர்பு கொண்டு மாற்று வழியை ஏற்படுத்த வேண்டுமே அன்றி ஓடி ஒழியக் கூடாது. இதனால் ஏனைய விவசாயிகளும் கடனைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலமை ஏற்படும்" என்று மத்திய வங்கி அதிகாரி தெரிவித்தார். (4-101)



*யாழ்ப்பாணம் அக்கரைக் கடற்கரையில் உள்ள சுற்றுலாத் தளத்தை அகற்றி, அதைச் சிறுவர் விளையாட்டுத் திடலாக மாற்றம் செய்யுமாறு கோரி 30 நாள்களையும் தாண்டி உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி. கா. செந்திவேல் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.* *(21-ரி)*

## அரசியல் கைதிகளின் விடயத்தில் பேரினவாத நிலைப்பாடு வேண்டாம்

யாழ்ப்பாணம், ஒக். 23
அரசியல் கைதிகளின் விடயத்தை ஆளும் வர்க்க பேரினவாத நிலைப்பாட்டில் இருந்து நோக்காது, சட்டம், நீதி, மனிதாபிமான அடிப்படையில் அணுகித் தீர்க்கப் படவேண்டும் என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கட்சியின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டதாவது:

தமது வழக்குகளை மீளவும் வவுனியா நீதி மன்றத்தில் விசாரிக்கக் கோரி அனுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 27 ஆம் திகதி முதல் மூன்று தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இது முற்றிலும் நியாயமானது. உயிராபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் அரசியல் கைதிகளை அரசும் அரச தலைவரும் பாதுகாக்க வேண்டும். அவர்களது உயிர்கள் பறிக்கப்படுவதை எந்தக் காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

சட்டபூர்வமாகவும், நியாயத்தின் அடிப்படையிலும், மனித உரிமைகளின் அடிப்படையிலும் இந்த மூன்றுதமிழ் அரசியல் கைதி களி னதும் உணவு ஒறுப்புப் போராட்டக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியது அவசியம்.

அரச தலைவர் வடக்குக்கு வரும்போது நியாயமாக நடந்துகொள்பவர் போன்று பேசிக்கொள்கின்றார். ஆனால், கொழும்பு திரும்பியதும் அரசாங்கத்துக்குள்ளும், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியிலும்இ ருக்கும் பேரினவாத கடும்போக்காளர்களுக்கு முகம்கொடுக்க முடியாது பின்வாங்கிக் கொள்கின்றார். இதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஒரு முக த்தையும், பேரினவாதிகளுக்கு வேறொரு முகத்தையும் காட்டவேண்டிய நிலையில் நிறைவேற்று அதிகாரமுள்ளவரான அரச தலைவர் இருந்து வருவதைக் காணமுடிகின்றது.

எனவே, அரசியல்கைதிகளின் விடயத்தில் சரியானதும் உறுதியானதுமான முடிவை மேற்கொண்டு, உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டும். அத்துடன், எமது கட்சி தனித்தும் ஏனைய அமைப்புகளுடன் இணைந்தும் அனைத்து அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பில் விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றது - என்றுள்ளது. (4)






## இது புதுசு

ஆண்களுக்கான புதிய வகை ரீ-சேட்கள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 950 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# சரணாலயம் என்று அபகரிப்பது பொதுமக்களின் காணிகளையே

## வனவளத் திணைக்களம் அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார் ரிஷாத்

யாழ்ப்பாணம், ஒக். 23

வடக்கு மாகாணத்தில் பொதுமக்களின் காணிகளை சரணாலயம் என்ற பெயரில் வனவளத் திணைக்களம் அபகரித்து வருகின்றது. இந்த நில அபகரிப்பை நிறுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் அரச தலைவர் முன்னிலையில் உரையாற்றுகையில் வலியுறுத்தினார்.

அரச தலைவர் நடமாடும் சேவையின் இறுதிநாள் நிகழ்வு வவுனியா சைவப் பிரகாச மகளீர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் பொதுமக்களின் காணிகளுக்குள் வனவள திணைக்களம் தமது எல்லைக் கற்களை நட்டு வருகின்றது. பறவைகள் சரணாலயம் இல்லாத இடங்களில் எல்லாம் புதிதாகப் பறவைகள் சரணாலயம் அமைத்து வருகின்றனர். இந்தக் காணி அபகரிப்பை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நாட்டில் இரண்டு முதன்மைக் கட்சிகளும் இணைந்து கூட்டு அரசை அமைத்து மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வருகின்றன. அரசு தேர்தலில் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகின்றது. வனவளத் திணைக்களத்திடம் இருக்கின்ற காணிகளை மக்களிடம் கையளிக்கின்ற நடவடிக்கையும் இடம்பெறவேண்டும். எமது பிரதேசத்தில் ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் நிலையில் வெளியில் இருந்து வரும் சில தலைவர்கள் மத இனவாதத்தை கக்கி ஒற்றுமையைக் குலைத்து வருகின்றார். இவ்வாறான ஒரு சில மதகுருக்கள் இனக் கலவரத்தை ஏற்படுத்த கடும் பிரயத்தனம் செய்து வருகின்றனர் என்றார்.

இதேவேளை இந்நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் வனவளத் திணைக்களம் அபகரித்துள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்க, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர். (4-8)

# அதிகாரிகள் கடமையைச் செய்திருந்தால் அரசியல்வாதிகளுக்கு இங்கு வேலையில்லை

## அரச தலைவர் வவுனியாவில் உரை

வவுனியா, ஒக். 23

வடக்கிலுள்ள அரச அதிகாரிகள் தத்தமது கடமைகளைச் சீராகச் செய்திருந்தால் காணி உறுதிகள் இல்லாதவர்களுக்கு இவை முன்னரே கிடைத்திருக்கும். அவ்வாறு செய்திருந்தால் நாங்கள் இங்கு வந்திருக்கவே தேவையில்லை.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரச அதிகாரிகள் முன்னிலையில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அரச தலைவர் நடமாடு சேவை வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அங்கு தனது உரையில் இந்த விடயத்தையும் அவர் சுட்டிக்காட்டிக் கடிந்துகொண்டார். அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

இங்குள்ள அரச அதிகாரிகளிடம் நான் ஒரு விடயத்தைக் கேட்கின்றேன், நான் கேட்பதை நினைத்து நீங்கள் என்மீது கோபம் கூட கொள்ளலாம்.

ஆனாலும் கேட்கின்றேன், இன்று வழங்கப்பட்ட மக்களுக்கான காணி உறுதிகளை நாங்கள் தான் இந்த நடமாடும் சேவை ஊடாக வழங்க வேண்டும் என்றில்லை. நீங்கள் அனைவரும் உங்கள் கடமைகளைச் சீராகச் செய்திருந்தால் நாங்கள் இங்கு வந்திருக்கத் தேவையில்லை. உங்களுக்கு (அரச அதிகாரிகளுக்கு) என்ன பிரச்சினை இருந்தாலும் பிரதேச செயலர் ஊடாக மாவட்டச் செயலருக்கு தெரியப்படுத்தலாம். ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவார்கள். அரச அதிகாரிகள் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றி வருகின்றீர்கள். ஆனாலும் உங்கள் கடமையை நேர்த்தியாக செய்யுங்கள் என்றார்.

அதுமட்டுமன்றி, "நீண்டகாலம் மழை இல்லாத காரணத்தால் வறட்சியும் எமது நாட்டு மக்களை வாட்டுகின்றது. இதனால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண மக்கள் போராலும் பாதிக்கப்பட்டவர்கள். அதிலும் வன்னி பிரதேசம் மாவட்ட மட்டத்திலும், பிரதேச மட்டங்களிலும் மிகவும் கஷ்டமான இடங்கள்.

பொதுவாக அரச அதிகாரிகளை வவுனியா மாவட்டத்துக்கு மாற்றினால் அவர்களை நாம் தண்டனைக்கு மாற்றி விட்டதாகவே கருதுகின்றனர். பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அவர்களும் அந்த மனோ நிலையிலேயே இருக்கின்றனர். அவ்வாறான கஷ்ட நிலையைப் போர் இடம்பெற்ற காலத்தில் ஓரளவு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இப்போதும் அதே மன நிலையில்தான் இருக்கின்றனர். ஏனைய மாகாணங்களில் இருக்கின்ற வசதி வாய்ப்புக்கள் அங்கு இல்லைதான்.

கடந்த காலத்தில் ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட விடயங்கள் பல இங்கு வழங்கப்படவில்லை. முன்பு எல்லா மாவட்டங்களுக்கும் சமமான அபிவிருத்திப் பணிகள் இருக்கவில்லை. இங்கு அதிபர், ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் மருத்துவமனைகளில் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது.

தற்போதைய அரசு, மேல் மாகாணத்தைப் போலவே வடக்கு மாகாணத்திலும் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்து வருகின்றது.

எனக்கு தேர்தலில் வடக்கு மக்களின் 77 வீதமான வாக்குகள் கிடைத்தன. நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றத்திலிருந்து மாகாண சபைகளுக்கு அதிக நிதி ஒதுக்கி வருகின்றோம்" என்று தனது உரையில் மைத்திரிபால மேலும் குறிப்பிட்டார். (4-8)

# புதிய அரசியல் திருத்தம் எப்போது வருகிறதோ அன்றே நாடு சுபீட்சமாகும்

## சுமந்திரன் எம்.பி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 23

இலங்கையில் அனைவரும் சம பிரஜைகளாக வாழக் கூடிய புதிய அரசியல் திருத்தம் எப்போது உருவாகின்றதோ அப்போதுதான் இந்த நாடு சுபீட்சம் அடையும் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அரச தலைவர் நடமாடும் சேவையின் நிறைவு நாள் நிகழ்வு வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதற்கான முயற்சியில் நாம் அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

இந்த நாட்டிலே ஒரு இன ஐக்கியம் ஏற்படவேண்டும் என்பதற்காக புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசியலமைப்பின் காலகட்டத்தில் இந்த நிகழ்வை நாம் முக்கியமான விடயமாகவே பார்க்கின்றோம்.

கூட்டரசு உருவாவதற்கு வடக்கு மாகாண மக்கள் அதிக பங்காற்றியுள்ளனர். இது அரசுக்கும், அனைவருக்கும் தெரியும். வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலேயே நாம் அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். ஏனைய மாகாணங்களை விட வடக்கு மாகாணகூட்டுஅரசுஉருவாக காரணமாக இருந்தாலும் கூட வடக்கின் முதன்மைக் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசின் பங்காளிக் கட்சியாக சேரவில்லை. ஆனால் அரசின் சில முற்போக்கான செயற்திட்டங்களுக்கு உதவி செய்து வருகின்றோம். இது தலைவர்களுக்கு மட்டுமன்றி அனைவருக்கும் தெரியும்.

இந்த நாட்டில் நிறைவானதொரு அரசியல்தீர்வுகிடைக்க வேண்டும். அது கிடைக்கும் வரைக்கும், எமது மக்களுக்கு அதிகாரங்கள் சரியான முறையிலே பகிர்ந்தளிக்கப்படும் வரைக்கும் நாங்கள் அரசியல் அதிகாரங்களைக் கையாளமாட்டோம் என்ற கொள்கையுடனேயே எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளோம் என்றார். (4-8)

# கூட்டரசு நீதி வழங்கும் என்று நம்பியே வடக்கில் போராட்டங்கள் தொடர்கின்றன

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

கூட்டரசு நீதியை வழங்கும் என்ற நம்பிக்கையிலேயே வடக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் போராட்டங்கள் அமைந்துள்ளனவே தவிர, அரசை எதிர்க்க வேண்டும் என்று போராட்டங்கள் இடம்பெறவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அரச தலைவர் நடமாடும் சேவையின் நிறைவுநாள் நிகழ்வு வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் கைதிகள் விடுதலை போன்றோரது விடயங்கள் தொடர்பாக வடக்கில் ஜனநாயக ரீதியான பல போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் போராட்டங்கள் அனைத்தும் இலங்கை அரசுக்கு எதிராகவோ அல்லது அரசதலைவரை எதிர்க்க வேண்டுமென்றோ இடம்பெறவில்லை. போராட்டத்துக்கும் அவர்களது கோரிக்கைக்கும் நீதியை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையிலேயே மக்கள் போராட்டங்களை நடாத்தி வருகின்றனர்.

போரால் பாதிக்கப்பட்ட எமது மாகாணத்துக்கு இவ்வாறான நிகழ்ச்சித் திட்டம் மிகவும் முக்கியமானதொன்று. மக்கள் போரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மனதில் இன்றுவரை போர் வடுக்கள் இருந்து கொண்டேதான் இருக்கின்றன. மக்களின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றாத நிலைமையே காணப்படுகின்றது.

மக்கள் தமது வாழ்வில் நடந்த துன்பங்களை மனதில் பதிந்துள்ளனர். ஆனாலும் அவர்கள் இன்றுவரை பல பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர்.

பல வருடங்களாகக் காணி உரிமம் இல்லாது வாழ்ந்த மக்களுக்கு அவர்களின் கோரிக்கைகள் கானல் நீராக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது அவர்களுக்கான காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இதனை நாம் வரவேற்கின்றோம். எதிர்காலத்திலும் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெறவேண்டும் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

முன்னைய காலத்தை போல களியாட்ட நிகழ்வுகளை நடத்தாது மக்களுக்கு சேவையை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களைத் தற்போதைய கூட்டரசு நிறைவேற்றி வருகின்றது. இந்தச் செயற்பாட்டை நாம் வரவேற்பதுடன் அரசுக்கு எமது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் இந்த நிகழ்ச்சித் திட்டம் பல்வேறு சேவையை வழங்கியுள்ளது. இந்தச் சேவையில் பணியாற்றிய அனைவருக்கும் மக்கள் பிரதிநிதிகள் சார்பில் நன்றியை கூறுவதுடன் தொடர்ந்தும் எமது மக்களுக்கு இந்த அரசு சேவையை பாரபட்சம் இன்றி வழங்க வேண்டும் என்று தெரிவித்தார். (4-8)

# வழக்கை துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 23

துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் விசாரணை துரிதப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தி இலங்கை ஆசிரியர் சங்கம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

இந்த விடயத்தில் இனியும் தாமதப்படுத்தாது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கோரியுள்ளார்.

இது தொடர்பில் சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

கடந்த வருடம் ஒக்ரோபர் 20 ஆம் திகதி கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் மோட்டார்சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது நடராஜா கஜன், விஜயகுமார் சுலக்ஸன் ஆகிய இருவரும் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். சம்பவம் நடைபெற்று ஒருவருடம் கடந்துவிட்டது. சம்பவம் விபத்தினாலேயே ஏற்பட்டதாகப் பொலிஸார் முதலில் கூறியிருந்த நிலையில், துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை பின்னர் தெரியவந்தது. பொலிஸார் மீது கொலைக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டு 5 பொலிஸார் விளக்கமறியலில் இருந்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் கொலை தொடர்பில் உண்மைகள் வெளிப்படுத்தப்படவில்லை.

மாணவர்களின் கொலைக்கு நீதியான விசாரணை கோரி கடந்த ஒக்ரோபர் 25 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெறும் என்று ஆளுநரால் உறுதியளிக்கப்பட்டது. அதற்குரிய நடவடிக்கைகள் இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. - என்றுள்ளது. (4)

## பரதக்கலை மேம்பட எமது குறியீடுகள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 23

பொதிந்த பல கருத்துக்களை வெளிக்கொண்டுவருவது நாட்டியம். இந்தக் கலையானது எமது பாரம்பரியங்களை உலகுக்கு எடுத்துக் காட்ட வல்லது. அவ்வாறான பரதக்கலை மேலும் மேலும் மேம்பட, எமது குறியீடுகள் பல, மக்கள் பார்வைக்கும் புரிதலுக்குமாக வெளிக்கொண்டுவரப்பட வேண்டும். அவற்றின் அர்த்தங்களை ஊரறிய உலகறிய பறைசாற்ற நாட்டிய வல்லுநர்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். நாட்டிய கலா மந்திர் கலாலயத்தின் நடன ஆற்றுகைத் தொகுப்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

நடனத்துறையில் தாம் பெற்ற கல்வியை அடுத்த சந்ததிக்கும் வழங்க வேண்டும் என்ற அவாவில் உருவாக்கப்பட்டதே நாட்டிய கலா மந்திர் கலாலயம். எமது இந்துப் பாரம்பரியத்தில் குறியீடுகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. பாவம், இராகம், தாளம் சேர்ந்ததே பரதநாட்டியம். அவை ஒன்று சேர்ந்து அபிநயம் மூலமாக குறியீடுகளைப் பாவித்தே பார்வையாளர்களைச் சென்று அடைகின்றன. ஹஸ்த அல்லது முத்திரை எனப்படும் குறியீடுகளே நடனத்தில் ஈடுபட்டிருப்பவரை சபையோருடன் பேச வைக்கின்றன. குறியீடுகளின் பின்னால் பல அரிய கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன.

அந்த வகையில் பன்னெடுங்காலமாக எம்மிடையே பரவிவிரவி வந்துள்ள காப்பியங்களினதும் காவியங்களினதும் பின்னணியில் இருக்கும் மறைந்திருக்கும் பெறுமதியான கருத்துக்களையுங்கூட எமது நடன வகைகள் வெளிக்கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கருதுகின்றேன். கதைகள் என்று பார்த்தால் எமது பாரம்பரியத்தில் கதைகள் ரூபமாகவே காவியங்கள் அமைந்துள்ளன. ஆனால் அந்தக் கதைகளுக்கு அப்பால் சென்றால் ஒவ்வொரு கதாப்பாத்திரங்களும் ஒவ்வொரு குறியீடுகளே என்றும் ஏதோ விலைமதிப்பற்ற சில ஆத்மீக அல்லது லௌகீகக் கருத்துக்களை அக் கதாப்பாத்திரங்கள் சொல்லி நிற்கின்றன என்பதுந் தெரியவரும். அந்த வகையில் இராமாயணத்தில் வரும் தாபாத்திரங்கள் சூட்சுமமாகப் பலதையும் கூறுகின்றன. பரதக் கலையின் தனித்துவம் குன்றி விடாமல் அதன் அடிப்படை சிதைந்து விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அவ்வாறு அதன் அடிப்படைகளைப் பாதுகாக்காது விட்டால் ஜனஇரஞ்சகம் என்ற போர்வையில் பல்வேறு நடன வகைகளும் எங்கள் முறைமையினுள் உட்புகுந்து எமது நடன முறையின் அடிப்படைகளை மறைந்து விடச் செய்து விடுவன.

தன் சொந்தப் பணத்தில் வீடு கட்டுபவனுக்கும் ஊரில் எல்லோரிடமும் கடன் வாங்கி வீடு கட்டுபவனுக்கும் வேற்றுமையுண்டு. கடன் வாங்கியவன் எப்பொழுதுமே கடன் தருநர்களுக்குச் சலாம் போடத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். சொந்தப் பணத்தில் வீட்டைக் கட்டியவன் எங்கும் எப்பொழுதும் தலை நிமிர்ந்து பயணம் செய்யலாம். ஆகவே கருத்துக் கடன் வாங்கி நடன நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்பவர் எப்போதாவது ஒருவரின் கண்டனத்திற்கு உள்ளாகநேரிடும் என்ற விடயத்தை மனதில் கொண்டிருக்க வேண்டும். இதை நான் பொதுப்படையாக எல்லோர் நலமுங்கருதிசொல்லிவைக்கின்றேன். எவர் மனதையும் புண்படுத்துவது எனது குறிக்கோள் அல்ல - என்றார். (4)

## கிளிநொச்சி சந்தைக் கடைகளை விரிவாக்க நிதி மூலங்கள் வேண்டும்

### பிரதேச சபை செயலாளர் தெரிவிக்கிறார்

கிளிநொச்சி, ஒக. 23

நாச்சிக் குடா பொதுச் சந்தையில் அமைந்துள்ள கடைகளை விரிவுபடுத்துவதற்காக நிதி மூலங்கள் கோரப்பட்டுள்ளன என்று பூநகரி பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச சபைக்கு உட்பட்ட நாச்சிக்குடா பகுதியில் அமைந்துள்ள சந்தை கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள கடைத் தொகுதியில் உள்ள கடைகளை விரிவு படுத்தல் ( பெரிதாக்கல்) திட்டத்திற்காகத் தமது அமைச்சிடம் நிதி கோரியுள்ளோம். குறித்த கடைத் தொகுதிகளில் அமைந்துள்ள கடைகள் சிறியனவாக்க் காணப்படுகின்றன. இதனால் வியாபாரிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனை நிவர்த்தி செய்வதற்காக இந்தத் திட்டத்தினை அமுல்படுத்த திட்டமிடப்படுகிறது.

பிரதேச சைபகளை வலுவூட்டல் என்ற திட்டத்தின் கீழ் இந்த திட்டத்தை மேற்கொள்ள உள்ளோம்.

இதற்கான நிதி கிடைக்கப் க். பெற்றதும் உடனடியாக வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கபடும் என்று பூநகரி பிரதேச சபைச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (4-6)

# துயிலும் இல்லங்களில் ராணுவத்தினர் நடப்பது பெற்றோரின் நெஞ்சில் மிதிப்பதாகவேயுள்ளது

### மாற்று நடவடிக்கை எடுக்குமாறு அரச தலைவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 23

வடக்கு மாகாணத்தில் உள்ள பல துயிலும் இல்லங்களில் தமது பிள்ளைகளின் கல்லறைகளை உழுது தள்ளிய இராணுவம் அதன்மேல் சப்பாத்துக்கால்களால் மிதித்து திரிவது பெற்றவர்களின் நெஞ்சில் மிதிப்பது போன்றுள்ளது. இப்படி அவர்கள் நடந்துகொள்வதால் மாவீரர்களைப் பெற்றவர்களின் உள்ளங்கள் வதங்குகின்றன என்று பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே இதற்கு மாற்று ஏற்பாட்டை மேற்கொண்டு உண்மையான நல்லிணக்கத்துக்கு வழி ஏற்படுத்துங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக் கிளைத் தலைவருமான வைத்தியக் கலாநிதி ப.சத்தியலிங்கம் அரச தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவைக்கு வருகை தந்த அரச தலைவருடன் சுமார் 30 நிமிடங்கள் கலந்துரையாடினேன். அதன் போது பல கோரிக்கைகளை முன்வைத்திருந்த தாக சத்தியலிங்கம் தெரிவித்தார். அதில் துயிலும் இல்லம் தொடர்பான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. அதன்போது.

வடக்கு மாகாணத்திலே விடுதலைப் புலிகளின் காலத்தில் பேணப்பட்ட பல துயிலுமில்லங்கள் வெளியான பிரதேசங்களில் உள்ளன. மற்றும் சில படையினரின் பிடியில் உள்ளன. அவ்வாறு படையினர் பிடியில் உள்ள துயிலுமில்லங்களில் தமது பிள்ளைகளின் கல்லறைகளை உழுது தள்ளிய இராணுவம் அதன் மேல் சப்பாத்துக்கால்களால் மிதித்து திரிவதனைப் பெற்றவர்களால் பொறுக்கமுடியவில்லை. இது இராணுவத்தினர் தமது நெஞ்சில் மிதிப்பது போன்ற உணர்வையே அனுபவித்து வேதனைப்படுவதாக மாவீரர்களின் பெற்றோர் முறையிடுகின்றனர். இது தொடர்பில் பலரும் எமக்கு முறையிட்டவாறு உள்ளனர். எனவே இதற்கு மாற்று ஏற்பாடு மேற்கொள்ளவேண்டும். துயிலுமில்லங்களைப் பார்த்துத் தமது நெஞ்சில் சிறிதளவேனும் ஆறுதல் அடைய வழி ஏற்படுத்துமாறு கோருகின்றனர். அவ்வாறான செயல்களின் மூலமே உண்மையான நல்லிணக்கத்துக்கு வழி ஏற்பட முடியும்என்ற அவர்களின் கூற்றுக்கு அரசு செவிசாய்க்கவேண்டும். அரசைப் பொறுத்தவரையில் அங்கே விதைக்கப்பட்டவர்கள் புலிகள். ஆனால் தமிழர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள்தமது பிள்ளைகள், உறவுகள். அவர்களை தமிழர்கள் தெய்வங்களாகவே கருதுகின்றனர். இறந்தவர்கள் எவராயினும் இறப்பின் பின்னர் மரியாதையை வழங்குவதே பன்னாட்டு விழுமியம். அதனை எமது நாட்டு அரசும் காண்பிக்க முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன்.

குறித்த விடயம் தொடர்பில் கோரிக்கை மனு ஒன்றை எழுத்தில் சமர்ப்பியுங்கள். அவை தொடர்பில் ஆராய்ந்து உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அரச தலைவர் தெரிவித்தார் என்று சத்தியலிங்கம் தெரிவித்தார். (4 -101)

## சுயாட்சியை ஏற்ற அரசமைப்பே இலங்கையில் உருவாக்க வேண்டும்

### மக்கள் கருத்தறியும் கலந்துரையாடலில் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 23

வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்பட்ட சுயாட்சியை ஏற்றுக்கொண்ட அரசமைப்பு இலங்கையில் உருவாக்கப்பட வேண்டும். இதில் தமிழ் பேசும் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை பற்றிய மக்கள் கருத்தறியும், மக்களை விளிப்பூட்டும் கலந்துரையாடல்கள் கிளிநொச்சியில் இடம்பெற்று வருகின்றன. கிளிநொச்சி நகர் வர்த்தகர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (21.10. 2017) மாலை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டக் காரியாலயமான அறிவகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோது சிறிதரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை பல்லின மக்களைக் கொண்டுள்ள நாடு. இந்த நாட்டில் வாழும் சகல இனத்தவர்களும் இந்த நாட்டுப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இங்கு வாழும் ஒரு இனத்தவர்களையோ அல்லது ஒரு மதத்தவர்களையோ முதன்மைப்படுத்தி ஏனையவர்களை சிறுமைப்படுத்தி உரிமைகளை மறுக்கின்றதாக அரசியலமைப்பு அமையக்கூடாது. மக்களது அமைதிக்கும் நிலைத்திருப்புக்கும் சகல இன மக்களையும் கருத்தில் கொண்டு அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கக்கூடிய வகையில அமைந்த அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். ஓர் இனத்தையும் மதத்தையும் முதன்மைப்படுத்தி இன்னொரு இனமக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த முற்பட்டதன் விளைவே இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கான முக்கிய காரணமாக அமைந்தது. இப்படியான பெரும் பிழைகள் இனிவரும் அரசியலமைப்பிலும் இடம்பெறுமாகவிருந்தால் அதன் விளைவுகள் இதுவரை நடந்தவற்றையும் விடவும் மிகமோசமானதாகவே அமையும். இதில் இந்த அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கையின் புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் பல்வேறுபட்ட குறைபாடுகளும் அதனால் ஏற்பட்ட குழப்ப நிலைகளும் காணப்படுகின்றன. இதனைப் பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இடைக்கால அறிக்கை தொடர்பில் என்ன உள்ளது என்பது பற்றி தமிழ் மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது மக்கள் வாக்கெடுப்புக்கு வரும்போது அதற்குத் தகுந்த முறையில் முகங்கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும்.

இந்த நாட்டில் வடகிழக்கு என்பது தமிழ் மக்கள் காலங்காலமாக வாழ்ந்துவரும் தமிழர்களின் பூர்விக தாயகம். எந்த அரசியலமைப்பு வந்தாலும் வடகிழக்கைக் கூறுபோடாத வகையிலான வடகிழக்கு மாகாணங்கள் இணைந்ததான தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய சுயாட்சியை ஏற்றுக்கொண்டதான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட வரைபு உள்வாங்கப்பட வேண்டும் என்றார். இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி நகர் வர்த்தகர்கள், வடக்குமாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இடைக்கால அறிக்கை தொடர்பான கருத்துக்களை முன்வைத்திருந்தனர். (4)

## புலமைப் பரிசிலில் முதல் 15 இடங்களை பெற்ற மாணவர்கள் மைத்திரியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியில் முதல் 15 இடங்களைப் பிடித்த மாணவர்கள் எதிர் வரும் 31 ஆம் திகதி கொழும்பில் அரச தலைவரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பிற்காக முதல் 15 இடங்களிற்குள் தேர்வான மாணவர்களை தேசிய சேமிப்பு வங்கியின் ஒழுங்கமைப்பில் அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதன் பிரகாரம் அழைத்துச் செல்லப்படும் மாணவர்களின் பெற்றோருக்குக் குறித்த தகவல் வழங்கப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களிற்கு பாடசாலைகளில் படங்கள் வைப்பதோ அல்லது பெரிய அளவில் நிகழ்வுகளை நடத்துவதனையோ தவிர்க்குமாறு பாடசாலைகளிற்கு கொழும்பு கல்வி அமைச்சு சுற்றறிக்கை அனுப்பி வைத்திருந்தது. (4-101)

# சு.கவிலிருந்து நீக்கப்படுகிறார் மகிந்த ராஜபக்ச!

கொழும்பு. ஒக். 23
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து, நீக்கப்படலாம் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் துமிந்த திசநாயக்கவை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.
தேர்தல்கள் தொடர்பான கலந்துரையாடல்களில் பங்கேற்காத எந்தவொரு கட்சி உறுப்பினரும், கட்சியின் பதவிகளை இழப்பார்கள் என்று துமிந்த திசநாயக்க தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்காக பணியாற்றாத மகிந்த அணியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில், நீக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)



# மெதுவாகவே நகர்கிறது இலங்கை

## ஐ.நா. அறிக்கையாளர் விசனத்துடன் சுட்டிக்காட்டு

கொழும்பு. ஒக். 23
இலங்கையில் உண்மை கண்டறியும் செயல்முறைகள் மிகவும் மெதுவாகவே முன்னெடுக்கப்படுவதாக, உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமையை உத்தரவாதப்படுத்துவதற்கான, ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரிப் தெரிவித்துள்ளார்.
அமைச்சர் மனோ கணேசனைக் கடந்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
ஏற்கனவே திட்டமிடப்பட்ட அட்டவணைக்குப் பின்னாலேயே இந்தச் செயல்முறைகள் இருக்கின்றன என்றும், மிக மெதுவாகவே இந்தச் செயல்முறைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் இந்தச் சந்திப்பின் போது ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் சுட்டிக் காட்டியுள்ளார். (5)

# 26ஆம் திகதி வேலைநிறுத்தம்

கொழும்பு. ஒக். 23
எதிர்வரும் 26ஆம் திகதி சுகாதாரத்துறைத் தொழிற்சங்கங்கள் பல அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.
தாதியர், நிறைவுகாண் மருத்துவர்கள், இடைப்பட்ட சுகாதார சேவையாளர்கள் உள்ளிட்ட சங்கங்களைச் சேர்ந்தவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.
சுகாதார சேவைக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ள பதவி மாற்றங்களால் ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.
இதற்கு முன்னரும் பல தடவைகள் சுகாதார அதிகாரிகளுடன் பேச்சு இடம்பெற்ற போதிலும், இதுவரை அதற்கு நிரந்தரத் தீர்வு காணப்படாத நிலையில் இந்தப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தொழிற்சங்கங்கள் தகவல் தெரிவித்துள்ளன (5)

# அரசியல் பழிவாங்கலையே கூட்டு அரசு தொடர்கின்றது

## மகிந்த காட்டமாகத் தெரிவிப்பு




கொழும்பு. ஒக். 23
ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களைச் சிறையில் அடைப்பதெல்லாம் அரசியல் ரீதியான பழிவாங்கலே. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து தங்காலை சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்களை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நேற்று முன்தினம் சிறைக்குச் சென்று சந்தித்தார்.
சந்திப்பின் பின்பு ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போது, பிரேமதாசவோ, ஜே.ஆர்.ஜெயவர்தனவோ நாடாளுமன்ற உறுப்பினர்களை சிறையில் அடைத்ததில்லை. நான் எத்தனையோ ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், மனிதச் சங்கிலிப் போராட்டங்கள் நடத்தியிருக்கிறேன். அப்போதெல்லாம் அவற்றை மேற்கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். வாக்குரிமையைப் பறித்துக்கொண்டு, மறுபுறம் இதுபோன்ற அடிப்படை உரிமைகளைக் கூடப் பறித்துக்கொண்டு கல்வீசுவது யார் என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது.
இரண்டு தட்டு வீட்டில் இருந்துகொண்டு செய்த வேலைகளெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். ஆர்ப்பாட்டக்காரர்களைச் சிறையில் அடைப்பதெல்லாம் அரசியல் ரீதியான பழிவாங்கல்களே - என்றார். (5)

பிணைமுறி விவகாரம்

# சாட்சிப் பட்டியலில் ரணிலின் பெயரும் உள்ளடக்கம்

கொழும்பு. ஒக். 23
மத்திய வங்கிப் பிணைமுறி விவகாரத்தில் சாட்சிகளாக இருபது பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியலை, அரசதலைவர் ஆணைக்குழுவில் சட்ட மா அதிபர் அளித்துள்ளார். அந்தப் பட்டியலில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் உள்ளடங்கியுள்ளது.
பிணைமுறி முறைகேடுகள் தொடர்பில் அரச தலைவர் ஆணைக்குழு விசாரணை நடத்தி வருகிறது. இதுவரை பொதுமக்களிடம் சாட்சியங்கள் பெறப்பட்டு விட்டன. ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட சில கூற்றுக்கள் மற்றும் சார்ச்சைகளையடுத்தே இருபது பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியலைச் சட்டமா அதிபர் சமர்ப்பித்துள்ளார்.
முன்னதாக, சில கேள்விகள் அடங்கிய கேள்விப் பட்டியலை அரச தலைவர் ஆணைக்குழுத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பி வைத்திருந்தது. அதற்கான பதில்கள் கடந்த 20ஆம் திகதி ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டன.
பிணைமுறி குறித்து ஆராயும் அரச தலைவர் ஆணைக்குழுவின் கால எல்லை எதிர்வரும் 27ஆம் திகதியுடன் முடிவடைகிறது. ஆணைக்குழுவின் ஆயுளை நீடிக்க அனுமதி வழங்குமாறு ஆணைக்குழு அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
இந்தக் கோரிக்கை தொடர்பில் அரசதலைவருடன் பரிசீலிக்கப்பட்ட பின் முடிவு அறிவிக்கப்படும் என்று அரச தலைவரின் செயலர் ஒஸ்டின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.
ஏற்கனவே இரண்டு முறை ஆணைக்குழுவின் காலம் நீடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (5)




# இந்தியாவிடம் வாங்கிய கப்பல் ஆழ்கடல் கண்காணிப்பில் இணைப்பு

கொழும்பு. ஒக். 23
இந்தியாவிடம் இலங்கை வாங்கிய ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல் கடலோரப் பொலிஸ் படையில் அதிகார பூர்வமாக இணைத்துக் கொள்ளப்பட்டது.
கொழும்புத் துறைமுகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கடலோரப்பொலிஸ்ப் படையில் அதிகாரபூர்வமாக இணைத்துக் கொள்ளப்பட்டது.
சுரக்சா என்று பெயரிடப்பட்டுள்ள ஆழ்கடல்ச் சுற்றுக் காவல்க் கப்பலை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன இயக்கி வைத்தார்.
கொழும்புத் துறைமுகத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த இந்த நிகழ்வில் இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, கடற்படை, வான்ப்படைத் தளபதிகள் மற்றும் முப்படை அதிகாரிகள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
சுரக்சா சுற்றுக் காவல் கப்பலின் கட்டளை அதிகாரியான கப்டன் நெவில் உபயசிறி நியமிக்கப்பட்டுள்ளார்.
இந்தக் கப்பல் கடற்பரப்பில் கண்காணிப்பு, ரோந்துப் பணிகளிலும், மனிதாபிமான உதவி மற்றும் இடர் மீட்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படவுள்ளது.
ஆயிரத்து 160 தொன் எடை கொண்ட இந்தக் கப்பல், 74.10 மீற்றர் நீளமுடையது. மணிக்கு 22 கடல் மைல் வேகத்தில் பயணம் செய்யக் கூடிய இந்தக் கப்பலில், 14 அதிகாரிகள் மற்றும் 86 மாலுமிகள் பணியாற்றுவர். (5)

# விண்கல்லுக்குப் பாதுகாப்பு



கொழும்பு. ஒக். 23
திக்வெல்லையில், விண்கறகள் எனக் கருதப்படும் சிறு கற்துண்டுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.
மாத்தறைக் கடற்பகுதியில் கடந்த புதன்கிழமை விண்கல் என்று சந்தேகிக்கப்படும் ஒரு பொருள் விழுந்து வெடித்தது. மாத்தறை மாவட்டம், திக்வெல்லையின் வீடொன்றின் கூரையில் கற்துண்டு ஒன்று இருப்பதைக் கண்ட வீட்டு உரிமையாளர், அது குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார்.
'கற்துண்டு வீட்டுக் கூரையில் விழுந்து உருளும் சத்தம் கேட்டது. அது பற்றி நாங்கள் ஒன்றும் பெரிதாக நினைக்கவில்லை. மறுநாள்க் காலையில் கூரையில் ஏறிப் பார்த்தபோது, எரிந்து போன கற்துண்டு ஒன்று விழுந்திருந்ததைக் கண்டேன். இதையடுத்தே பொலிஸாருக்குத் தகவல் வழங்கினேன்' என்று வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.
இது பற்றி ஆராய்ந்த பொலிஸார், ஆர்தர் சி.கிளார்க் நிலையத்துக்கும் சுரங்கத் துறையினருக்கும் தகவல் அனுப்பியுள்ளனர். தற்போது அந்தக் கற் துண்டு பொலிஸ்ப்பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறது. (5)

# கோத்தபாய ராஜபக்ச கைதாவார்

## அடித்துக் கூறுகிறது ஆங்கில ஊடகம்

கொழும்பு. ஒக். 23
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச உடனடியாகக் கைது செய்யப்படவுள்ளார் என்று, கொழும்பு ஆங்கில வார இதழான சண்டேலீடர் செய்தி வெளியிட்டுள்ளது.
கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்து விளக்கமறியலில் வைப்பது தொடர்பாக, கடந்த வாரம் அரசுக்கும், சட்ட மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கும், இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.
அமெரிக்கா சென்றிருந்த கோத்தபாய ராஜபக்ச கடந்த வாரம் நாடு திரும்பியிருந்தார். கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில், அவரைக் கைது செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் சில அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.
சர்ச்சைக்குரிய மிக் போர் விமானக் கொள்வனவு மோசடி தொடர்பான வழக்கிலேயே கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படவுள்ளார்.
அதேவேளை, தம்மை விரைவில் கைது செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நகர்வுகள் குறித்து கோத்தபாய ராஜபக்சவும் அறிந்திருப்பதாக, அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (5)

## சுற்றுலாவிகளிடம் திருடியவர்களை தேடும் பொலிஸார்

கொழும்பு, ஒக். 23
மாத்தறை மாவட்டத்தில் வெலிகம மிரிஸ்ஸ பிரதேசத்தில் ரஷ்ய நாட்டுப் பெண் பொறியியலாளரின் கைப்பையைத் திருடிய நபர்கள் இருவரைத் தேடி வெலிகம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
அந்தப் பெண் தனது காதலனுடன் இரவு உணவு பெற்றுக் கொள்வதற்காக நடந்து செல்லும் போதே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.
மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் அவரது கைப்பை திருடிச் செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 40 ஆயிரம் ரூபா பணம் இருந்ததாகப் பொலிஸாரிடம் ரஷ்ய நாட்டுப் பெண் முறைப்பாடு செய்துள்ளார். (5)

# மகாநாயக்க தேரர்களை சமாளிக்க அரசியல் கட்சிகள் படையெடுப்பு

### இடைக்கால அறிக்கை மீதான விவாதத்துக்கு முன்னர் சந்தித்துப் பேச ஏற்பாடு

கொழும்பு, ஒக். 23
புதிய அரசமைப்புக்கு எதிராக மகாநாயக்க தேரர்கள் போர்க்கொடி தூக்கியுள்ள நிலையில், அவர்களைச் சந்தித்துப் புதிய அரசமைப்புக்கான முக்கியத்துவம் குறித்துத் தெளிவுபடுத்துவதற்கு அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.
ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட கட்சிகளின் பிரமுகர்கள் விரைவில் மகாநாயக்க தேரர்களை விரைவில் சந்திக்கவுள்ளனர்.
மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரர் வெளிநாடு சென்றிருப்பதால் அவர் நாடு திரும்பியதும் மேற்படி சந்திப்புகள் ஆரம்பமாகும் என்று தெரியவருகின்றது.
புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை மீது எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளிலும், அடுத்த மாதம் முதலாம் திகதியும் அரசமைப்பு நிர்ணய சபையில் விவாதம் நடைபெறவுள்ளது.
புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியை உடனடியாகக் கைவிடுமாறு மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்தியுள்ளதால், அவர்களைச் சந்தித்து தமது கட்சிகளின் நிலைப்பாடுகளை அறிவிக்காமல் விவாதத்தில் பங்கேற்றால் அது சிக்கலாக அமைந்துவிடும் என்பதாலேயே சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க உட்பட கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரே மகாநாயக்க தேரர்களைச் சந்திக்கவுள்ளனர்.
ஒற்றையாட்சி, நிறைவேற்று அரச தலைவர் முறைமை நீக்கப்படக் கூடாது உள்ளிட்ட விடயங்களில் மகாநாயக்க தேரர்களின் நிலைப்பாட்டிலேயே சுதந்திரக் கட்சி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

# மகா சங்கத்தினரைப் பிரித்து ஆட்சிக்கு வர முயற்சிக்கிறது மகிந்த குழு – சஜித் பிரேமதாச

கொழும்பு, ஒக். 23
மகா சங்கத்தினருக்கிடையில் பேதங்களை உருவாக்கியாவது ஆட்சிக்கு வர வேண்டும் என்று மகிந்த அணி முயற்சிக்கின்றது என்று அமைச்சர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.
திஸ்ஸமஹாராம, நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.
மக்களின் வாழும் உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்தக் கூட்டு அரசு கடமைப்பட்டுள்ளது.
கடந்த அரசு அம்பாந்தோட்டையில் தோல்வியடைந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது. அந்தப் பிரதேசங்களிலுள்ள மக்களின் குடி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முன்வரவில்லை.
புதிய அரசமைப்புத் தொடர்பில் மகாநாயக்க தேரர்களை மகிந்த அணி அரசியல்வாதிகள் குழப்பி வருகின்றனர். அவர்கள் மகா சங்கத்தினரைப் பிளவுபடுத்தி தாம் எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்று முயற்சிக்கின்றனர் - என்றார். (5)

## மகாநாயக்கர்களிடையே பிரிவினையை ஏற்படுத்த அரசு சதி - டளஸ்

கொழும்பு, ஒக். 23
அரசு மகா சங்கத்தினரிடையே பேதங்களை உருவாக்கத் திட்டமிட்ட அடிப்படையில் செயற்படுவதாக முன்னாள் அமைச்சரும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினருமான டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.
அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்திய போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
இன்றைய அரசில் மும்மூர்த்திகள் உள்ளனர். இவர்களே அரசினால் மூன்று பீடங்களின் மகாநாயக்கர்களாகக் கருதப்படுகின்றனர். சமன் ரத்னப்பிரிய, காமினி வியங்கொட மற்றும் நெவில் பிரணாந்து என்போரே அவர்களாவர்.
புதிய அரசமைப்பை முன்வைத்து அதனூடாக மகாநாயக்க தேரர்களிடத்தில் அரசு பிரிவினையை ஏற்படுத்த முயற்சிக்கின்றது - என்றார். (5)

# தேர்தலை நடத்துபவருக்கு பதவியைக் கொடுங்கள்

### சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

ஜனவரி மாதத்தில் தேர்தலை நடத்த முடியாவிடில் தேர்தல் ஆணையாளர் பதவியில் இருந்து விலகி, தேர்தலை நடத்தக்கூடிய முதுகெலும்புள்ள அதிகாரியொருவருக்கு அந்தப் பதவியை வழங்கவேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கத்தின் இணைப்பாளர், சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அடுத்த வருடம் டிசெம்பர் மாதத்திற்கு முன்னர் தேர்தலை நடத்த முடியாது போனால் பதவி விலகுவதாகத் தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார். மக்களின் ஜனநாயாக உரிமை பறிக்கப்பட்டுள்ள நிலை யில், மக்கள் உரிமைக்காகப் பாடுபடுகின்ற ஒருவராக இருந்தால் தேர்தல் ஆணையாளர் நீதிமன்ற நடவடிக்கையொன்றை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிடின் அவர் தனது பதவியிலிருந்து விலகித் தேர்தலை நடத்தக் கூடிய முதுகெலும்புள்ள ஒருவருக்கு அந்தப் பதவியைக் கொடுக்கவேண்டும் - என்றார். (5)

ஆண்டு நினைவஞ்சலியும்
கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு நிகழ்வும்

25 ஆம் ஆண்டு    முதலாம் ஆண்டு


பெரியதம்பி இரத்தினசிங்கம் - இரத்தினசிங்கம் பரமேஸ்வரி



22.10.2017 அன்று பெரியதம்பி இரத்தினசிங்கம் 25 ஆவது ஆண்டு இரத்தினசிங்கம் பரமேஸ்வரி முதலாவது ஆண்டு நினைவாக கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம சிறுவர்களுக்கு 200, 000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.







தகவல்:
குடும்பத்தினர்.

# கிழக்கு ஆசிரியர்களை வெளி மாகாணங்களில் நியமிக்க வேண்டாம்

## கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நசீர் அஹமட் வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 23

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்வியற் கல்லூரியிலிருந்து வெளியேறி ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் கிழக்கு மாகாணத்திற்கே உள்வாங்கப்படவேண்டும். இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: கிழக்கு மாகாணத்தில்



ஏற்கனவே ஆசிரியர் பற்றாக்குறை இருக்கும் நிலையில் வெளி மாகாணங்களுக்கு எமது ஆசிரியர்கள் நியமிக்கப்படுவது ஏற்றுக் கொள்ள முடியாது. 2015ஆம் மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் எமது ஆசிரியர்கள் வெளிமாகாணங்களுக்கு நியமிக்கப்பட்ட போது நாம் பல போராட்டங்கள் மற்றும் அழுத்தங்களை கொடுத்து எமது ஆசிரியர்களை எமது மாகாணங்களுக்கு பெற்றுக் கொண்டோம். எமது பெண் பிள்ளைகள் தூரப் பிரதேசங்களில் உள்ள கல்வியியற் கல்லூரிகளில் கற்று மீண்டும் வெளிமாகாணங்களில் கடமைக்காக நியமிக்கப்படுகின்ற போது எவ்வாறு அவர்களால் ஆரோக்கியமான மனநிலையுடன் கடமையாற்ற முடியும். வெளிமாகாணங்களுக்கு நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தமது கடமைகளை பொறுப்பேற்க முன் அவர்களைச் சொந்த மாகாணத்தில் நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஆளுநர் முன்வர வேண்டும் - என்றார். (5)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய அதிபரும் எமது கல்லூரியின் பழைய மாணவரும், பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினருமாகிய

**காசித்தம்பி கந்தசாமி**

அவர்கள் கல்வி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டு சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா" விருதினை இன்று (23.10.2017) ஞாயிற்றுக்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவர் மேலும் பட்டங்கள் பல பெறவும் எல்லாம் வல்ல வேம்படி விநாயகனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- பழைய மாணவர் சங்கம்,
யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ மீசாலை
விக்னேஸ்வரா மகா
வித்தியாலயம்
எமது மகா வித்தியாலய
ஆசிரியை

**திருமதி சகுந்தலாதேவி கோணேஸ்வரன்**

அவர்கள் கல்வி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டு சிறந்த ஆசிரியருக்கான " ஆசிரியர் பிரதீபா பிரபா" விருதினை இன்று (23.10.2017) பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவர் மேலும் பட்டங்கள் பல பெறவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
பாடசாலை சமூகம்,
யா/ மீசாலை விக்னேஸ்வரா ம.வி.

### ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 21. அராலி வீதி. 2ஆம் குறுக்குத் தெரு. ஆதன இல.52 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம். அராலிவீதி. புதிய சோனகதெரு. 2ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த அப்துல் ப கரீம் கைம்பெண் காமிலா குறித்த ஆதனத்துக்கு 1989ஆம் ஆண்டு பிரசித்த நொத்தாரிசு M.M.மன்சூர் முகதாவில் தனது பெயரில் அறுதி சாதனம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தது என்றும். கடந்த கால (யுத்த) சூழ்நிலை காரணமாகவும். 1990ஆம் ஆண்டு தாங்கள் வெளியேற்றப்பட்டமையினால் எவ்வித ஆவணங்களும் கொண்டு செல்ல முடியவில்லை என்றும் இதன் பதிவுக்கு யாழ். மாவட்ட காணிப்பதிவகத்தில் தேடுதல் மேற் கொண்டும் எந்தப்பலனும் கிடைக்கவில்லையென்றும் இவ் ஆதன உரித்து தொடர்பில் எவ்வித பிசகு தடையுமின்றி ஆட்சி செய்து வருகின்றேன் என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் நிறைவேற்றிய 7686/2017.08.14 இலக்க நன்கொடை உறுதி மூலம் தனது மகன் முஹம்மது ஸரூக்கிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

**ஆதன விவரம் :-** வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப் பகுதி. வண்ணார் பண்ணை கோவிற்பற்று. வண்ணார் பண்ணை இறை "உப்புக்குளம் கரையும் பொம்மை வெளியும்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களின் வரைபட இல. 2333/ 2016.02.09 இல் துண்டு - 01 எனக் காட்டப்பட்ட நில பர.00. குளி- 17.15 ஆகும். இதற்கு எல்லை **கிழக்கு** - 2ஆம் குறுக்குத்தெரு. **வடக்கு** - திருமதி ஷரிவ்வினாதனம். **மேற்கு** - கத்தோலிக்க மயானம். **தெற்கு** - கத்தோலிக்க ஆலயம்.

தற்போது இவ்வாதனத்தை முஹம்மது ஷரூக் தனது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது முஹம்மது ஷரூக் என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## பன்னாட்டு போர்க் கப்பல்கள் இலங்கைக்கு வருகை

அமெரிக்காவின் ஆறு அதிநவீன நாசகாரி போர்க் கப்பல்களுடன், இந்திய, சீனா, பாகிஸ்தான், தென்கொரிய நாட்டுக் கப்பல்களும் மாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளன.

அமெரிக்காவின் ஆறு போர்க் கப்பல்களுடன் மிகப் பெரிய வானூர்தி தாங்கிய கப்பலும் இணைந்தே இலங்கை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளன. இந்தியாவின் இரண்டு போர்க்கப்பல்கள், சீனாவின் ஒரு போர்க்கப்பல் மற்றும் பாகிஸ்தானிய போர்க்கப்பல் ஒன்றும், தென்கொரியவின் பிரதான இரண்டு போர்க்கப்பல்களும் இலங்கைக்கு வரவுள்ளன. (5,31)

### சிறுநீரகம் தேவை

38 வயதுடைய நபர் ஒருவருக்கு
$O^+$ வகையைச் சார்ந்த சிறுநீரகம்
உடனடியாக
தேவைப்படுகின்றது.
தொடர்பு : 076 436 2220

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில்
2017 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
165 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

**செல்வன் பிறேம்குமார் பிரியறதன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவருக்குக் கற்பித்த வகுப்பாசிரியர், அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர் : அப்பா - பிறேம்குமார், அம்மா - சுகந்தினி
அண்ணா - திருக்குமரன், துளசிவாணன், தம்பி - வசீகரன்
தாத்தா - கதிரவேலு, அம்மம்மா - புஷ்பமலர்

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர்
**திருமதி லலிதாமலர் முகுந்தன்**
B.B.A (Hons) Mphil (Edu) - SLPS -2



ஆசிரியை
**திருமதி விக்கினேஸ்வரி மணிவண்ணன்**
Pri (Trd) B Ed

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று (23.10.2017) திங்கட்கிழமை கல்வி அமைச்சினால் வட மாகாண ரீதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள **சிறந்த அதிபர் ஆசிரியருக்கான பிரதீபா பிரபா** விருதினை கௌரவ கல்வி அமைச்சரிடமிருந்து பெறும் எமது கல்லூரி அதிபர் ஆசிரியர் இருவரையும் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**சேவையாளர் சங்கம்**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

யாழ் நகரில் இயங்கும் முன்னணி

ANNAI NAGAA FOOD City

**Food City ஆன**

# அன்னை நாகா
## பூட் சிற்றி

அசத்தலான
பண்டிகைக்கால
விசேட சலுகைகள்



**23.10.2017 இன்று மட்டும்**

ரூ.5000/= இற்கும் மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படும்.



அன்னை நாகா
பூட் சிற்றி

175,K.K.S.Road. Jaffna.
021 739 0192,
021 739 0194

ANNAI NAGAA FOOD City

341, Pointpedro Road,
Nallur.
021 221 7515

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டணி அமைத்தே களம் குதிப்பு

## த.மு.கூட்டணி, ஐ.தே.கவுடனும் இ.தொ.கா., சு.கவுடனும் சங்கமம்

கொழும்பு, ஒக். 23

மலையகத்தின் இரு பிரதான கட்சிகளான தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன தேசியக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்தே உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் களமிறங்கவுள்ளன.

தமிழ் முற்போக்குக் கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சியுடனும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் சங்கமிக்கவுள்ளன.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் ஜனவரி 20ஆம் திகதிக்குள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் தேர்தலானது மார்ச் மாதம் வரை பிற்போடுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன.

குட்டித் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான தயார்ப் படுத்தல் நடவடிக்கைகளில் தேசியக் கட்சிகளும், சிறு கட்சிகளும் தற்போதிலிருந்தே தீவிரமாக இறங்கியுள்ளன.

கூட்டணி அமைத்தல், கட்சி தாவுதல், காலைவாருதல் என்று தேர்தல் காலத்துக்கே உரித்தான சில சம்பவங்கள் முன்கூட்டியே நடைபெறுவதால் அரசியல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

மலையகத்திலுள்ள ஏனைய சிறு அமைப்புகளும், கட்சிகளும் பிரதான கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதற்குரிய பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றன. (5)



# மகிந்தவைக் கவிழ்த்தவர் விமலே

## சுதர்ஷினி பெர்னான்டோபுள்ள சாடல்

கொழும்பு, ஒக். 23

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் அரசைக் கவிழ்க்க முதல் கல்லை எறிந்த விமல் வீரவன்சவே தற்போதும் மகிந்தவைக் கஷ்டத்தில் தள்ளி வருவதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னான்டோபுள்ள தெரிவித்தார்.

தெவிநுவர பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் முன்னணியின் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலை வர் மகிந்த அரசில் பொருளாதாரக்கொலையாளிகள் இருப்பதாகவும், தமக்கு வேலை செய்ய முடியவில்லை எனவும், சிலருக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்படுவதாகவும் விமல் வீரவன்சவே ஊடகங்கள் முன்னால் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார். தற்போது மகிந்த ராஜபக்சவைச் சுற்றி இருந்து கொண்டு அவருக்காக வெறுமனே முதலைக் கண்ணீர் வடிக்கும் உதய கம்மன்பில என்ன செய்தார்.

அரசமைப்புச் சட்டத்தை மாற்றாது போனால் மகிந்த ராஜபக்சவுக்கு வாக்களிக்கப்போவதில்லை. அவருக்கு உதவவும் போவதில்லை எனக் கூறினார். விமல் வீரவன்சவும், உதய கம்மன்பிலவுமே மகிந்த ராஜபக்சவைச் சுற்றி இருந்து கொண்டு அவரது தோல்விக்கான முதல் துப்பாக்கி வேட்டைத் தீர்த்தனர்.

இதுதான் எங்களுக்கு இருக்கும் கவலை. தற்போது இவர்கள் மகிந்த ராஜபக்சவைக் காட்டித் தமது வாக்கு வங்கியை நிரப்பிக் கொள்ள முயற்சித்து வருகின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மிகவும் புத்திசாலித்தனமாகச் செயற்பட வேண்டும் - என்றார். (5)

## மரண அறிவித்தல்கள்

### தம்பியப்பா சக்திவேல்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா சக்திவேல் நேற்று (22.10.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா-வேதநாயகி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், பாஸ்கரன், காலஞ்சென்றவர்களான வசந்தி, பரணீகரன் மற்றும் ஜெயந்தி (யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகலாவின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, அன்னலட்சுமி, தெட்சணாமூர்த்தி மற்றும் சிதம்பரநாதன், காங்கேயபிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரனும், மகேஸ்வரி, புஸ்பவதி (பவளம்), குணேஸ்வரி, தியாகேஸ்வரி, ஜோதிஸ்வரி(சந்திரா), ஜெயந்தி, காலஞ்சென்றவர்களான தயாபரன், அமிர்தலிங்கம், சிவசம்பு, பாக்கியலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், தீபிகா, கீர்த்தனா, விவேக்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**58/25, கருவேப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்: மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமகள், பேரப்பிள்ளைகள்.**

**0777871343**

## முதலாம் ஆண்டு திவச அழைப்பு



கடந்த 03.11.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர்**

### கந்தையா பரமநாதன்

தோற்றம் 10.12.1942 — மறைவு 03.11.2016

அவர்களின் முதலாம் ஆண்டு திசவக் கிரியைகள் இன்று (23.10.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

**4/3, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**


**குடும்பத்தினர்.**

# பகலில் போராட்டம் இரவில் திருட்டு

கொழும்பு, ஒக். 23

பகல் நேரங்களில் ஊழல் எதிர்ப்புப் போராட்டங்களில் முன்னிற்கும் நபர் இரவு நேரத்தில் தொழிற்சாலையில் திருடும் போது மாட்டிக் கொண்ட சம்பவம் கம்பளையில் நடந்துள்ளது. அரசுக்குச் சொந்தமான பால் நிறுவனத்தின் கம்பளைப் பால் சேகரிப்பு நிலைய ஊழியரே இவ்வாறு வசமாக மாட்டிக் கொண்டுள்ளார்.

இரவில் சேகரிப்பு நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்படும் பாலை பாத்திரங்களில் நிரப்பி முச்சக்கர வண்டியில் திருட்டுத்தனமாகக் கொண்டு செல்வதை பல நாட்களாக செய்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் சந்தேகம்கொண்ட அதிகாரிகள், இரவில் சோதனை நடவடிக்கை மேற்கொண்ட போது மேற்படி நபர் கையும் களவுமாக மாட்டியுள்ளார். (5)



பிறப்பு 13.07.1952 — இறப்பு 20.10.2017

### கணபதி நடராசா

(கட்டைவேலி ப.நோ.கூ.சங்க ஓய்வு நிலை ஊழியர்)

மத்தொனி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் மாசேரி, வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நடராசா 20.10.2017 வெள்ளிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - இலட்சமி தம்பதியரின் இளைய புதல்வனும், இரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வீரகத்தி மற்றும் சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சுதர்னா, சுரேக்கா, சுதா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பார்வதி, குமார் மற்றும் சிவகாமி, சின்னம்மா, முருகேசு, வேதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி இ.திரவியம், சிவபாதசுந்தரம், தெய்வேந்திரம், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் மகேந்திரம், திருமதி கு.இந்திராதேவி குலேந்திராசா ஆகியோரின் மைத்துனரும், சுதாகரன், யகுந்தன், ஸ்ரீகாந்தராசா ஆகியோரின் பாசமிகு மாமனும், பாலிகா, ஆத்மிகா, கபிநயன், சஸ்மிகா, சாணுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு மாசேரி கப்பத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாசேரி, வரணி.**


**தகவல் குடும்பத்தினர்.**

**077 726 1287**

## மரண அறிவித்தல்

### தம்பையா சிவசோதிநாதன் (சோதி)

**(ஹெற்றிபொல வியாபாரி)**



மலர்வு 23.12.1944 — உதிர்வு 11.10.2017

யாழ். சாவகச்சேரி மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவசோதிநாதன் அவர்கள் 11.10.2017 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பையா - கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், இன்பராணி அவர்களின் ஆருயிர்க் கணவரும், ஸ்ரீராமயோதி (ஸ்ரீ/கண்ணன்), பாலயோதி(பாலா), சாந்தினி, குஜேந்தினி, சிவாஜினி, தபோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தவரத்தினம், காலஞ்சென்ற இராமநாதன், செல்வராணி, பரம்சோதிநாதன், மாணிக்கம் (மங்களம்), சோமநாதன் (நாதன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயரா, சைலா, பிரதீபன், கரிபிரஷாத், ரஜீவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தேவமலர், லக்ஷிமி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கமலாசினி, மற்றும் ஜெயசோதி, பாஸ்கரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குகசீலன், கலாயினி, நலாயினி, தர்மினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், காலஞ்சென்ற யசோதரன், கேழிதரன், ரமேஷ்தரன், வாணி, தர்சிகா, லவினா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், பிரதீபன், குஜேலா ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவனேசன், இன்பநேசன், இதயராணி, விஜயராணி, புஸ்பராணி, குகநேசன், தவநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஞ்ஜய், சஜித், ஸ்ரீஜெய், ஸ்ரீயா, பவிக்கா, பாவனா, பாவேஸ், கிசோத், துசிக்கா, ஜீதன், பிரணவ், கிரிஸ், மிகிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கண்ணன் (மகன் - பிரித்தானியா) +447940202153.**
**நாதன் (தம்பி - பிரித்தானியா) +447872891114**
**சி.சின்னஜோதி (இலங்கை) +94 77675 1197**

**தகவல்: மகன் (கண்ணன்), தம்பி (நாதன்), சி.சின்னஜோதி (இலங்கை)**



## சரிந்து வீழ்ந்தது குப்பைமேடு அகற்றும் பணிகள் தொடரும்

கண்டி.ஒக்.23
சிவனொளிபாதமலையில் சரிந்த குப்பைமேட்டை அகற்றும் பணியை லக்சபான இராணுவத்தினர் நேற்று இரண்டாவது நாளாக முன்னெடுத்தனர்.
நல்லத்தண்ணி பொலிஸார், சிவில் பாதுகாப்பு குழுவினர் மற்றும் இராணுவத்தினரால் குப்பைமேட்டை அகற்றும் முதல் கட்டப்பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. இன்னும் சில தினங்கள் குறித்த பணிகள் தொடரும் எனவும், தொடர்ந்தும் லக்சபான இராணுவத்தினர் 40 பேர் கொண்ட குழுவினர் மலையில் தங்கியிருந்து பணிகளைத் தொடரவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்த 18ஆம் திகதி சிவனொளிபாதமலையின் மாகிரிதம்ப எனும் பகுதியிலே குப்பைமேடு சரிந்தமையால் சிவனொளிபாதமலைக்குச் செல்லும் நடைபாதை சுமார் 15 மீற்றர் தூரம் வரை தடைப்பட்டது. (ற.ரி4)

## சுன்னாகத்தில் விபத்து இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஒக்.23
சுன்னாகம் கே.கே.எஸ் வீதியில் தனியார் பேருந்தும் மோட்டார்சைக்கிளும் விபத்துக்குள்ளாகி இருவர் படுகாயமடைந்தனர்.
தனியார் பேருந்தும் மோட்டார்சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
மோட்டார்சைக்கிளில் முதியவரும் இளைஞனும் பயணித்தனர். இளைஞன் படுகாயம் அடைந்த நிலையிலும் முதியவர் சிறுகாயங்களுடனும் யாழ் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் சிக்கிய தனியார் பேருந்தின் முன்பக்கக் கண்ணாடி உடைந்தது. பேருந்தில் பயணித்தவர்களுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி4)

# பெண்ணின் இறப்புக்கு நீதிகோரி ஆர்ப்பாட்டம்

### மட்டக்களப்பு தனியார் மருத்துவமனைக்கு எதிரில்



மட்டக்களப்பு.ஒக்.23
மட்டக்களப்பில் உயிரிழந்த பெண் ஒருவரின் சடலத்துடன் பிரபல தனியார் மருத்துவமனைக்கு எதிரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
பெண்ணின் சடலத்தை ஊர்வலமாகக் கொண்டு சென்ற உறவினர்களும், பிரதேச மக்களும், தனியார் மருத்துவமனைக்கு எதிரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
மட்டக்களப்பு, கூழாவடி நான்காம் குறுக்கு வீதியில் வசிக்கும் 45 வயதுடைய திருமதி லதாசிறி சிவகுமார் என்னும் பெண் பிரசவத்துக்காக தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் சத்திரசிகிச்சை மூலம் சிசுவைப் பிரசவித்தார். பிரபல மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவரே சத்திரசிகிச்சையை மேற்கொண்டார் என்று கூறப்படுகின்றது.
சிசுவைப் பிரசவித்த சில மணி நேரங்களில் பெண்ணுக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறி மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு அவரைக் கொண்டு செல்லுமாறும் தனியார் மருத்துவமனை மருத்துவர் தெரிவித்தார் என்றும் கூறப்படுகிறது.
மகப்பேற்றுக்காக நடத்தப்பட்ட சத்திரசிகிச்சையின்போது இரத்தக் குழாயில் ஏற்பட்ட இரத்தக் கசிவாலேயே, அந்த பெண் உயிரிழந்தார் என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கூறப்பட்டது என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.
இந்த சம்பவத்துக்கு நீதி கோரியே ஆர்ப்பாட்டம் நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி-4)

## வாழ்வாதாரங்களை ஏற்படுத்துவதே ஐரோப்பிய ஒன்றியத்தின் இலக்கு

### அதன் பேச்சாளர் தெரிவிப்பு

அம்பாறை.ஒக்.23
வடக்கு, கிழக்கு உட்பட 7 முக்கிய மாவட்டங்களில் வாழும் வறுமைச் சமூகங்களின் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் 184 மில்லியன் யூரோக்கள் நிதியுதவியின் மூலம் பயனாளிகளை உள்வாங்கி ஐரோப்பிய ஒன்றியம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததுள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் பேச்சாளர் கலாநிதி ஓலாவ் ஹெடில்பாக் தெரிவித்தார்.
அக்கரைப்பற்று சுற்றுலா விடுதியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், வவுனியா, புத்தளம், மொனராகலை, அனுராதபுரம் போன்ற 7 மாவட்டங்களில் குறித்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
ஐக்கிய நாடுகள் அமைப்புகளான யு.என்.டி.பி, யுனிசெப், யுனொப்ஸ், எப்.ஏ.ஓ. உலக விவசாய நிறுவனம், ஐ.எல்.ஓ., ஐ.எப்.சி. பன்னாட்டு நிதிக்கூட்டுத் தாபனம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தின.
உலக விவசாய நிறுவனம் மக்களுக்கு விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடி போன்றவற்றுக்குப் பங்களிப்பு வழங்கி, வருமானத்தை ஏற்படுத்திக்கொள்ளும் நடவடிக்கைகளை முன்னெடுத்தன.
குழந்தைகளுக்கு தரமான கல்விவசதிகளையும், குடிதண்ணீர், கழிவறை, சுகாதாரப்பராமரிப்பு வசதிகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் போன்றவற்றை பெற்றுக்கொடுத்தன.
இளையோருக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதில் உதவிகளை வழங்கும் வகையில் கிழக்குப் பிராந்தியத்தைச் சேர்ந்த தொழிற்பயிற்சி நிலையங்களுடன் சேர்ந்து, தொழிற்பயிற்சிகள் வழங்கின.
அரசநிறுவனங்களுடன் சேர்ந்து, விரிவான 'மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள்' வடிவமைக்கப்பட்டு மாவட்டங்களின் வினைத்திறனான தேவை முறையில் வருமானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள், உற்பத்தித்திறன் வாய்ந்த உட்கட்டமைப்பை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கு உதவுவதனூடாக, மக்களுக்கு சிறந்த வாழ்க்கைத்தரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே எங்கள் இலக்காக அமைந்துள்ளது என்றார். (ற - ரி5)



## சங்குப்பிட்டியில் விபத்து

கிளிநொச்சி,ஒக்.23
பூநகரி சங்குப்பிட்டிப் பாலத்தில் நேற்று ஜீப் ரக வாகனமும், காரும் மோதி விபத்துக்குள்ளாகின.
யாழில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஜீப் ரகவாகனத்தை அதே திசையில் பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்று முந்திச் செல்ல முயற்சித்த போதே இந்த விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
விபத்துக்குள்ளானதில் தனியாருக்குச் சொந்தமான கார் தடம்புரண்டது. விபத்துக்களுள்ளான காரில் யாழ்.இந்திய துணைத்தூதரகத்தின் கொன்சியூலரின் மகள் பயணித்தார் என்றும் கார் சிறு சேதங்களுக்குள்ளானது என்றும் எவருக்கும் ஆபத்தும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-9.35.ரி5)

## போக்குவரத்து சிக்கலான பகுதியை பார்வையிட்டார் மனோ கணேசன்

கொழும்பு.ஒக்.23
குடிநீர் குழாய் சீரமைப்புப் பணிகளால் போக்குவரத்துக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ள பகுதிகளை அமைச்சர் மனோகணேசன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.
கொழும்பு பகுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் குடிநீர் குழாய் சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளும் பகுதிகளில் போக்குவரத்தை மேற்கொண்டு வரும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இதுதொடர்பில் உடன் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் மனோ கணேசன் பணித்தார்.
அமைச்சர் மனோ கணேசன் மற்றும் மேல் மாகாணசபை உறுப்பினர் ஆகியோரே வீதிகளை நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர். (ற.ரி4)

## நுண்கடன் தொல்லையால் உயிரை மாய்த்த தாய்

மட்டக்களப்பு.ஒக்.23
மட்டக்களப்பில் ஏழு பிள்ளைகளின் தாய் ஒருவர் நேற்றுக் காலை தவறான முடிவெடுத்து தன் உயிரைமாய்த்துக் கொண்டார் எனத்தெரிவிக்கப்பட்டது.
மட்டக்களப்பு ஆரையம்பதி தாழங்குடாவில் வசிக்கும் 47 வயதுடைய தாயே இவ்வாறு தன்உயிரை மாய்த்துக் கொண்டார்.
இவர் நுண்கடன் தொல்லையால் தன் உயிரை மாய்த்தார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ற.ரி5)

## வர்த்தக நிலையத்தில் நேற்றுத் திடீர் தீ விபத்து

கொழும்பு.ஒக்.23
கம்பளை நகரில் அம்பகமுவ பகுதியில் உள்ள வர்த்தகத் தொகுதியொன்றில் நேற்றுத் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.
கம்பளை தீயணைப்பு பிரிவினர் மற்றும் மின்சார சபை ஊழியர்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.
தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை தெரியவர வில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ற.ரி4)



## கிர்குக் நகரத்தை மீட்டெடுத்தது ஈராக்

பக்தாத், ஒக். 23
ஈராக் நாட்டில் குர்திஸ்தான் பகுதியில் ஆதிக்கம் செலுத்திவந்த குர்திஷ் ஆயுதக் குழுவிடம் இருந்து கிர்குக் நகரம் முழுவதுமாக மீட்கப்பட்டுள்ளது

ஈராக் நாட்டில் குர்திஸ்தான் பகுதியில் குர்திஷ் ஆயுதக் குழு ஆதிக்கம் செலுத்தி வந்தது. இந்தப் பகுதியை தனிநாடாக அறிவிக்க வேண்டும் என்று குர்திஷ் குழு ஆயுதக் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தது.

இந்த நிலையில் அமெரிக்க இராணுவத்தின் உதவியுடன் குர்திஷ் ஆயுதக் குழுவை விரட்டியடித்துவிட்டு அந்தப் பகுதியில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட கடந்த சில வாரங்களுக்கு முன்னர் களமிறங்கியது ஈராக். குர்திஷ்தான் பகுதியில் உள்ள எண்ணெய் வளம் நிறைந்த நகரான கிர்குக் நகரத்தின் பெரும்பகுதி கைப்பற்றப்பட்டது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நகரம் முழுவதுமாக மீட்கப்பட்டுள்ளது என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. கிர்குக் நகரம் கைப்பற்றப்பட்டமையானது குர்திஷ் தான் அமைப்புக்கு பெரும் பொருளாதாரப் பின்னடைவைக் கொடுக்கும் என்றும் கருதப்படுகிறது. (ம)

## ட்ரம்ப் வரைந்த ஓவியம் 25 லட்சத்துக்கு ஏலம்



வொஷிங்டன், ஒக். 23
அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வரைந்த ஓவியமொன்று இலங்கை மதிப்பில் சுமார் 25 லட்சத்துக்கு ஏலம் போயுள்ளது. அமெரிக்க அதிபர்ட்ரம்ப்கடந்த1995ஆம்ஆண்டுபொழுது போக்கிற்காக வரைந்த ஓவியமொன்று அண்மையில் ஏலமிடப்பட்டுள்ளது.

ட்ரம்பின் கையெழுத்தும் இடப்பட்டிருந்த அந்த ஓவியம் இலங்கை மதிப்பில் சுமார் 25 லட்சம் ரூபாவுக்கு ஏலம் போயுள்ளது. (ம)




சிரியாவின் ரக்கா நகரம் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழுவிடம் இருந்து மீட்கப்பட்டுள்ள நிலையில் ரக்கா நகரில் இருந்து கைப்பற்றப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளின் போர்த் தளபாடங்கள் பொதுமக்களின் பார்வைக்காக தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. (ம)

## கட்ட… கலை…

மட்ரட், ஒக். 23
தனக்கு உட்பட்ட கட்டலோனிய அரசைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தல் நடத்த ஸ்பெய்ன் அரசு திட்மிட்டுள்ள நிலையில், இந்த முடிவுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெய்னின் வருவாய், முதலீடு, சனத்தொகை, சுற்றுலாப் பயணிகளின் வருகை என்று அத்தனை விடயங்களி லும் கட்டலோனியாவின் பங்கு மிகவும் உச்சம், தனது செல்வங்களை ஏனைய மாகாணங்களுக்கு ஸ்பெய்ன் அரசு கொடுக்… என்று காலாகாலமாக குற்றஞ்… வருகிறது கட்டலோனியா. இத…

## மாராவியில்…



மணிலா, ஒக். 23
பிலிப்பைன்ஸின் மாராவித் தீவு ஐ.எ… ஆயுததாரிகளின்பிடியில்இருந்துமீ… நிலையில், மாராவி தீவில் மிகப்பெ… பில் கொண்டாட்டங்கள் இடம்பெற்… றன என்று பன்னாட்டு ஊடகமா… டர்ஸ் செய்தி வெளியிட்டது. பிலிப்… மாராவி தீவு கடந்த மூன்று மாத… முன்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பி…

## தலாய்லாமாவை சந்தித்தல் குற்றம்; மீண்டும் ஒருமுறை சீனா எச்சரிப்பு

பீஜிங், ஒக். 23
தலாய்லாமாவை சந்தித்தால் அது மிகப்பெரிய குற்றமாகக் கருதப்படும் என்று உலகத் தலைவர்களை சீனா எச்சரித்துள்ளது.



திபெத் புத்த மத தலைவர் தலாய்லாமாவை பிரிவினைவாதியாக சீனா கருதி வருகிறது. தலாய்லாமாவுடன் எவர் தொடர்பு வைத்துக்கொண்டாலும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது சீனாவின் வழக்கம். சீனாவிடம் இருந்து திபெத்தை பிரித்துக்கொண்டு செல்வதற்கு இவர் முயற்சிக்கிறார் என்பது சீனாவின் குற்றச்சாட்டு.

ஆனால் உலக தலைவர்கள் பலரும் தலாய்லாமாவை ஆன்மிகவாதியாகவே பார்க்கிறார்கள். பலரும் அவரைச் சந்திக்கிறார்கள். இது சீனாவுக்கு எரிச்சலை ஏற்படுத்துகிறது. தலாய்லாமாவை உலகத் தலைவர்கள் எவரும் சந்திக்கக் கூடாது. அதே நேரத்தில் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதியாகவே திபெத்தைக் கருத வேண்டும் என்பது சீனாவின் எதிர்பார்ப்பு.

இந்த நிலையில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான யூஜியோங், அண்மையில் நடைபெற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பட்டார்.

"எந்தவொரு நாடோ அல்லது எந்தவொரு நபரின் அமைப்போ தலாய்லாமாவை சந்திக்க ஒப்புக்கொண்டால், அது சீன மக்களின் உணர்வுகளின் அடிப்படையில் மாபெரும் குற்றமாகும். தலாய்லாமா விவகாரத்தை பொறுத்தவரையில், வெளிநாடுகள் மற்றும் உலக தலைவர்களின் வாதங்களை சீனா ஏற்காது. ஆன்மிகத் தலைவர் என்ற வகையில் அவரை சந்திப்பதையும் ஏற்கமாட்டோம். அவர் சொந்த நாட்டுக்குத் துரோகம் செய்துவிட்டு 1959ஆம் ஆண்டு வேறு நாட்டுக்குச் சென்று விட்டார். அவர் நாடு கடந்த அரசு என்று அவரால் சொல்லப்படுகிற ஒன்றை நிறுவி உள்ளார். அந்த அமைப்பின் ஒரே திட்டம் சீனாவில் இருந்து திபெத்தை தனியாகப் பிரித்தெடுப்பது மட்டும்தான். சில நாடுகள், அவர் அரசியல் தலைவர் அல்லர். ஆன்மிகத் தலைவர்; அரசியல் தலைவர் என்ற வகையில் தங்களது அதிகாரிகள் அவரைச் சந்திக்கவில்லை என்று கூறுகின்றன.

ஆனால் இதில் உண்மையில்லை. இது சரியும் இல்லை. சீனாவுடனான உறவுகளுக்காக, நட்புக்காக அதன் இறையாண்மையை அனைவரும் மதிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஆப்கானிஸ்தானில் தாக்குதல் 75 பேர் பரிதாப உயிரிழப்பு

காபூல், ஒக். 23
ஆப்கானிஸ்தானில் இரு மசூதிகளைக் குறிவைத்து நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் 75 பேர் உயிரிழந்தனர். ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் தாஷ்தி பார்ச் பகுதியில் அமைந்துள்ள ஷியா பிரிவினரின் இரண்டு மசூதிகளில் தொழுகை நேரத்தின் போது இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 39 பேர் உயிரிழந்தனர் என்று முதல்கட்டத் தகவல்கள் தெரிவித்திருந்த நிலையில் நேற்று மதிய நிலவரத்தின்படி உயிரிழப்பு எண்ணிக்கை 75ஆக அதிகரித்தது. இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. (ம)





# டலோனிய அரசை லைப்பதற்கு எதிர்ப்பு

டலோனிய விட்டு மீண் ஸ்பெய்ன் நிலையில், எதிர்ப்புத் து. வாய், முத சுற்றுலாப் கை என்று களி லும் பங்கு மிக செல்வங் காணங்க அரசு கொடுக்கிறது ாக குற்றஞ்சாட்டி னியா. இதனால்




கடந்த ஐந்து வருடங்களாக அங்கு தனி நாட்டுக் கோரிக்கைகளும் வலுப்பெற்றுள்ளன. இது தொடர்பான வாக்கெடுப்பையும் கடந்த மாதம் முதலாம் திகதி கட்டலோனியா நடத்தியது. பதிவான 2.3 மில்லியன் வாக்குகளில் 90 சதவீதமானவை பிரிவதற்கு ஆதரவாக அமைந்தன. இந்தத் தேர்தலை நடத்தியமைக்காக கட்டலோனிய அரசை வன்மையாகக் கண்டித்தது ஸ்பெய்ன். தற்போது கட்டலோனிய அரசைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தலைநடத்தஸ்பெய்ன் திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வந்துள்ளன.

இதற்கு கட்டலோனிய மாகாண தலைவர் பூஜ்டியமன்ட் கடும் கண்டனம் தெரிவித்தார். (ம)

# மெர்சலுக்கு ஆதரவாக ராகுல் காந்தி கருத்து

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி மெர்சல் படத்துக்கு ஆதரவாக தனது கீச்சகத்தில் மீண்டும் தமிழில் பதிவிட்டுள்ளார்.


விஜய் நடிப்பில் சமீபத்தில் வெளியான மெர்சல் திரைப்படத்தில் மத்திய அரசின் பணமதிப்பிழப்பு மற்றும் ஜி.எஸ்.டி.யால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த வசனங்கள் இடம்பெற்றிருந்தன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள தமிழக பா.ஜ.க., மேற்கண்ட காட்சிகளை படத்திலிருந்து நீக்க வேண்டும் என போர்க்கொடி தூக்கியது. இதனையடுத்தே மெர்சல் படத்துக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்துள்ளார் ராகுல் காந்தி. (ம)




# வியில் கொண்டாட்டங்கள்




ராவித் தீவு ஐ.எஸ்.ஐ.எஸ். ல்இருந்துமீட்கப்பட்டுள்ள தீவில் மிகப்பெரும் எடுப் ள் இடம்பெற்று வருகின் ட்டு ஊடகமான ரொயிட் ட்டது. பிலிப்பைன்ஸின் மூன்று மாதங்களுக்கு ஸ். அமைப்பின் பிடிக்குள் சென்றது. மாராவில் தீவில் வசித்துவந்த பாதிரியார்கள், கிறிஸ்தவ மக்கள் பலரையும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பிணையக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தது. கடந்த புதன்கிழமை ஐ. எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் விரட்டியடிக்கப்பட்டு நகரம் மீட்கப்பட்டது. இதையடுத்து மாராவி எங்கும் பரவலாக கொண்டாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)




# சூகியின் பெயரை நீக்க வேண்டும்

## ஒக்ஸ்போர்ட் பல்கலை மாணவர்கள் போர்க்கொடி

லண்டன், ஒக். 23

"ஒகஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஆங் சாங் சூகியின் பெயரை நீக்க வேண்டும்" என்று தெரிவித்து அந்தப் பல்கலைக் கழக மாணவர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

பௌத்த நாடான மியன்மாரில் ரொஹிங்ய இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது. கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழுவுக்கும், மியன்மார் அரச படைக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது. இதையடுத்து மியன்மாரில் அப்பாவி ரொஹிங்ய இஸ்லாமியர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். இதையடுத்து 6 லட்சம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

மியன்மார் அரசின் தலைமை ஆலோசகராக ஆங்சாங் சூகி உள்ளார். இவர் இந்த விடயத்தை மிகவும் கவனமாகக் கையாளவில்லை என்று கடுமையாக விமர்சிக்கப்படுகிறது.

ஆங் சாங் சூகி நோபல் பரிசில் வென்றபோது அவரது பெயர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பொறிக்கப்பட்டது. இந்தப் பெயரை நீக்குமாறு பல்கலைக் கழக மாணவர்கள் தற்போது போர்க்கொடி தூக்கியுள்ளனர். "மிகவும் பெருமைமிக்க தமது பல்கலைக் கழகத்தில் சூகியின் பெயர் இருப்பதற்கு தகுதி அற்றதொன்று" என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ம)

# அமெரிக்காவில் 30 லட்சம் பேர் துப்பாக்கிகளுடன் தினமும் பயணம்



வொஷிங்டன், ஒக். 23

அமெரிக்காவில் தினமும் 30 லட்சம் பேர் பாதுகாப்புக்காக தங்களுடன் கைத் துப்பாக்கியை எடுத்து செல்கின்றனர் என்று ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் துப்பாக்கிக் கலாசாரம் பெருகி விட்டது. இதனால் அங்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், அதையடுத்து ஏற்படும் உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன. இதனால் துப்பாக்கி வைத்திருப்பவர்கள் குறித்து வொஷிங்டன் பல்கலைக்கழக நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அதில், அமெரிக்காவில் தினமும் 30 லட்சம்பேர் தங்களுடன் கைத்துப்பாக்கியை எடுத்துச் செல்கின்றனர். மேலும் 90 லட்சம் பேர் மாதம் ஒரு முறை துப்பாக்கியை தம்முடன் எடுத்து செல்கின்றனர் என்று தெரிய வந்துள்ளது. (ம)



# சோமாலியத் தாக்குதலில் சாவு 358ஆக உயர்ந்தது

மொகடிஷு, ஒக். 23

சோமாலியத் தலைநகர் மொகடிஷுவில் உள்ள விடுதி யொன்றைக் குறிவைத்து கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட இரட்டைக்குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 358ஆக உயர்ந்தது.

சோமாலியா நாட்டின் பல பகுதிகளில் அல் கொய்தா ஆதரவு பெற்ற ஆயுதக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. தம்மால் இயற்றப்பட்ட இஸ்லாமிய சட்டத்துக்கு உட்பட்ட ஆட்சியை நாடெங்கிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்து அவை அரசுக்கு எதிராக போரிட்டு வருகின்றன.

பிரபலமான சபாரி விடுதியை இலக்குவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் சம்பவ இடத்தில் 85 பேர் உயிரிழந்தனர் என்று முதல் கட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

சிகிச்சை பயனின்றி மருத்துவமனையில் ஏராளமானவர்கள் உயிரிழக்க, உயிரிழப்பு எண்ணிக்கை பின்னர் படிப்படியாக அதிகரித்து வந்தது. தற்போது உயிரிழப்பு எண்ணிக்கை 358ஆக அதிகரித்தது.

சுமார் 300 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் அல் சபாப் என்ற ஆயுதக்குழு நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (ம)




பனாமா ஊழல் விவகாரத்தை வெளியுலகுக்கு அம்பலப்படுத்திய மால்டா நாட்டைச் சேர்ந்த பெண் செய்தியாளர் கலிஸியா குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அண்மையில் உயிரிழந்தார். மால்டாவின் பல பாகங்களிலும் அவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# சொற்பிழை! பொருட்பிழை!

புதிய அரசமைப்பு முயற்சிகளை மகாநாயக்க பீடங்கள் எதிர்த்தன. அது குறித்த செய்திகள் மறுநாள் பத்திரிகைகளில் வெளியாகின. உடனே அந்தப் பத்திரிகைகளைத் தூக்கிக் கொண்டு செய்தியாளர்களிடம் வந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மகாநாயக்க பீடங்கள் முடிவு எடுத்த கூட்டத்தில் மகாநாயக்கர்கள் இருக்கவே இல்லை, எனவே இது அவர்களின் முடிவே அல்ல, தியவதனநிலமேக்களின் முடிவுதான் என்று கொந்தளித்தார். பத்திரிகைகள் (சிங்கள, ஆங்கில) வேண்டுமென்றே இந்த முடிவுடன் மகாநாயக்கர்களின் படங்களையும் சேர்த்து வெளியிட்டன, இப்படிப் பொய்களைப் பரப்பாதீர்கள் என்று பொரிந்து தள்ளினார்.

மறுநாளே அவருக்குப் பதில் வழங்கப்பட்டது. எடுக்கப்பட்டது மகாநாயக்கர்களின் ஆசி மற்றும் அனுமதியுடனான முடிவே தான், அதில் மாற்றம் எதுவும் இல்லை, மகாநாயக்க பீடங்கள் தாமாகக் கூடி எந்தத் தன்னிச்சையான முடிவுக்களையும் எடுக்கவில்லை என்று தெளிவுபடுத்தப்பட்டது. அஸ்கிரிய மகாநாயக்கர் நாட்டில் இல்லாது இருந்தபொழுதிலேயே அந்த விளக்கம் வழங்கப்பட்டது. ஆனால், அதனை மறுத்து மகாநாயக்கர்கள் எவரும் எந்தவொரு கருத்தையும் இதுவரையில் வெளியிடவில்லை.

எடுக்கப்பட்டது மகாபீடங்களின் முடிவு மட்டுமல்ல மகாநாயக்கர்களின் முடிவும்தான் என்ற உண்மை தெளிவாகத் திட்டவட்டமாக எடுத்து வைக்கப்பட்ட பின்னர் அது குறித்துத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வாயே திறக்கவில்லை.


இது நடந்தது தெற்கில். அது நடந்து முடிந்து விட்டதா, இங்கே வடக்கில் நேற்று ஒரு சம்பவம் இடம்பெற்றது. அரசியல் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் பத்திரிகை மீது ரணில் விக்கிரமசிங்கவைப்போன்றே குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிங்களப் பத்திரிகைகளை இலக்கு வைத்துப் பல விமர்சனங்களைச் செய்தாலும் தமிழ்ப் பத்திரிகைகளும் அப்படித்தான் நடந்துகொள்கின்றன என்று அவர் தெரிவித்தார். உதாரணத்திற்கு உதயன் பத்திரிகையையும் சுட்டிக்காட்டினார். அதில், வவுனியாவில் நடந்த நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரையில் ''ஒற்றையாட்சி'' என்பதைக் குறிப்பிடவேயில்லை என்று கூறினார். ''ஏக்கிய பாவய'' என்றே குறிப்பிட்டார் என்றும் அதற்கு ஒன்றாக இருப்பது என்றே அர்த்தம் என்றும் கூறினார். ஆனால், அரச தலைவர் தன்னுடன் அழைத்து வந்த தமிழ் மொழி பெயர்ப்பாளருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அளவுக்கு மொழி அறிவு இல்லையோ என்னவோ, அவர் தெளிவாக ''ஒற்றையாட்சி'' என்றே நிகழ்வு மேடையில் மொழிபெயர்த்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கொழும்பில் வசிப்பவர் என்பதாலும் அங்கேயே சட்டத்தரணியாகத் தொழில் செய்பவர் என்பதாலும் அவருக்குச் சிங்கள மொழியறிவு அலாதியாக இருக்கலாம். ஆனால் அவரது அரசியல் முன்னோடிகள், சிங்களம் வேண்டாம் என்று உசுப்பேற்றி, தனித் தமிழீழம் கேட்டதற்குப் பின்வந்த தலைமுறைகளைச் சேர்ந்த வடக்கு வாசிகளுக்கு அத்தகைய சிங்கள மொழி அறிவு இல்லை என்பதால், அவர்கள் அரச தலைவரின் மொழிபெயர்ப்பாளரை நம்பியே செய்தியை எழுத வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்த நிலமையை உருவாக்கியதற்கான பொறுப்பைத் தன் முன்னோடிகள் சார்பில் சுமந்திரன் ஏற்றுக்கொள்வாரா என்பது தெரியவில்லை. ஆனால், ஓரளவுக்குச் சிங்கள மொழியறிவு உள்ள தமிழர்கள் பலரும் ''ஏக்கிய ராஜ்ஜிய'' என்பதை ஒற்றையாட்சி என்றே மொழிபெயர்க்கிறார்கள். அதைக்கூட ஒருமித்த நாடு என்றே சுமந்திரன் கூறுகின்றார். எனவே இந்தப் பிரச்சினையை மொழியறிவாளர்கள்தான் தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, பத்திரிகையாளர்கள் அல்லர்.

பத்திரிகைகள் தவறான தகவல்களை மக்களுக்குக் கொடுக்கவில்லை என்பது இந்த இரு சம்பவங்களிலும் உறுதியாகின்றது. அரசியல்வாதிகள் விரும்பியபடி அந்தச் செய்திகளைக் கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை. உண்மைகள் சுடத்தான் செய்யும். அப்படியே ஏதாவது தகவல்கள் தவறாகியிருந்தால் அதற்குக் காரணமும் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளே என்பதை இதைவிட நல்ல உதாரணத்துடன் விளக்க முடியாது என்றே உதயன் எண்ணுகின்றான்.

சொற்களுக்குப் பொருள் ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொல்ல முடியும். ஆனால், மக்கள் அதை எப்படிப் புரிந்துகொள்கின்றார்கள் என்பதே முக்கியம். பத்திரிகைகள் மக்களுக்குத் தகவல் சொல்கின்றனவே தவிர, அரசியல்வாதிகளுக்கல்லவே.



# எந்த நேரத்திலும் முடிவுக்கு வரலாம் கூட்டு அரசின் ஆயுள்

சிங்கள மூலம்:
ஆதிபாத (மவ்பிம)
தமிழில்:வீ.எஸ்.ரி.

டட்லி சேனநாயக்கவின் அரசு வீழ்ச்சிகண்டமைக்குக் காரணம் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவே அதே போன்று இன்றைய அரசும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் அன்றல்லாது, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவினாலேயே வீழ்ச்சியடையப் போகிறது என்று சமீபகாலமாக விமர்சிக்கப் படுகிறது. இது குறித்து ஆழமாக அவதானிக்கையில் மேற்குறித்த கருத்து பொய்யானதல்ல என்பது புலனாகிறது. அன்றைய காலகட்டத்தில் நாட்டின் உயர்தலைவராக டட்லியும், இரண்டாம் நிலைத்தலைவராக ஜே.ஆரும் விளங்கினர். அதே போன்று இன்றைய நிலையில் அரசின் முதன்மைத் தலைவராக மைத்திரியும், இரண்டாம் நிலைத் தலைவராக ரணிலும் விளங்குகின்றனர். அன்று ஜே.ஆர். உலக வங்கியின் தாளத்துக்கு நடனமாடி டட்லி தலைமையிலான அரசை மண்கவ்வ வைத்தார். இன்று அவர்கள் சார்ந்திருந்த ஐ.தே. கட்சி, இலங்கை மத்திய வங்கியையே மண்கவ்வ வைத்துள்ளது.

### நான் நாட்டின் முடிசூடா மன்னன் எனப் பெருமை பேசினார் ஜே.ஆர்.

1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சியைத் தோய்த்துத் துவைத்துப் போட்ட ஜே.ஆர்., ஐக்கிய தேசியக் கட்சியை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மையுடன் பெரு வெற்றிபெறச் செய்தார். சில மாதங்கள் இடைவெளியில் நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட அரச தலைவர் நடைமுறையை அறிமுகம் செய்து வைத்தார். தாம் இந்த நாட்டின் முடிசூடா மன்னனென ஜே.ஆர். பெருமையடித்துக் கொண்டார். ஆனால் பின்வந்த மகிந்தவை நாட்டின் அரசரென நாட்டுமக்கள் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடினர். தமக்கு அடுத்ததாகச் செயற்பட தமது பரம்பரையினர் என எவரும் அரசியலில் இல்லை என அந்தக் காலகட்டத்தில் ஜே.ஆர். அடிக்கடி கூறி வந்துள்ளார். ஆனால் இத்தனைக்கும் அவரது உறவினரான எட்மன் விக்கிரமசிங்க ஐ.தே. கட்சியின் நிறைவேற்றுச்சபை உறுப்பினராகச் செயற்பட்டுவந்திருந்தார். ஜே.ஆருடன் மிக நெருக்கமாகச் செயற்பட்ட எட்மன் விக்கிரமசிங்கவின் மகனான ரணில் விக்கிரமசிங்கவும் கூட கட்சியின் நிறைவேற்றுச்சபை நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டிச் செயற்பட்டு வந்திருந்தார். அவர் ஐ.தே.கட்சியின் முடிக்குரிய இளவரசராக அந்த வேளையில் அடையாளப்படுத்தப் பட்டு வந்தார். அத்தகைய ரணில் இன்று ஐ.தே.கட்சியின் தலைவர், அதுவுமின்றி நாட்டின் தலைமை அமைச்சர். தமக்குப் பின் அரசியலில் செயற்பட பரம்பரையினர் எவருமில்லை என்பதால் அமெரிக்காவையும் உலக வங்கியையுமே தமக்கு ஆதரவளிக்க ஜே.ஆர். நம்பியுள்ளாரென அந்த வேளையில் இடதுசாரிகள் விமர்சித்து வந்தனர்.

டட்லியின் அரசில் நிதி அமைச்சர் பதவியை வகித்து உலக வங்கியின் தாளத்துக்கு ஆடியதாலும், எப்போதும் அமெரிக்காவுக்கு ஆதரவுப்போக்கை வெளிப்படுத்தி வந்ததாலும் 1950களில் ஜே.ஆர். கடுமையாக விமர்சிக்கப்பட்டார். ரணிலும் கூட தமக்குப் பின்னர் அரசியல் வாரிசு என தமது பரம்பரையில் எவருமில்லை எனக் கூறிவந்துள்ளார். அது உண்மையேயாயினும் மாமனார் ஜே.ஆரைப் போன்று மருமகன் ரணிலும் அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் சிலர் விமர்சித்து வருகின்றனர்.

> எப்போதும் அமெரிக்காவுக்கு ஆதரவுப்போக்கை வெளிப்படுத்தி வந்ததாலும் 1950களில் ஜே.ஆர். கடுமையாக விமர்சிக்கப்பட்டார். ரணிலும் கூட தமக்குப் பின்னர் அரசியல் வாரிசு என தமது பரம்பரையில் எவருமில்லை எனக் கூறி வந்துள்ளார். அது உண்மையேயாயினும் மாமனார் ஜே. ஆரைப் போன்று மருமகன் ரணிலும் அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் எனச் சிலர் விமர்சித்து வருகின்றனர்.

### ஜே.ஆரும், ரணிலும் பிடிவாத குணம் கொண்டவர்கள்

ஜே.ஆரிடம் பிடிவாத குணம் நிறையவே காணப்பட்டது. ரணிலிடமும் அத்தகைய போக்கே காணப்படுகிறது. ஜே.ஆரின் குருதியில் ஊறியிருந்த கம்யூனிச எதிர்ப்பு உணர்வு, அமைச்சரவை உறுப்பினர்களூடாக இலங்கையின் பொருளாதாரச் சிக்கலுக்கு முகம் கொடுக்க நேர்ந்த வேளை, சீனா மற்

றும் இலங்கைக்கு இடையேயான இறப்பர். அரிசி ஒப்பந்தத்தில் கையெழுத்திட 1952ஆம் ஆண்டில் ஐ.தே கட்சி அரசில் வர்த்தக அமைச்சராகவிருந்த ஆர்.ஜீ. சேனநாயக்க சீனாவுக்குச் செயன்றிருந்தார். நிதி அமைச்சராக இருந்த ஜே.ஆருக்கும், ஆர்.ஜி. செனநாயக்கவுக்கும் இடையில் சுமுக உறவு நிலவவில்லை.

கம்யூனிச எதிர்ப்பாளரான ஜே. ஆர். அமெரிக்க ஆதரவாளராகவும் இருந்து வந்தார் இதனால் அந்த வேளையில் அமைச்சரவைக் கூட்டத்தின் போது அடிக்கடி அமைச்சர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகளும் நிலவி வந்தன. சீன-இலங்கை தரப்புக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட அரிசி-இறப்பர் ஒப்பந்தம் காரணமாக, இலங்கையைப் பொருளாதார சிக்கலில்இருந்துவிடுவித்தமைக்காக ஆர்.ஜீ.சேனநாயக்க பாராட்டபட்ட வேளை, ஜே.ஆரோ அவருடன் முரண்பாடான நிலைப்பாட்டுடன் செயற்பட்டு வந்தார். இந்த சிக்கலில் இருந்து விடுபட முடியாத ஆர். ஜீ. சேனநாயக்க 1954ஆம் ஆண்டில் தாம் தமது அமைச்சர் பதவியைத் தாமாகத் துறந்தார்.

அந்த வேளையில் நாடு கடும் பொருளாதாரச் சிரமத்தில் சிக்கியிருந்தது. அரசுக்கு எதிரானவர்கள் அரசைப் பதவி விலகுமாறு கோரி ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வந்தனர்.

இலங்கையின் முழு ஆதரவையும் அமெரிக்காவுக்கு வழங்கும் தமது இடத்தை எவ்விதத்திலாவது நிறைவேற்றி அமெரிக்க உதவிகளைப்பெற ஜே.ஆர். கடும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அமெரிக்க அதிபரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பைக்கூட ஜே. ஆரால் ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஆனால் தற்போது ரணிலும் மைத்திரியும் ஜே. ஆரால் முடியாது போயிருந்த அந்த முயற்சியைச் சாதகமாக்கிக் கொண்டபோதிலும் அதனால் நாட்டுக்கு எந்தவித நன்மையும் கிட்டியதாகக் கருத இயலவில்லை. அந்த வகையில் நோக்கும்போது அமெரிக்காவை விட பங்களாதேஷ் நாடு இலங்கைக்கு உதவியுள்ளதாகக்கூறிட இயலும்.

### தொடர்ந்தும் தவறுகளை மேற்கொள்ள அரசு முயல்கிறது என்று விமர்சிப்பு

நாளுக்கு நாள் இன்றைய அரசு நலிவு நிலை காணுவதைப் பார்த்துஎதிரணியினார்சிலிர்த்துக் கொள்கின்றனர். பொது மக்களும் கூட அதிருப்தி வெளிப்படுத்தி வருகின்றனர். அரசின் கடந்த இரண்டாண்டுகள் காலச் செயற்பாடுகள் தவறுகளை சீர் செய்து கொள்ளல் என்பதற்குப் பதிலாக தொடர்ந்தும் தவறுகளை மேற்கொள்ளல் என்ற வகையில் தொடர்கிறது. பொருளாதார விற்பன்னர்கள் என்னதான் செய்துள்ளார்கள்? தேசியவிவசாயஉற்பத்தியை காப்பாற்றப் போவதாக வாக்குறுதிவழங்கி பதவிக்கு வந்த இந்த அரசு வெளிநாடுகளில் இருந்து 'பிளாஸ்ரிக்' அரிசி இறக்குமதி செய்யும் நிலைக்குச்சென்றுள்ளதா என நாட்டு மக்கள் ஆத்திரத்துடன் கேட்கிறார்கள்.

நாட்டில் போரை முடிவுக்குக் கொண்டுவந்தமை ஒரு தேசியக் குற்றம் என்பது போன்று கருதும் ஒரு சில தரப்பினர் பிரிட்டனில் பயங்கரவாதத் தாக்குதல் இடம்பேறும்போது குழப்பம் அடைகின்றனர். அங்கு தாக்குதல் மேற்கொண்டால் அவர்கள் பயங்கரவாதிகள். இங்கு தாக்குதல்களில் ஈடுபட்டோர் விடுதலை விரும்பிகளா? லண்டனில் இடம்பெற்ற தாக்குதல்களால் பிரிட்டன் பொது மக்கள் பீதி வசப்பட்டுள்ளனர்.

பிரிட்டனின் முன்னாள் தலைமை அமைச்சர் டெவிட் கமரூன் இலங்கைப் பயணத்தின் போது போரை முடி வுக்குக் கொண்டுவந்தமை தவறு என்று தெரிவித்திருந்தார். இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பிரேரணை கொண்டுவரப்பட உதவியவரும் இந்த டேவிட் கமரூனே. அந்தப் பிரேரணையை நிறைவேற்ற பல வழிகளிலும் அவர் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாத்தில் இலங்கை அரச படைகள் போரைத் தீவிரப்படுத்தியிருந்த வேளையில் போர் நிறுத்தத் திட்டத்துடன் பிரிட்டன் அயலுறவுத்துறை அமைச்சரும் பிரான்ஸ் அயலுறவுத்துறை அமைச்சரும் இலங்கைக்கு வந்திருந்தனர். அண்மையில் பிரிட்டனிலும் பிரான்ஸிலும் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்ற போது இவர்கள் அவை குறித்து கவலைப்பட்டனர்.

### தத்தமக்குப் பிரச்சினைகள் வரும்போதே விழித்துக் கொள்கின்றன உலக நாடுகள்

இனியும் பொறுமை காத்துக் கொள்ள இயலாத பிரிட்டன் அரசு, ஆயுத கலாசாரத்தை அடியோடு அழிக்க வேண்டுமாயின் தனது நாட்டின் மனித உரிமைகள் பேணல் சட்டத்திலும் மாற்றம் கொண்டுவரத் தயார் என்று தெரிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி (9-11 தாக்குதல்) அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள், இராணுவத் தலைமையகமான பென்ரகன் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தப்படும் வரை அமெரிக்காவும் கிட்டத்தட்ட பிரிட்டனின் மனோநிலையையே கொண்டிருந்தது. இந்தத் தாக்குதல்களை அடுத்தே அமெரிக்காவும் விழித்துக்கொண்டது.


இந்தியா ஆகாய மார்க்கமாக உணவுப் பொட்டலங்களை விநியோகித்து இலங்கையின் இறைமையை கேலிக்கு உட்படுத்தியது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை கட்டாமாக்கித் திணித்து இலங்கைக்கு உதவி புரிந்தது. அதே விடதலைப் புலிகள் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்ததை அடுத்து இலங்கை விடயத்தில் இந்தியா ஒதுங்கிச் செயற்பட ஆரம்பித்தது. தமக்கெனப் பிரச்சினைகள் வரும் போதுதான் யதார்த்தம் புரியும் என்பது உண்மையே.


நாட்டின் உள்ளக ரீதியில் மட்டுமன்றி நாட்டுக்கு வெளியிலும் இலங்கை எதிர்நோக்கும் சவால்கள் ஏராளம். ஜே.ஆரின் கடந்த கால வரலாறும் ரணிலின் இன்றைய கால நகர்வுகளும் இதற்கு தக்க சான்று.

நாட்டின்வளங்களில்விற்கக்கூடிய அனைத்தையும் வெளிநாடுகளுக்கு விற்றுத்தீர்க்கும் கொள்கையை இன்றைய அரசு கடைப் பிடிக்கிறது என்று குற்றஞ்சாட்டாதவர்கள் எவரும் இல்லை. அது குறித்த விமர்சனங்களுக்கு பதில் ஏதும் தெரிவிக்க இயலாத நிலையில் இன்றைய கூட்டு அரசு வாயை மூடிவைத்துள்ளது.

அந்த வகையில் இலங்கையின் அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கினால், எவராலும் வெல்லப்பட முடியாத விதத்தில் மக்கள் அபிமானம் பெற்றுத்திகழ்ந்த அரச தலைவர்கள் குறுகிய கால இடைவெளியில் நாட்டு மக்களால் அதிகாரத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டுள்ளமையை அவதானிக்க இயலும். எனவே இன்றைய அரசுக்கு எதிராக மக்கள் எந்த வேளையிலும் கிளந்த்து எழக்கூடும் என்கிற அபாய நிலமையே தற்போதுள்ளது.

> “
> **நாட்டின் வளங்களில் விற்கக்கூடிய அனைத்தையும் வெளிநாடுகளுக்கு விற்றுத்தீர்க்கும் கொள்கையை இன்றைய அரசு கடைப் பிடிக்கிறது என்று குற்றஞ்சாட்டாதவர்கள் எவரும் இல்லை. அதுகுறித்த விமர்சனங்களுக்கு பதில் ஏதும் தெரிவிக்க இயலாத நிலையில் இன்றைய கூட்டு அரசு வாயை மூடிவைத்துள்ளது. அந்த வகையில் இலங்கையின் அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கினால், எவராலும் வெல்லப்பட முடியாத விதத்தில் மக்கள் அபிமானம் பெற்றுத் திகழ்ந்த அரசதலைவர்கள் குறுகிய கால இடை வெளியில் நாட்டுமக்களால் அதிகாரத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டுள்ளமையை அவதானிக்க இயலும்.**





## ஆசிரியருக்கான கடிதம்

# பனை, தென்னை வளங்களை காப்போம்

போருக்கு முன்னர் அல்லது 2000ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது உற்பத்திகளுக்கு கேள்வியும் அவற்றின் மூலமான பயன்பாடுகளும் உச்சம் பெற்றிருந்தமை புரிந்துகொள்ளக் கூடியதே. ஆனால் இன்று பயன்பாடு இல்லாததால் எங்கள் செல்வங்கள் கேட்பாரற்று வீதிகளிலும் காணிகளிலும் வீணே கிடந்து உக்கிப் போகின்றன. சீமெந்தும் தகரமும் வந்து பனம்மட்டைகள் தேவையற்றவை என்றாகிவிட்டது. எங்கு பார்த்தாலும் மதில், தகர வேலிகள்தான். ஓடுகள், தகரம், சீற்வந்து கிடுகுகள் தேவையற்றுவிட்டன. காலமுன்னேற்றம் நல்லது. ஆனால் இவற்றை மறுபயன்பாட்டுக்கு அதாவது வேறு ஏதாவது வகையில் பயன்படுத்த இயலுமா என அறிவியலுடன் கலந்து சிந்தித்தால் வடக்கின் பொருளாதாரத்தை மிகச் சிறந்த முறையில் கட்டியெழுப்பலாம். ஒரு பாதை மூடினால் இன்னோர் பாதை இல்லாமலா போய்விடும்? எமது பனை, தென்னைச் செல்வங்கள் என்றும் எம்மோடு பின்னிப் பிணைந்து நிற்கவல்லன. எனவே கேட்பாரற்று வீணாகும்படி விட்டுவிடாமல் ஏதாவது வகையில் பயன்படுத்த வேண்டும். கைவினைப் பொருள்கள் ஏற்றுமதி, ஓலைப் பைகள் ஆகியன பொலித்தீனுக்குப் பிரதீயீடாகப் பயன்படும்.

ஒரு சோடி சிரட்டையை 75 சதம்படி விற்று கொப்பி பேனா வேண்டிப் படித்ததையும், வீதியில் கிடந்த பனையோலை மட்டையை எடுத்ததற்காக குடும்பச் சண்டை (காணிக்காரருடன்) உருவானதும் ஒரு காலத்தில் இவற்றின் பெறுமதிக்கு தக்கச் சான்று. எனவே காலங்காலமாக கிடைக்கக் கூடிய எமது மூலப் பொருள்களை அழிந்திட விடாது (விறகுக்குக் கூட பயன்படுவது குறைந்து வருகிறது) எம்முடன் தக்கவைக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அவசியம்.

நா. துஷாந்

# அடிப்படை வருடத்தின் மீதான வருட பணவீக்கம் குறைவடைந்துள்ளது

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் தகவல்

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கம் கடந்த மே மாதத்தில் 7.1 வீதத்திலிருந்துடன் ஜீன் மாதத்தில் 6.3 வீதமாகக் குறைவடைந்துள் ளது என்ற தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

ஜீன் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்துக்கான பங்களிப்புகள் முறையே 3.9 வீதமாகவும், 2.4 வீதமாகவும் இருந்ததுடன் 2016 ஆண்டு இதேகாலப்பகுதியில் பணவீக்கத்திற்கான மேற்படி இரு பிரிவுகளில் இருந்து பங்களிப்புகள் முறையே 3.4 வீதமாகவும், 3.1வீதமாகவும் பதிவிடப்பட்டுள்ளன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிட்டு நோக்குகையில் கடந்த ஜீன் மாதத்தில் பதிவாகிய 123.4 என்ற சுட்டெண் மாற்றமானது மே மாதத்தில் 121.8 சுட்டெண்ணாக அதிகரித்துள்ளது. குறிப்பாக மே மாதத்துடன் ஒப்பிடுகையில் அதன்பின்பான ஜீன் மாதத்தில் 1.6 சுட்டெண் புள்ளி அல்லது 1.3 சதவீத அதிகரிப்பினை வெளிக்காட்டியுள்ளது.

உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 1.30 வீதத்தாலும் மற்றும் உணவல்லாப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 0.03 வீதத்தாலும் அதிகரித்துள்ளமையே இந்த மாதாந்த மாற்றங்களுக்கான முதன்மைக் காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தவிர உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கு மரக்கறி, சின்ன வெங்காயம், புதிய மீன், அரிசி, தேங்காய், கருவாடு, வெள்ளைப்பூடு மற்றும் உருளைக்கிழங்கு, ஆகியவற்றின் விலை நிர்ணயத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணம்.மேலும் வாழைப்பழம், பப்பாசி, முட்டை, சீனி மற்றும் அன்னாசி போன்ற உணவுப் பொருள்கள் குறித்து சுட்டெண்ணில் குறைந்த செலவுப் பெறுமதி பதிவாகியுள்ளமை நோக்கத்தக்கது. (ஒ)

# நிதிப் பற்றாக்குறையை சமநிலைப்படுத்த நடவடிக்கை

### நிதி அமைச்சர் மங்கள சமரவீர கருத்து



**“எதிர்வரும் 3 வருட காலப்பகுதிக்கு உலக வங்கிக் குழுக்களிடம் இருந்து இலங்கைக்கு ஆயிரத்து 340 மில்லியன் டொலர் தொகை மதிப்பீடு உடைய நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிகள் பெற்று கொடுக்கப்படும்”**

நடப்பாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையை சமநிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறையை 3.5 வீதம் குறைக்கவும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,

“உலக வங்கியின் இயக்குநர் சிரிதிஹோவை நாட்டின் தற்போதைய திட்ட நடைமுறைகளுக்கும்மற்றும்முன்மொழியப்பட்டதிட்டங்களுக்கும் உதவி புரிந்துள்ளார். உலக வங்கியிடம் இருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவைப் பெறுவது குறித்து இருவகையான திட்டங்களை அவர் முன்மொழிந்துள்ளார்.சமூகப் பாதுகாப்பு வலையமைப்புத் திட்டமானது உலக வங்கியிடம் இருந்து வழங்கப்பட்டு வருகிறது.இதற்கு முன்பாக கடந்த 2014 ஆம் ஆண்டு தொடக்கம் நடப்பாண்டின் இதுவரையான காலப்பகுதிவரை இலங்கைக்கு 660 மில்லியன் ரூபா தொகை மதிப்பீடு உடைய நிதி உதவி சர்வதேச அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது” - என்றார். (ஒ)

# காப்புறுதித்துறை தொடர்ச்சியான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது

## பொதுக் காப்புறுதி வர்த்தகப்பிரிவில் உயர் அடைவு பதிவு

இலங்கையின் காப்புறுதித்துறை கடந்த ஆண்டு தொடர்ச்சியான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

மொத்த எழுதப்பட்ட பிறிமியம் (GW) ஆனது நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வர்த்தகப்பிரிவில் சிறந்த வளர்ச்சியை வெளிக்காட்டியுள்ளது.

மேற்படி இரு பிரிவுகளினூடான மொத்த ஜி.டபிள்யு.பி (GWP) வருமானம் கடந்த ஆண்டு ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 969 மில்லியன் ரூபாவாக காணப்பட்டுள்ளது. இதனை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 962 மில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது 16.27 வீத வளர்ச்சியாகும்.

நீண்டகால காப்புறுதிப் பிரிவின் ஜி.டபிள்யு.பி (GWP) ஆனது 2015 ஆம் ஆண்டு 53 ஆயிரத்து 691மில்லியன் ரூபாவாக உயர்வடைந்துள்ளது.




“2015 ஆம் ஆண்டு பொதுக் காப்புறுதித் துறையில் ஜி.டபிள்யு.பி (GWP) வருமானமானது 69 ஆயிரத்து 271 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன் கடந்த ஆண்டு 79 ஆயிரத்து 474 மில்லியன் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. இது 14.73 வீத அதிகரிப்பாகும்.”

இந்தக் காலப்பகுதியில் பொதுமக்களிடையே காப்புறுதி தொடர்பான விழிப்புணர்வானது அதிகரித்ததைத் தொடர்ந்து காப்புறுதித்துறையானது சிறந்த வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் உள்நாட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், புதிய ஆயுள் காப்புறுதிகளும் அறிமுகம்செய்யப்பட்டன.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீளச் செலுத்தப்பட்ட காப்புறுதி பிறிமியமானது கடந்த ஆண்டு 2 ஆயிரத்து 357 மில்லியன் ரூபாவாக பதிவிடப்பட்டுள்ளது.

இதனை 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும் போது 35.62 வீதமான அதிகரிப்பு தென்படு கிறது. 2015ஆம் ஆண்டு ஆயிரத்து 738 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ‘நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்’ தொடர்பில் இணையம்

### தொகைமதிப்பு மற்றும் புள்ளவிவரத்திணைக்களம் அறிமுகப்படுத்தியது

‘இலங்கையில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் குறிகாட்டிகளின் அந்தஸ்து 2017” எனும் தலைப்பிலான வெளியீடொன்றையும், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் பற்றிய தனது வகைப்படுத்தப்பட்ட தகவல்களையும் மக்களிடையே வெளிப்படுத்துவதற்கு இணையதள மூலமொன்றை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத்திணைக்களம்அறிமுகம்செய்துள்ளது.

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளானது (SDG) 169 இலக்குகளையும், 244 குறிகாட்டிகளையும் கொண்ட பதினேழு குறிக்கோள்களின் ஒருமித்த தொகுப்பாக விளங்குகிறது.

இந்த வெளியீட்டின் முதற் பிரதி தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.ஜே.சதரசிங்கவால் பிரதி சபாநாயகரும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் பற்றிய நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவருமான திலங்க சுமதிபாலாவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த இணையத்தளம் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய நிகழ்ச்சித் திட்டங்களை அளவீடு செய்து குறிக்கோள்களை அடைவதற்கும், அனைத்துப் பங்குதாரர்களின் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கும் ஒத்துழைப்புகளை வழங்கும் ஆரம்பத் தளமாகத் தொழிற்படவுள்ளது.

மேலும் 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ நாடுகள் புதிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் அங்கமாக வறுமையை ஒழித்தல், பூமியைப் பாதுகாத்தல் மற்றும் அனைவருக்குமான சுபீட்சத்தை உறுதி செய்தல் என்பன தொடர்பில் குறிக்கோள் தொகுதியொன்றை நிறைவேற்றியது. இது ‘எமது உலகை மாற்றியமைத்தல் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல்” என உத்தியோகபூர்வமாக அழைக்கப்படுகின்றமை சுட்டிக் காட்டத்தக்கது. (ஒ)

# உற்பத்தி விலைச் சுட்டெண்களின் மாதாந்த அசைவு மாதிரி

| முதன்மைப் பொருளாதார நடவடிக்கைகள் | உற்பத்தி விலைச்சுட்டெண் | | மாதமாற்ற விகிதம் (%) |
|---|---|---|---|
| | 2017 ஜூலை | 2017 ஓகஸ்ட் | (2017 ஓகஸ்ட் / 2017ஜூலை) |
| அனைத்துச் செயற்பாடுகள் | 126.4 | 125.2 | -0.9 |
| விவசாயம் | 166.9 | 163.0 | -2.3 |
| உற்பத்தி | 109.2 | 109.1 | -0.1 |
| மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் | 85.5 | 84.1 | -1.6 |

> பெற்றோரோ அல்லது ஏனையவர்களோ பிள்ளைகளிடத்திலே அன்பினை வெளிக்காட்டும் போது அந்த குழந்தையிடம் மகிழ்ச்சி, உற்சாகம்,ஆற்றல்,ஆளுமை போன்ற மனவெழுச்சிப் பண்புகள் தோற்றம் கொள்ளும். அதன் பயனுறுதியாக நற்செயல்களில் ஈடுபடுதல்,அனைவரையும் மதித்து நடத்தல் போன்ற பல நேர்மறையான நடத்தைக் கோலங்கள் சமூகத்தின்பால் வெளிக்காட்டப்படும்.



# ‘அன்பெனும் இறை’

சி.சிந்துஜா

## குழந்தையின் மனவெழுச்சிசார் நடத்தையின் வழிநடத்தல் கருவி

மனவெழுச்சி என்பது மனிதன் கொண்டுள்ள இயற்கையான இயல்பின் விளைவாக ஏற்படும் உணர்வாகப் பொருள் கொள்ளப்படுகின்றது. இவை சூழ்நிலையில் ஏற்படும் துண்டல்களுக்கு ஏற்பவே செயற்படுகின்றன. இத்தகு மனவெழுச்சிகள் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாக விளங்குகின்றன.மனவெழுச்சிகள் எவ்வாறு செயற்பாடுகளுக்கு அதாவது நடத்தைகளுக்கு உந்துதலாக அமைகின்றதோ அவ்வாறே மெய்பாடுகளையும் ஏற்படுத்துகின்றன.

### மனவெழுச்சி

மனவெழுச்சி ஏற்படுவதற்கு முதன்முதலில் உயிரினங்கள் உணரக்கூடிய துண்டல் கிடைக்கப்பெற வேண்டும். ஏதாவதொரு தூண்டல் காரணமாக ஏற்படும் உணர்வே மனவெழுச்சியின் ஆரம்ப நிலையாகும். அந்தவகையில் 'புலோமின்' என்பவர், 1985 ஆம் ஆண்டு மனவெழுச்சியினை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து பின்வருமாறு விளக்கியுள்ளார்.அதாவது,
“துண்டல் காரணமாக ஒரு உயிரியில் இரண்டுவிதமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவை உடல் மாற்றம் (அகரீதியான துலங்கல் துண்டல் துலங்கல் செயற்பாடுகள்) ஆகவும், உளவியல் மாற்றம் (அறிவு சார்ந்த எதிர்த்தாக்கம் அகம் சுரக்கம் சுரப்பியின் தொழிற்பாடு) ஆகவும் அமைந்திருக்கும்” எனக் கூறுகின்றார்.

### மனவெழுச்சிசார் பண்புகள்

அந்தவகையில் ஒரு குழந்தையிடம் காணப்படும் மனவெழுச்சிசார் பண்புகளாக கோபம்,மகிழ்ச்சி, கவலை,எதிர்பார்ப்பு,ஏமாற்றம்,அவமானம்,பொறாமை,குரோதம்,அச்சம்,மரியாதை, அதிர்ச்சி,தனிமை,பதற்றம், வெட்கம்,நன்றி,பெருமை,சோர்வு,உற்சாகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான மனவெழுச்சிப் பண்புகளைக் கொண்ட குழந்தைகள் சமூகத்தின் மத்தியில் பல்வேறுவகையான நடத்தைக் கோலங்களை வெளிக்காட்டுகின்றன.இந்த நடத்தைக் கோலங்கள் நேர்மறையான நடத்தைக் கோலமாகவோ அல்லது எதிர்மறையான நடத்தைக் கோலமாகவோ அமையலாம்.
ஒருவர் மனவெழுச்சி சார்ந்த நேரான அல்லது எதிரான நடத்தைக் கோலங்களை சமூக வெளியில் வெளிப்படுத்துவதால், குழந்தைப் பருவத்தில் ஓர் குழந்தைக்கு, பெற்றோரும் ஏனையவர்களும் ஊட்டிய அன்பின் வகைமாதிரி எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது அல்லது நடத்தையினைத் தீர்மானிக்கிறது என்பதனை நோக்குதல் வேண்டும்.
பெற்றோர்கள் அனைவரும் தங்களது குழந்தைகள் மீது எப்போதும் அன்பு வைத்திருப்பார்கள் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துகளுக்கும் இடமில்லை. ஆனாலும் அநேகமானவர்கள் அந்த அன்பினை பிள்ளைகளிடத்தில் வெளிக்காட்டாமல் விடுகின்றனர்.அது ஒரு தவறான செயற்பாடாகும்.
ஏனெனில் குழந்தைகளிடத்தில் அன்பினை வெளிப்படுத்தும் போதே அவர்களால் அவ் அன்பினை உணர்ந்து கொள்ள முடிவதுடன், அதனை அனுபவிக்கவும் அதற்கேற்ப மனவெழுச்சிசார் நடத்தைகளை வெளிக்காட்டவும் முடிகிறது.

### ‘ஜோன் ஸ்ரீபன்சன்’ கூறும் அன்பு வெளிப்பாட்டு முறைகள்


அந்தவகையில் அமெரிக்க உளவியலாளரான ‘ஜோன் ஸ்ரீபன்சன்’ என்பவர், அன்பினை ஒருவர் வெளிப்படுத்துதல் வேண்டும் எனவும்,அதற்கு நான்கு முறைகளை ஒருவர் பயன்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.அந்த வழிமுறைகள் பின்வருமாறு அமைவுபெறும்.
1.அன்புக்கு நிபந்தனை இடாதிருத்தல்.அதாவது எந்தவிதமான நிபந்தனைகளோ,வரையறைகளோ இன்றி அன்பினை வெளிப்படுத்தல்.
2.பார்வையால் சந்தித்தல்.அதாவது அன்பினைப் பார்வையால் வெளிப்படுத்தல்.
3.ஒருமுகப்படுத்தப்பட்ட தொடர்ந்த கவனிப்பு.
4.உடல்மொழிப் பரிணாமங்கள்.

### நிபந்தனைகள் அற்ற அன்பு

இங்கு பெற்றோர் குழந்தைகளிடத்தில் எந்தவிதமான நிபந்தனைகளுமின்றி தாங்கள் கொண்டுள்ள அன்பினை குழந்தை மீது வெளிப்படுத்த வேண்டும்.சில வேளைகளில் குழந்தைகளின் ஒருசில செயற்பாடுகள் பெற்றோரை சங்கடப்படுத்தினாலும் கூட அவர்கள் அதனைப் பெரிய விடயமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. சில சந்தர்ப்பங்களில் தண்டனைகள் வழங்கினாலும் கூட அதனைக் குழந்தைமீது கொண்ட அன்பின் காரணமாக வழங்கிய தன்மையை குழந்தைக்கு எடுத்துக்கூறிப் புரிய வைக்க வேண்டும்.
இவ்வாறான முறையில் பெற்றோரோ அல்லது ஏனையவர்களோ பிள்ளைகளிடத்திலே அன்பினை வெளிக்காட்டும் போது அந்தக் குழந்தையிடம் மகிழ்ச்சி,உற்சாகம்,ஆற்றல்,ஆளுமை போன்ற மனவெழுச்சிப் பண்புகள் தோற்றம் கொள்ளும். அதன் பயனுறுதியாக நற்செயல்களில் ஈடுபடுதல்,அனைவரையும் மதித்து நடத்தல் போன்ற பல நேர்மறையான நடத்தைக் கோலங்கள் சமூகத்தின்பால் வெளிக்காட்டப்படும்.
அதேவேளை அக் குழந்தைக்கு நிபந்தனையின் பேரில் அன்பு வழங்கப்படும் போது,எடுத்துக்காட்டாக ‘நீ இந்த வேலையைச் செய்யாவிட்டால் நான் உன்னை விரும்ப மாட்டேன் எனக் கூறுதல் அல்லது முற்றாக அன்பு மறுக்கப்படும் சந்தர்ப்பங்களின் போது அந்தக் குழந்தையானது தன்வாழ்வில் ஏமாற்ற உணர்வை அடைவதுடன், ஆளுமை மற்றும் ஆற்றல் அற்ற குழந்தையாகவும் விளங்கும். ஒருவருடைய ஆளுமையை உடைக்கும் அம்சமாக அமைவது அன்பு கிடைக்காமல் போவதாகும்.

### பார்வை மூலமான அன்பின் வெளிப்பாடு

பார்வை மூலம் ஒருவர் அன்பினை வெளிப்படுத்துகையில் பிள்ளைகளை அன்போடும் இரக்கத்தோடும் பார்த்தல் வேண்டும். இவ்வாறான பார்வையின் வழியே அன்பினைப் பெற்றுக்கொள்ளும் ஒரு குழந்தையிடம் அன்பு,இரக்கம்,உற்சாகம் போன்ற மனவெழுச்சிப் பண்புகள் விருத்தியடைவதுடன் அவர்கள் தங்களது நடத்தையில் பிறருக்காக இரங்குதல்,சமூகம் சார் செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்ற நேர்மறையான நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்துவர்.
அதேவேளை இந்த அன்பு கிடைக்காவிடில் ஏமாற்றம்,தனிமை, கோபம்,கசப்பு போன்ற மனவெழுச்சிப் பண்புகள் தோற்றம் பெற்று அதன் விளைவால் தன் எதிர்கால வாழ்வில் தவறான நட்புறவுகளை ஏற்படுத்திக் கொள்ளல்,தவறான செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்ற நடத்தைப் பண்புகள் வெளிப்படுத்துவதனைக் காணலாம்.



### ஒருமுகப்படுத்தப்பட்ட அன்பின் தருகை

அவ்வாறே பெற்றோர்கள் ஒருமுகப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான கவனிப்பின் மூலமாகவும், தான் தன் குழந்தை மீது கொண்டுள்ள அன்பினை வெளிப்படுத்த முடியும். இக் கவனிப்பின் போது, குறிப்பாக பெற்றோர் ஆண் பிள்ளை,பெண்பிள்ளை என்ற பாகுபாடு கருதாது பிள்ளைகளிடத்திலே சமத்துவமான அன்பினை எப்போதும் வெளிக்காட்டுதல் வேண்டும்.
இவ்வாறான அன்பு வெளிப்பாட்டினைப் பெற்று அதனை உணர்ந்து கொண்ட ஒரு குழந்தையிடத்தில் ஒற்றுமை மனப்பாங்கு,விட்டுக்கொடுப்பு,மகிழ்ச்சி போன்ற பல மனவெழுச்சிப் பண்புகள் விருத்தியடைவதுடன் அவர்கள் சமூகவாழ்வில் ஒற்றுமையுடன் செயற்படல்,மகிழ்வுடன் செயற்படல் மற்றும் விட்டுக்கொடுத்துச் செயற்படல் போன்ற நேர்மறையான நடத்தைக் கோலங்களை வெளிக்காட்டுவர். மாறாக,அன்பு வெளிப்பாடு தடைப்படுமிடத்து விரக்தி, கவலை, தனிமை,வெறுப்பு போன்ற மனவெழுச்சிகள் தோன்றி பிள்ளைகள் சமூகத்தின் மத்தியில் பல சீர்கெட்ட நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்துவர்.

### உடல்மொழிப் பரிணாமங்கள் மூலமான அன்பு

மேலும் உடல்மொழிப் பரிணாமங்கள் மூலமாகவும் ஒருவர் அன்பினை வெளிக்காட்ட முடியும். இவை அன்பை வெளிக்காட்டும் தாக்க வன்மையுடை ஒரு வழிமுறையாக காணப்படுகின்றன. அந்தவகையில் குழந்தைகளை தட்டிக்கொடுத்தல்,முத்தம் கொடுத்தல், தலையைத் தடவுதல் போன்ற பல செயல்நிலைகளை உடல் மொழிப் பரிணாமங்களாக குறிப்பிடலாம். குழந்தைகளில் ஆண்,பெண் வேறுபாடு கருதாமல் இவ் அன்பினை வெளிக்காட்டல் வேண்டும்.
இவ்வாறான அன்பு வெளிப்பாட்டினைப் பெற்று அதனை உணர்ந்து கொண்ட ஒரு குழந்தையிடத்தில் நல்ல மனவெழுச்சிப் பண்புகள் விருத்தியடைந்து, சமூகம் சார்ந்து ஒற்றுமையுடன் செயலாற்றல்,விட்டுக்கொடுத்துச் செயற்படல் போன்ற பல நேர்மறையான நடத்தைப்பாங்குகள் வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம்.
அதேசமயம் இவை மறுக்கப்படும் போது பிள்ளை தன் எதிர்கால வாழ்வில் பழிவாங்கும் உணர்வுடன் செயற்படல்,கோபத்துடன் செயலாற்றல்,குற்றச் செயல்களில் ஈடுபடுதல் போன்ற எதிர்மறையான நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்துவதைக் காணலாம்.
அன்பினை வெளிப்படுத்தும் போது ஒருவர் அளவோடு வெளிப்படுத்துவதும் அவசியமாகும்.அளவுகடந்த அன்பு மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான கவனிப்பு மூலமான அன்பு வெளிப்பாடு போன்றன சிலவேளைகளில் எதிர்மறையான நடத்தைக் கோலத்தினை வெளிப்படுத்த வாய்ப்புண்டு. குழந்தைப் பருவத்தில் அன்பு மறுக்கப்படுகின்ற குழந்தைகளே மனமுறிவு,வெறுப்பு,தனிமை என உளவியல் ரீதியாகவும் மற்றும் உடலியல் ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர்.எதிர்கால வாழ்வில் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபட்டு இளங்குற்றவாளிகளாகத் திகழ்வதைக் காணலாம்.

### வேண்டப்படும் அன்பின் தேவைப்பாடு

ஆக,இவையனைத்தையும் பொதுமையாகத் தொகுத்து நோக்கும் போது குழந்தைகளின் மனவெழுச்சி சார்ந்த நேர்மறையான நடத்தைக்கோல வெளிப்பாட்டுக்கு அன்பு வெளிப்பாடு மிகவும் இன்றியமையாத கருவியாக விளங்குகிறது.இதனையே ‘மாஸ்லோ’ என்ற அறிஞர், “அன்பு எல்லா வகையிலும் தேவையாகிறது. இதனை குடும்பவாழ்வு,குழுஅமைப்புக்கள் மூலம் பெறுகின்றோம்” எனக் கூறுகின்றார். நாமும் சிந்தனைபூர்வமாக உணர்ந்துகொள்வோம்.இன்றைய குழந்தைகள் நாளைய சமூகத்தின் முதுகெலும்புகள் என்பதனை அனைவரும் கருத்தில் கொண்டு செயலாற்றுவோம்.குழந்தைகள் மீது அதீத அன்பு கொண்டு அதனை அவர்கள் உணரும் வண்ணம் வெளிப்படுத்துவோம்.



# குழந்தைப்பேறு அளிக்கும் கந்த சஷ்டி விரதம்

தீபாவளித் திருநாளை தொடர்ந்து அடுத்து முருக பக்தர்களுக்கு கந்த சஷ்டிவிரதம் ஆரம்பித்துவிடும். தீபாவளி அமாவாசைத் தினம் முடிந்த முதல் நாள்ஆரம்பமாகி ஆறு நாள்கள் தொடர்ந்து நடைபெறும் இந்த விழா, முருகக் கடவுள் தேவர்களை சிறைப்பிடித்து வதைத்த சூரனை அழித்த பெருமையை கொண்டாடும் விழாவாகும். எமது மனதில் உறைந்திருக்கும் காமம், வெகுளி, மயக்கம், ஆணவம், செருக்கு, பொறாமை ஆகிய அசுர எண்ணங்களை அழித்து, தெய்வீகநிலையைஅடைந்துபெரு வாழ்வு வாழ வழி செய்வதே கந்த சஷ்டி உணர்த்தும் கருத்தாகும்.

சஷ்டி என்றால் ஆறு என்று பொருள் . ஐப்பசி மாதம் சுக்கிலபட்ச பிரதமை முதல் இறுதியாக சஷ்டி வரை உள்ள ஆறு நாள்களும் கந்த சஷ்டி விரத காலமாகும். செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப் பாக்கியம் என்பவற்றை முன்னிட்டு பக்தர்கள் முருகனை நினைத்து இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பர்.

"வந்த வினையும்,வருகின்ற வல் வினையும் கந்தன் என்றபேர் சொல்ல கலங்கும். அவன் அருள் இருந்தால், வல்வினைகள் வந்த வழி ஓடும்" என்பது ஆன்றோர் வாக்கு. அந்த ஆறுமுகனுக்கு உரிய விரதங்களுள் மிக முக்கியமானதாகச் சொல்லப்படுவது, கந்தசஷ்டி விரதம். அதிலும் குறிப்பாக குழந்தை பாக்கியம் வேண்டுபவர்கள் கந்தசஷ்டி விரதம் இருந்தால் முருகனே அவர்கள் மடியில் குழந்தையாக தவழ்ந்திருப்பான் என்பது நம்பிக்கை.

### கந்த சஷ்டி விரதம் கடைப்பிடிக்கும் முறை

கந்த சஷ்டியாகிய ஐப்பசி மாத சுக்கில பட்ச சஷ்டி முதல் அந்த ஆண்டு முழுவதும் வரும் 24 சஷ்டிகளிலும் இந்த விரதம் கடைபிடிக்கப்பட வேண்டும்.

முருக பக்தர்கள் இந்த ஆறு தினங்களும் உபவாசம் இருப்பர். இயலாதவர்கள் ஐந்து தினங்கள் ஒரு வேளை பால், பழம் மட்டும் அருந்தி, ஆறாம் நாள் உபவாசம் இருப்பதும் உண்டு. ஏழாம் நாள் பாறணை அருந்தி விரதத்தை நிறைவு செய்வார்கள். விரத தொடக்க தினத்தில் ஆலயத்தில் தர்ப்பையணிந்து காப்புக்கட்டி சங்கற்பம் செய்துக் கொள்வார்கள்.

இந்த ஆறு தினங்களும் விரதம் இருக்கும் முருக பக்தர்கள், ஆலயத்தில் இறைவழிபாட்டில் ஈடுபட்டு இறுதி நாளில் காப்பை அவிழ்த்து, தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஏழாம் நாள், அதிகாலையில் நீராடி பூஜைகளை நிறைவேற்றி, பாறணைப் பூஜை முடிந்ததும், மகேஸ்வர பூஜை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்வார்கள்.

### கந்தசஷ்டி விரத மகிமை

இந்த விரதத்தின் போது, தினமும் கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், ஆகியவற்றைப் பாராயணம் செய்ய மனஅமைதி கிடைக்கும். சிங்காரவேலவனின் அருளால் திருமணம் கைகூடும், நன்மக்கட்பேறு, நல்வாழ்வு, உடல் ஆரோக்கியம், ஆயுள், புகழ், செல்வம் என வேண்டியயாவும் நிச்சயம் கைகூடும். இந்த விரதம் இருப்பதினால் பிறவிப்பிணி நீங்கி முருகனருள் எப்போதும் துணை நிற்கும்.

### நாளை

**24.10.2017**

செவ்வாய்க்கிழமை

**ஐப்பசி 07**

திதி: சதுர்த்தி கா. 06.18 வரை
நட்சத்திரம்:கேட்டை மா. 05.32 வரை
சுபநேரம்: 10.32–12.02 வரை
ராகுகாலம்: 03.02–04.32 வரை

## வரலாற்றில் இன்றைய தினம் 23.10.2017

425 - மூன்றாம் வலன்டைன் அவரது 6ஆவது வயதில் உரோமப் பேரரசராக்கப்பட்டார்.

1295 - பிரிட்டனுக்கு எதிரான ஒப்பந்தமொன்று ஸ்கொட்லாந்துமற்றும்பிரான்ஸ்இடையே பரிஸில் கைச்சாத்தானது.

1707 - பிரிட்டனின் நாடாளுமன்றம் முதல்முதலாகக் கூடியது.

1739 - பிரிட்டனால்ஸ்பெய்ன் மீது போர் அறிவிப்புச் செய்யப்பட்டது.

1917 - ஒக்ரோபர் புரட்சிக்கு லெனினால் அழைப்பு விடுக்கப்பட்டது.

1946 - நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கூட்டம் முதன்முதலாகக் கூடியது.

2004 - ஜப்பானில் ஏற்பட்ட கடும் புயலால் 35 பேர் உயிரிழந்தனர்.

2004 - வகாரி முத்தா என்ற ஆபிரிக்க கறுப்பினப் பெண்ணுக்கு அமைதிக்கான நோபல் கிடைத்தது.

2011 - துருக்கியின் வான் மாகாணத்தில் ஏற்பட்ட 7.2 ரிச்டர் அளவு நிலநடுக்கத்தால் 582 பேர் உயிரிழந்தனர்.



1998 - இஸ்ரேலியத் தலைமை அமைச்சர் பென் ஜமின் நெத்தன்யாகு, பலஸ்தீனத் தலைமை அமைச்சர் யாசீர் அராபத் ஆகியோருக்கு இடையே இஸ்ரேல், பலஸ்தீன எல்லைகளை வரையறை செய்யும் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டது.

## பத்தி எழுத்து

### தமிழ் அரசியல்வாதிகளே இது நியாயமா?

தமிழ் அரசியல்வாதிகள் இன்னமும் மக்களை ஏமாற்றிவிட நினைப்பது அவர்களின் அறிவு மங்கியுள்ளதையே காட்டுகின்றது. இவர்கள்இனம்சார்ந்தபிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் வழங்காது தம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது இனிமேலும் நல்லதல்ல.

தேர்தல்களில் போட்டியிட்டு எவ்வகையிலேனும் பதவிகளைக் கைப்பற்றுவதே இவர்களின் நோக்கமாகக் காணப்படுகின்றது. உள்ளூராட்சித் தேர்தல்களுக்கும் அல்லது மாகாண சபைத் தேர்தல்களுக்கு குறிப்பிட்ட சிலர், தாம் மட்டுமே தேர்தல்களில் போட்டியிட்டுப் பதவிகளில் அமர்ந்துவிடத்துடிக்கிறார்கள். இதற்காக எதைச் செய்வதற்கும் இவர்கள் தயாராகவே இருக்கிறார்கள். கட்சித் தலைமைகளும் தராதரம் பார்க்காது தமக்கு வேண்டியவர்களுக்கு இடம் வழங்குவதை அவதானிக்க முடிகின்றது. இதனால் தான் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

மக்களின் வாக்குப் பலத்தினால் தாம் பதவிகளில் அமர்ந்துவிடுவதை ஏனோ சிலர் மறந்து விடுகிறார்கள். தேர்தலில் வெற்றிபெறுவதற்கு முன்னர் மற்றவர்களுடன் சாதாரணமாகப் பழகிவந்தவர்கள் வெற்றிபெற்றுப் பதவிகளில் அமர்ந்த பின்னர் தம்மை மறந்து பந்தா காட்டிக் கொண்டு திரிவதைப் பார்க்கும் போது பரிதாபமாக உள்ளது. தனது பழைய நிலையை மறக்காது இருப்பதுதான் உண்மையான மனிதன். இது அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும்.

அண்மைய நாள்களாக சிவாஜிலிங்கத்துக்கும் கஜேந்திரகுமாருக்கும் ஏற்பட்ட மோதல் தொடர்பான செய்திகளை ஊடகங்களில் பார்க்க முடிந்தது. இவர்களிருவரும் ஒருவரை ஒருவர் காரசாரமான வார்த்தைகளால் தாக்கிக் கொண்டார்கள். அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பாகவே இவர்கள் மோதிக் கொண்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவர்களின் விடயத்தில் இவர்க்ள் உருப்படியாக எதையும் சாதித்ததாகத் தெரியவில்லை.

சிவாஜிலிங்கம் அரச தலைவருடன் பேச்சில் ஈடுபட்டார். ஆனால் அது வெற்றியளிக்கவில்லை. கஜேந்திரகுமார் இந்த விடயத்தில் என்ன செய்தார்? ஒன்றுமே செய்யவில்லை. தமிழ் அரசியல்வாதிகளே! நீங்கள் இனிமேலும் மக்களை ஏமாற்ற நினைப்பது மிகப் பெரிய பாவமான செயலாகும்.

அந்த ம்க்கள் நீங்கள் ஏதாவது செய்து தம்மைக் காப்பாற்றிவிடுவீர்கள் என நம்புகின்றார்கள். ஆனால் நீங்களோ அவர்களைத் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். இது நியாயமா?

**டேய் நாம 5 வருசமா லவ் பண்றோம். எப்ப கல்யாணம் னு கேக்க மாட்டியா**




**சரி சொல்லு உனக்கு எப்போ கல்யாணம்.**

மனதினை அது விரும்பும் திசையில் பறக்க விடுவதே பல பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம்.

---

அவசரப்பட்டு விட்டேன்
என்பது, நான்
நிதானமாக இருக்கும்
பொழுது தான் புரிகிறது....

---

மன்னிப்புகள் இப்போதெல்லாம்
தவறுகளை உணர்ந்து
கேட்கப்படுவதில்லை. உறவுகளை
நிலைக்கச் செய்வதற்காக
மட்டுமே கேட்கப்படுகின்றன.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | 1 | | | | 8 |
| 2 | 7 | | 8 | | | | | 6 |
| 8 | | | 2 | | | | 5 | 9 |
| | | 7 | 4 | | 8 | | | 3 |
| | 2 | | | 9 | | | 8 | |
| 4 | | | | | 5 | 9 | | |
| 3 | 5 | | | | 2 | | 9 | |
| 7 | | | | | 3 | | 6 | 1 |
| | | | | 7 | | 8 | 3 | |

### நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 6 | 9 | 8 | 2 | 5 | 1 | 7 |
| 5 | 7 | 8 | 6 | 3 | 1 | 9 | 4 | 2 |
| 2 | 9 | 1 | 4 | 5 | 7 | 6 | 8 | 3 |
| 1 | 8 | 4 | 3 | 2 | 9 | 7 | 5 | 6 |
| 6 | 2 | 5 | 7 | 4 | 8 | 3 | 9 | 1 |
| 7 | 3 | 9 | 1 | 6 | 5 | 8 | 2 | 4 |
| 9 | 6 | 3 | 8 | 1 | 4 | 2 | 7 | 5 |
| 4 | 5 | 7 | 2 | 9 | 6 | 1 | 3 | 8 |
| 8 | 1 | 2 | 5 | 7 | 3 | 4 | 6 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# குடிதண்ணீருக்கான போர்



# 'காலா' ஏப்ரலில் திரைக்கு வரும்




'காலா' படம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் திரைக்குவர அதிக சாத்தியமுள்ளது என்று இயக்குநர் ரஞ்சித் தெரிவித்துள்ளார். பா.இரஞ்சித் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் 'காலா' படத்தின் படப்பிடிப்பு இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளது. ரஜினி தனது காட்சிகளை நடித்து முடித்துவிட்டார் என்றும் சொல்லப்படுகிறது. ரஜினியின் ஜோடியாக ஈஸ்வரி ராவ் நடிக்கிறார். ஹிந்தி நடிகைகள் ஹுமா குரோஷி, அஞ்சலி ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். 'காலா' படம் தொடர்பான தகவல்கள் அவ்வப்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்துவது வழமை. இந்த நிலையில் எதிர்வரும் ஏப்ரலில் 'காலா' திரைக்குவர அதிக வாய்ப்புள்ளது என்று இயக்குநர் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

ஷங்கர் இயக்கத்தில் ரஜனி நடித்துள்ள 2.0 படம் எதிர்வரும் ஜனவரியில் திரைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இழப்பு

இழப்பு என்பது எல்லோருக்குமே
பொதுவான ஒன்றுதான்.
ஒன்றையும் இழக்காதவர்
என்று எவருமே இல்லை.
இழப்புகளின் அளவு தான் வித்தியாசப்படும்.
ஒருசிலவற்றை இழப்பதினால் நிம்மதி
தொலையலாம். வாழ்க்கை அஸ்தமிக்கலாம்.
தன்னையே மறந்து வாழும் நிலைகூட ஏற்படலாம்.
ஒருசில இழப்புகளினால்
புதியவற்றைப் பெறலாம்.
புதிதான வாழ்வு தொடங்கலாம்.
ஏதாவது ஒன்றை இழந்தாலும் அடுத்து எமக்கு என்ன கிடைக்கப்போகின்றது என்று ஆவலோடு எதிர்பார்க்க தொடங்கிவிட்டோமானால் நாம் மிகவும் பக்குவப்பட்டவராகின்றோம்...

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அன்றாடப் பணிகளில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**இடபம்:** உங்களின் பேச்சை சிலர் தவறாகப் புரிந்து கொள்ளலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு சரியாகும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். புதிய முயற்சிகள் இனிதாக நிறைவேறும். தொழில் வியாபார விஷயமாக வெளியூர் செல்ல நேரிடலாம்.

**கடகம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**சிங்கம்:** சிலரது பேச்சு உங்களைச் சங்கடப்படுத்தலாம். எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழிலில் இலாபம் சுமாராக இருக்கும்.

**கன்னி:** கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். அளவான வருமானம் கிடைக்கும்.

**துலாம்:** பொறுமையுடன் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உண்டாகும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** பேச்சில் நிதானம் தேவை. தொழில் வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் சீராக உயரும். உடல்நலனில் அக்கறை தேவை.

**மகரம்:** நண்பர்களிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மந்தகதி நிலவும். இலாபம் சுமாராக இருக்கும். உறவினர்களின் உதவி கிடைக்கும்.

**கும்பம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். நீண்டநாள் திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள்.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு அனைவரும் புகழ்ந்து பேசுவர். தொழில் வியாபாரத்தில் குளறுபடி உண்டாகி மறையும். அளவான பணவரவு கிடைக்கும்.

**அலுவலகம் செல்லும் நாள்களில் 9 மணி வரைக்கும் தூக்கம் வரும்..**




**ஞாயிறு மட்டும் காலை 6 மணிக்கு மேல தூக்கமே வராதாம். நம்ம டிசைன் அப்படி.**

**இந்த நொடியை மட்டும் ரசித்து வாழப் பழகிக் கொண்டாலே போதும்.**



**வாழ்க்கை இனிமையாக மாறிவிடும்.**

# என்னால் முடியும்



ஒருவன் தன்னைப் பற்றித் தாழ்வான எண்ணம் கொண்டிருத்தலே தாழ்வு மனப்பான்மை எனப்படுகிறது. "என்னால் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாது. என்னால் போட்டியில் வெற்றியடைய முடியாது. மேடையில் நின்று பலபேர் முன்னிலையில் ஒழுங்காக என்னால் பேச இயலாது. எத்தனை முறை படித்தாலும் இந்தச் செய்யுளின் பொருள் என் மனதில் பதியாது. கணித அறிவு என் மண்டையில் ஏறாது" என பல முடியாதுகள், இயலாதுகள், பதியாதுகள், ஏறாதுகள் போன்றவை எவரிடத்தில் குடி கொண்டுள்ளனவோ அவர்களையெல்லாம் தாழ்வு மானப்பான்மைக்கு ஆழானவர்கள் என்று கூறலாம். தாழ்வு மனப்பான்மை ஒருவருக்கு பல காரணங்களால் ஏற்படுகிறது.

தாழ்வு மனப்பான்மை என்பது ஒரு பள்ளம் அல்லது படுகுழி என்றே சொல்லலாம். பள்ளத்தில் வீழ்ந்தவர்கள் எப்படியாவது கரையேறித்தான் ஆக வேண்டும். கரையேறுவதற்கு பள்ளத்தில் வீழ்ந்தவர் முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு முயற்சி செய்து முன்னேறியவர்கள் பலர். அவர்களில் ஒருவரே 'சாம்புவல். ஜோன்சன்'. இளமைக் காலத்திலேயே வறுமையால் வாடினார். ஆஸ்துமா நோய் படாதபாடுபடுத்தியது. கூடவே கண்டமாலை நோயும் கஷ்டப்படுத்தியது. இந்த நிலையில் கிழிந்துபோன காலணியோடு வகுப்புக்குச் செல்வார். இதனால் சக மாணவர்களின் கிண்டலும் கேலியும் ஏன் ஆசிரியர்கள் சிலரும் அவனைப் பரிகசித்தனர். வெட்கம், வேதனை என்பன அந்தப் பையனை பசியோடு சேர்ந்து பிடுங்கித் தின்றன. என்றாலும் அவன் தளர்ந்து விடவில்லை. சூழ்நிலையோ தன் நிலையோ அவனைத் தாழ்வு மனப்பான்மைக்குள் தள்ளிவிட முயற்சித்தும் அதனை வெற்றி கொண்டான். ஆர்வத்தோடு அறிவைப் பெருக்கிக்கொண்டான். திறமையை வளர்த்துக் கொண்டான். அவனே 1775ஆம் ஆண்டில் ஆங்கில மொழி அகராதியைக் கொடுத்த சாம்புவல் ஜோன்சன். இந்த அகராதியே பின்னாளில் ஆங்கில மொழியில் ஆதார பூர்வமான முதல் அகராதி என்னும் சிறப்புக்குரியதாயிற்று.

# மாற்றம் ஒன்றே மாறாதது



ஓர் ஊரில் அரசர் ஒருவர் இருந்தார். அவருக்கு வயதாகி விட்டதால் அவர் உள்ளத்தில் கவலையும் பயமும் குடிகொண்டன. முன்னதாகவே எத்தனையோ போர்க்களங்களில் எத்தனையோ பேரை ஓட ஓட விரட்டியடித்தவர் இந்த அரசர். ஆனாலும் இப்போது அந்தத் துணிச்சலெல்லாம் அவரிடமிருந்து எங்கேயோ போய் மறைந்து விட்டது. இந்த நிலையில் "என்ன செய்யலாம்?" என்று அரசர் யோசித்தார். அவர் எல்லா அமைச்சர்களையும் அழைத்து "நான் உங்களிடம் ஓர் ஆலோசனையை எதிர்பார்க்கிறேன். அதாவது எனக்கு ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டு விட்டது என்று வைத்துக்கொள்வோம். அந்த வேளை எனக்கு ஆலோசனைகூற எவரும் பக்கத்தில் இல்லாத நிலை ஏற்படுகிறது. அந்தச் சமயத்தில் எனக்கு உபயோகப்படும் வகையில் ஒரு வாசகம். பொன் மொழி ஒன்று சொல்லுங்கள். அதை நான் என்னுடைய வைர மோதிரத்தின் அடியில் பதித்து வைத்துக் கொள்வேன்" என்றார் அரசர். அவர் போட்டிருந்த வைர மோதிரமும் அதற்குத் தகுந்த மாதிரி திறந்து மூடுவது போல் அமைந்திருந்தது. அமைச்சர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து "அரசருக்கு என்ன வாசகம் சொல்லலாம்?" என்று யோசனை செய்தார்கள். ஒருவருக்கும் ஒன்றும் சரியாகத் தோன்றவில்லை. குழப்பமாக இருந்தது.

அந்த நேரத்தில் பெரியவர் ஒருவர் அங்கே வந்தார் அவர், "நான் அரசர் கேட்டதற்குப் பொருத்தமாக ஒரு வாக்கியம் சொல்வேன். ஆனால் ஒரு நிபந்தனை. அதை எவரும் ஆர்வம் காரணமாக அவசரப்பட்டு எடுத்துப் படிக்கக் கூடாது. அதை இரகசியமாக அந்த மோதிரத்துள் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். அரசர் எப்போதாவது இக்கட்டில் மாட்டிக் கொள்ளும் போது வேறு வழியே இல்லை என்ற நிலமை ஏற்படும்போது மட்டும்தான் மோதிரத்தைத் திறந்து பார்க்க வேண்டும்" என்று தெரிவித்தார். பெரியவரின் நிபந்தனையை அரசர் உட்பட அமைச்சர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

பெரியவர் கூறிய வாக்கியத்தை இரகசியமாக மோதிரத்திற்குள் எழுதி வைத்து மூடினார்கள். அரசர் அதைத் தன் விரலில் மாட்டிக் கொண்டார்.

சிறிது காலமாயிற்று அந்த அரசருக்கு ஒரு சோதனை வந்தது. அரசர் மீது அடுத்த நாட்டு மன்னன் படையெடுத்தான். அவன் இந்த அரசரிடம் முன்னர் தோற்றுப் போனவனாதலால் இப்போது ஒருபெரும் படையோடு படையெடுத்து வந்து வெற்றி பெற்றான். இந்த நிலையில் அரசனை எதிரிப் படைகள் துரத்தினார்கள். அரசர் ஒரு மலையுச்சிக்குச் சென்றுவிட்டார்.

அதற்கு அப்பால் பயங்கர பள்ளம் செல்ல முடியாது. அது உல்லாசப் பயணிகள் வந்து கண்டு களிக்கும் இடம். ஆனால் அரசருக்கு இந்த இடம் சாவுப் பயணத்தின் வாசல். அந்த நிலையில் சூரிய ஒளி அவரது மோதிரத்தில் பட்டு மின்னியதும் மோதிரத்தின் அடியில் எழுதி வைத்த வாசகம் அவர் நினைவுக்கு வந்தது. உடனே அங்கேயே மோதிரத்தைத் திறந்து பார்த்தார். அங்கே "இந்த நிலையும் மாறிவிடும் (This too will pass away)" என்ற வாசகம் இருந்தது. இதனைப் படித்ததும் மன்னருக்குத் தைரியம் வந்தது. இவரைத் துரத்தி வந்த படையினரும் திசை மாறி எங்கோ போய் விட்டார்கள். "அவர்கள் என்னைத் துரத்தி வராது விட்டால் இவ்வளவு அழகான ஓர் இடம் இருப்பதே எனக்குத் தெரியாமல் போயிருக்குமோ" என்று அரசர் நினைத்தார்.

"இவ்வளவு அழகை ரசிப்பதற்கான ஒரு நாட்டையே கூட இழக்கலாம்" என்று அவருக்குத் தோன்ற அங்கேயே இருந்து அந்த அழகான இடத்தை ரசிக்க ஆரம்பித்தார்.

எதிரிகள் அனைவரும் எங்கோ போய்விட மன்னர் மீண்டும் படைகளைத் திரட்டி யாரிடம் தோற்றாரோ அவர்களையே வெற்றி கண்டு நகருக்குத் திரும்பினார். தொடர்ந்து அவர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த ஆட்சியில் ஏற்றத்தாழ்வுகள், மனக்குழப்பங்கள் ஏற்படும் போதெல்லாம் அரசர் இந்த நிலையும் மாறிவிடும் என்ற வாசகத்தை நினைவில் நிறுத்தி நல்ல ஆட்சி மேற்கொண்டு வந்தார்.

# பன்னாட்டுக் குறியீடுகள்

| | |
|---|---|
| 1. ஒலிவ் இலை | - சமாதானம்/ஒலிம்பிக் |
| 2. வெண்புறா | - சமாதானம் |
| 3. சக்கரம் | - வளர்ச்சி |
| 4. தாமரை | - பண்பாடு |
| 5. கறுப்புத் துணி | - துக்கம் |
| 6. கறுப்புக் கொடி | - எதிர்ப்பு / மறுப்பு |
| 7. எலும்பு நடுவே மண்டையோடு | - அபாயம் |
| 8. சிவப்பு விளக்கு | - ஆபத்து |
| 9. செஞ்சிலுவை | - மருத்துவத்துறை |
| 10. கையில் தராசு உடைய பெண் | - நீதி தேவதை |
| 11. சிவப்புக் கொடி | - புரட்சி |
| 12. அரைக்கம்பத்தில் கொடி | - துக்கம் |
| 13. செங்குத்துக் கொடி | - வெற்றி |
| 14. வெள்ளைக் கொடி | - சமாதானம் |
| 15. மஞ்சள் கொடி | - தொற்றுநோய் |










புள்ளிகளை இணைத்து உருவத்தை பூர்த்தி செய்யுங்கள்



# பொருள்களை அறிந்து எழுதுவோம்





| | | |
|---|---|---|
| கடலை | வெந்தயம் | சீரகம் |
| மிளகு | பயறு | குரக்கன் |





# கரும் பொருளும் கரும் சக்தியும்

■ செ.தமிழ்நம்பி

பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிக் கருதும் போது 1998 ஆம் ஆண்டு 'கரும் சக்தி' எனும் மறைப்பு விசை பிரபஞ்சத்தை ஆக்கிரமித்திருக்கிறது என்ற ஊகம் உறுதிப்பட்டது. அது வரை அதன் இருப்பை அறியாது வானியல் வெறும் குருடாகவே இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் தற்போது இக்கருமைச் சக்தியை மையமாக வைத்து இன்று நிலவும் பௌதிகவியலின் (Physics and meta physics) கோட்பாடுகள் விருத்தி செய்யப்பட்டு வருகின்றமை முதன்மையானது.

**பிரபஞ்சக் கட்டமைப்பின் வெவ்வேறு மாதிரிகள்**

இதன் ஒரு கட்டமாகவே சுவிட்சர்லாந்தின் 'சேர்ன்' நகரில் மேற்கொள்ளப்பட்ட 'கடவுள் துணிக்கை' ஆராய்ச்சியை சொல்ல முடியும். இவ்வாராய்ச்சியில் ஈடுபட்ட பல்வேறு நாடுகளைச் சார்ந்த விஞ்ஞானிகள் தற்போது கடவுள் துணிக்கை இருப்பதை உறுதி செய்யும் விதமாக அதே போன்ற ஒரு துணிக்கையை கண்டு பிடித்திருந்தனர். இதை மேலும் உறுதி செய்யும் பட்சத்தில் பிரபஞ்சவியலின் மிக முக்கியமான கூறுகளாகவும் மேலும் அதிகமாக ஆராயப் பட வேண்டிய தேவை உடையதாகவும் உள்ள 'கரும் பொருள்' மற்றும் 'கரும் சக்தி' குறித்த இயல்புகளை அறிய இது உதவும் எனக் கூறப்படுகின்றது.

கரும் சக்தி குறித்து இரு வரிகளில் சுருக்கமாக சொல்வதானால் பெருவெடிப்புடன் (Bigbang) தோன்றிய காலத்தை வழி நடத்தும் வெளியில் மறைந்துள்ள விலக்கு விசை எனலாம். அகில விசை (Cosmic Force) எனக் கருதப்படும் கரும் சக்தி இருப்பதை நாசா 2003 ஆம் ஆண்டே நிரூபித்தது.

இதற்கு முன்னர் அல்பேர்ட் ஐன்ஸ்டீன் மற்றும் ஸ்டீபன் ஹாக்கிங் வரை பிரபஞ்சத்தின் அழிவு குறித்து ஒருமித்த கருத்தையே கொண்டிருந்தார்கள். அதாவது பிரபஞ்சம் ஒருநாள் விரிவை நிறுத்தி ஈர்ப்பு விசையால் திரண்டு உள்வெடிப்பில் (Implosion) முறியும் என இவர்கள் கருதினார்கள். இத்தகைய அழிவு பாரிய உடைவு (Big Crunch) எனப்படுகின்றது. ஆனால் இக்கால விஞ்ஞானிகள் இக்கருத்தை ஏற்றுக் கொள்வதில்லை. இதற்கான காரணம் 'கரும் சக்தி' பிரபஞ்ச விரிவாக்கத்தைத் துரிதப்படுத்துகிறது (accelarating) எனும் கோட்பாடு ஆகும். அதாவது பிரபஞ்சக் கட்டமைப்பை வடிவமைப்பதற்காகவும் அதன் தோற்றத்தை விளக்கும் பெருவெடிப்புக் (Bigbang) கொள்கையினை உறுதிப்படுத்துவதற்காகவும் நாசா 2001 ஆம் ஆண்டு விண்ணில் செலுத்திய 'டபிள்யு. எம்.ஏ.பி' (WMAP) எனப்படும் நுண்ணலை வேறுபாட்டு விண்ணுளவி எனும் செய்மதி மின்காந்த அலைகளைக் கொண்டு விண்வெளியை ஆராய்ந்தது. இதில் பிர பஞ்சத்தில் "கனல் தளங்கள்" (Hot Spots) இருப்பதை அது கண்டுபிடித்ததன் மூலம் பிரபஞ்சம் துரித விரைவாக்கத்தில் விரிவதை (Accelarating Expansion) உறுதி செய்தது. இதன் மூலம் பாரிய உடைவுக் கொள்கை (Big Crunch) அடிபட்டுப் போனது.

**பிரபஞ்ச அழிவுக்கு வித்திடும் கரும் சக்தி**

அதாவது பிரபஞ்ச விரிவு ஒவ்வொரு விநாடியும் துரிதப்படுவதால் (Accelerating) ஈர்ப்பு விசை காரணமாக அண்டங்கள் சுருங்கி நொறுங்க வாய்ப்பில்லை. இப் புதிய கோட்பாடு பிரபஞ்சம் குறித்த தமது கருத்தை மாற்றி விடும் என கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் வானியலாளர் 'அந்தோனி லாஸன்பி' கூறியுள்ளார்.

**பிரபஞ்ச அழிவு வகைகள்**

பிரபஞ்சத்தில் கரும் சக்தி ஆதிக்கம் செலுத்துவதைக் கண்டு பிடித்த பின்னர் விஞ்ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரபஞ்ச அழிவுக் கொள்கைகளில் முதலாவது 'பாரிய உதறல்' (Big Rip) எனப்படும் வகையாகும். அதாவது பிரபஞ்சத்தின் விரிவியக்க வீதம் மிகையாகத் துரிதமாகும் போது கருமைச் சக்தியுடன் இணைந்த சக்தியின் திணிவு (Energy Density Associated with Dark Energy) வலிமை பெற்று அது பேய்ச் சக்தியாக (Phantom Energy) உக்கிரமடையும். இதனால் அண்டங்கள், நட்சத்திரங்கள், மற்றும் கிரகங்களுக்கு இடையே உள்ள ஈர்ப்பாற்றல் வலுவிழந்து பேய்ச் சக்தியின் கோரத் தாண்டவத்தால் உதறி எறியப்பட்டு அழிவைச் சந்திக்கும் எனக் கூறப்படுகின்றது.

இது குறித்து மேலும் விவரிக்கையில் "பேய்ச்சக்தி அணுக்களைக் கூட



பிளந்து விரியச் செய்து விடும் எனவும் கூறப்படுகின்றது. எனினும் இந்தப் 'பாரிய உதறல்' (Big RiP) எனும் அழிவு இன்னும் பல பில்லியன் ஆண்டுகளுக்குப் பின்னரே நடைபெறும்" எனக் கணித்துள்ளனர்.

**ஈர்ப்பு நியதி குறித்த கருத்தாடல்**

தொலமி ஒரு பிரபஞ்சத்தை உருவாக்கினார். அது ஈராயிரம் ஆண்டுகள் நீடித்தது. நியூட்டன் ஒரு பிரபஞ்சத்தைக் கண்டுபிடித்தார். அது இரு நூறாண்டுகள் நீடித்தது. இப்போது மருத்துவர் ஐன்ஸ்டைன் ஒரு புதிய பிரபஞ்சத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். எத்தனை ஆண்டுகளுக்கு அது நீடிக்கும் என்பது யாருக்கும் தெரியாது.

**ஜோர்ஜ் பெர்னாட் ஷா (1856-1950)**

எனது ஒப்பியல் நியதி மெய்யென்று நிரூபிக்கப்பட்டால், ஜெர்மனி என்னை ஜெர்மானியன் என்று பாராட்டும். பிரான்ஸ் என்னை உலகப் பிரமுகன் என்று போற்றி முழக்கும். நியதி பிழையானது என்று நிரூபணமானால், பிரான்ஸ் என்னை ஜெர்மானியன் என்று ஏசும். ஜெர்மனி என்னை யூதன் என்று எள்ளி நகையாடும்.

**ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் (1879-1955)**

ஐன்ஸ்டைனின் ஒப்பியல் நியதி தற்கால மானிட ஞானத்தில் உதயமான ஒரு மாபெரும் சித்தாந்தச் சாதனை. பதினேழாம் நூற்றாண்டில் ஐஸக் நியூட்டன் தனது "பிரின்சிபியா மதமாட்டிகா" (Principia Mathematica) என்னும் நூலில் "ஈர்ப்பியல் விதியை" (Law of Gravity) பற்றி விளக்கமாக எழுதியுள்ளார். முன்னூறு ஆண்டுகளாக நியூட்டனின் ஈர்ப்பியல் விதி பெரும்பான்மையான வானோக்குக் காட்சிகளுக்கு ஒப்பியதாக இருந்தது. ஆனால் அது எல்லா ஐயங்களுக்கும் விடைகூறிப் பூரணம் அடையவில்லை.

230 ஆண்டுகளுக்குப் பிறகு 1916 ஆம் ஆண்டு ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் தனது "பொது ஒப்பியல் நியதியை" (General Theory of Relativity) வெளியிட்டு நியூட்ட னின் ஈர்ப்பியல் நியதியைக் "காலவெளி வளைவாக" (Space Time Curvature) மாற்றிக் காட்டினார். ஐன்ஸ்டைனின் நியதி "ஈர்ப்பியல் விசை" எப்படியெல்லாம் இயங்குகிறது என்று விளக்கி தீராத பல்வேறு பிரச்சினைகளுக்கு விடைகளைக் கண்டுபிடித்தது.

ஆனால் ஒப்பியல் நியதியா லும் இப்போது எல்லா வினாக்களுக்கும் விடை கூற முடியவில்லை. சென்ற சில பத்தாண்டுகளாக விஞ்ஞானிகள் ஈர்ப்பியல் விளைவுகளில் பற்பல புதிரான நிகழ்ச்சிகளைக் கண்டுள்ளதால் 21 ஆம் நூற்றாண்டின் பயண வேகத்தில் ஒப்பியல் நியதியையும் செப்பனிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

**விற்பனைக்கு**

யாழ். பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் 30 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட காணியும் யா/ நல்லூர் கைலாய பிள்ளையார் கோவிலுக்கு அருகில் கோவில் வீதியில் ஆறு பரப்புக் காணியும் யாழ். பலாலி வீதியில் கந்தர்மடத்தடியில் 6 பரப்பு காணியும் யா/ சீனிவாசன் வீதியில் 10 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு- 077 723 2535**

**மரண அறிவித்தல்**

**திருமதி லலிதாதேவி தில்லைநாதன்**



வளவாயைப் பிறப்பிடமாகவும், கனடா ரொரண்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லலிதா தேவி தில்லைநாதன் (22.10.2017) காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பைரவர்வளவு முக்குறுணிப்பிள்ளையார் கோவில் புலவனார் ஒழுங்கை கல்வியங்காட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முக்குறுணிப்பிள்ளையார் கோவில்,
புலவனார் ஒழுங்கை, கல்வியங்காடு.

தகவல்:
கந்தப்பிள்ளை தில்லைநாதன்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றும்

**திருமதி விக்கினேஸ்வரி மணிவண்ணன் (B.Ed)**

அவர்கள் 2017 ஆம் ஆண்டு சிறந்த ஆசிரியருக்கான **பிரதீபா பிரபா** விருதினை இன்று 23.10.2017 பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவர் மேலும் பட்டங்கள் பல பெறவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**பேரப்பிள்ளைகள்**
அபிஷனா, சகானா, ஜனனன், ஹர்னி, நிதேஷ், லக்ஷிதா, நக்கீரன்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது வித்தியாலய அதிபர்

**காசித்தம்பி கந்தசாமி**

அவர்கள் கல்வி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டு சிறந்த அதிபருக்கான பிரதீபா பிரபா விருதினை இன்று 23.10.2017 பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெறவும் எல்லாம் வல்ல வேம்படி விநாயகனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

பாடசாலை அபிவிருத்திக்குழு
யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்.

**Galaxy Star**

வெற்றி வாரம் 205 | திகதி 22.10.2017

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
02 07 33 50 56

அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3, 409, 360/-
2017.10.25 ஆம் திகதி புதன்கிழமை
நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**ராசி** அதிர்ஷ்டம்

திகதி 22.10.2017 | வெற்றி வாரம் 2201 | வர்ணம் ஊதா

சிம்மம்

வெற்றி இலக்கங்கள் 05 29 56 61

செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,782,684/=

2017.10.24ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 205
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 22.10.2017

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 75,986,228/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
L 28 38 40 53

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 53
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.10.22

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 64,984,130/-

வெற்றி இலக்கங்கள்
06 14 53 72

ஆங்கில எழுத்து X

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரியின் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்
**ஞா. திரோணன்**
அவர்களது தந்தையார்
**சிதம்பரப்பிள்ளை ஞானமூர்த்தி**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் எமது ஆசிரியர் மற்றும் குடும்பத்தினர் உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.
**கல்லூரி சமூகம்,**
**இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.**

## மரண அறிவித்தல்கள்

### சண்முகலிங்கம் தனேசன்



புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா (Mississaugr) வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் த்னேசன் (21.10.2017) சனிக்கிழமை காலமானார்

அன்னார் சண்முகலிங்கம் - தனலெச்சுமி தம்பதியரின் அன்புப்புதல்வனும் ஆறுமுகபாலன் - றஞ்சினி தம்பதியரின் அன்புமருமகனும் தட்சாயினியின் அன்புக்கணவரும் றிசா, இசான், கேடன், கபிசன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சதீசன், யதார்த்தன், சாருசன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.10.2017) புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 45, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குமாரசாமி கேதீஸ்வரன் (தாய்மாமன்) 077 9554713**



### பரமேஸ்வரி நவரத்தினம்

உரும்பிராய், சிவகுல வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கோண்டாவில் கிழக்கை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி நவரத்தினம் (22.10.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு நாகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்புமனைவியும் பத்மராணி, சிவதாசன் ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்புமாமியும் சரஸ்வதி (கனடா) காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம், சுந்தரலிங்கம் மற்றும் புவனேஸ்வரி, சுந்தரமூர்த்தி, யோகலிங்கம் (லண்டன்), மகேஸ்வரி (கனடா), பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் தர்மினி (ஜேர்மனி), தர்மிந்தன், தர்சினி (கனடா), பிரபாகரன், சுபாகினி, தசிகரன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் வர்சியா, தனுசிகா, தாரகன், பூர்விகா, அனிக்கா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2017) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டைஆலடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி
### சிவமனோகரி (மனோகரி) தியாகராஜா



பிறப்பு: யாழ்ப்பாணம் 06.08.1933
மறைவு: நியூ சிலாந்து 21.10.2017

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி சிவமனோகரி தியாகராஜா (மனோகரி), சனிக்கிழமை நியூஸிலாந்து வெலிங்டன் இல் காலமானார்.

அன்னார் இளைப்பாறிய இலங்கை நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர் பொன்னையா தியாகராஜா அவர்களின் அன்புக்குரிய மனைவியாவார்.

மனோகரி பலாலி வீதி திருநெல்வேலியை சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை செல்லம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற சிவசோதி செல்வராஜா, காலஞ்சென்ற சிவயோகம் சிவஞானசுந்தரம், சிவலோசனி கனகரத்தினம் (கோப்பாய்), சிவபாலதேவி துரைசிங்கம் (கனடா), தியாகராஜா (கனடா), யோகராஜா (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

உயரப்புலம் ஆனைக்கோட்டையை சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா லக்ஷுமி தம்பதியினரின் மருமகளானஇவர், காலஞ்சென்ற கதிரவேல்ப்பிள்ளை, சரஸ்வதி சீனிவாசகம், (உயரப்புலம்), காலஞ்சென்ற அமிர்தயோகம், சிவசவுந்தரி ஆறுமுகம் (கொழும்பு), தம்பிராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அவர் நியூ சிலாந்து வெலிங்டனில் வசிக்கும் மாலதியின் அன்புத்தாயாரும், பத்மநாதன் பிரபாகரனின் மாமியும், சஞ்சனி, சிந்தனாவின் அருமை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் லோவர் ஹட் கார்ன்வால் மேனரில் (Lower Hutt Cornwall Manor) பார்வைக்காக 23.10.2017 பி.ப 6 மணிக்கு வைக்கப்படும். இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை 24.10.2017 மதியம் 12 மணிக்கு கரோறி மயானத்தில் நடைபெறும்.

***அன்னாரின் குடும்பத்தினரை தொடர்பு கொள்ள . . .***

**Address: 10 Boronia Grove, Maungaraki, Lower Hutt 5010, New Zealand**
**Telephone: +6445769533**
**E - mail: theagarajah2006@yahoo.com or brabha@xtra.co.nz**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 . 08 . 1944



மறைவு
03 . 11 . 2016

### அமரர் லோகநாயகி கிருஷ்ணபிள்ளை

**திதி - சதுர்த்தி [23.10.2017 திங்கட்கிழமை]**

அன்புடனே எமைவளர்த்து அறிவு பலவூட்டி
பண்புடனே வாழ வழிப்படுத்தி
இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து
இறைவனடி சேர்ந்தனையோ என்றும்
நாம் மறவோம் உம் நினைவால்
என்றென்றும் வாழ்ந்திருப்போம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலை வீதி,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி

நீங்கா நினைவுகளுடன் :
குடும்பத்தினர்.
077 4410 920

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து பொன்ராஜா

*(ஓய்வுபெற்ற புள்ளிவிவர உத்தியோகத்தர்)*



பிறப்பு 06.09.1927
இறப்பு 13.10.2017

யாழ். ஸ்ரான்லி வீதியை பிறப்பிடமாகவும் யாழ். இராமநாதன் வீதி, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து பொன்ராஜா கடந்த (13.10.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நித்தியானந்த தேவி (தேவா) யின் அன்புக் கணவரும் ஹரிராமஜெயம் (ஜேர்மனி), ம்கேஸ்வரன் (அமெரிக்கா), ரவீந்திரகுமார் (பிரான்ஸ்), அருள்பிரியா (லண்டன்), கவிதாம்பிகா (லண்டன்), உசாநந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செந்தினி (ஜேர்மனி), கனிதா (அமெரிக்கா), மதிவதனா (பிரான்ஸ்), கிறிஸ்ணராஜா (லண்டன்), றோய் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற தம்பியையா, பிறிட்சற் பாக்கியலட்சுமி (துரையம்மா - ஆஸ்திரேலியா), துரையப்பா (அப்பு - கனடா), ஜெயலட்சுமி (மணி - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் தேம்பாமலர் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான ஜோன் டானியல் டேவிட், பேரம்பலம் (பிரான்ஸ்), பரமானந்தம், யோகேஸ்வரி மற்றும் ராகினி (கனடா), பால்கந்தசாமி (ஆஸ்திரேலியா), சர்வானந்ததேவி ஆகியோரின் மைத்துனரும் தேவசுந்தரி (மம்மி - பிரான்ஸ்), சற்குணம் (தேவி), லோகேஸ்வரி (மீனா), மாசிலாமணி, சீவரட்ணம், வில்லியம் யேசுதாசன் ஆகியோரின் சகலனும் ஜெகதீஸ்வரன், ஏனஸ், எமிலினி, கீர்த்தி, கிறிஸ்ரீனா, றிஜிகேஸன், றியானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.10.2017) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் லண்டனில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை பிற்பகல் 4 மணியளவில் இராமநாதன் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**148, இராமநாதன் வீதி,**
**யாழ்ப்பாணம். 00447 463 736 046**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை ஞானமூர்த்தி




வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை ஞானமூர்த்தி 22.10.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரபிள்ளை இரத்தினபூபதி தம்பதியரின் அன்புமகனும் இராசலட்சுமியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற வாசுதேவன் மற்றும் தர்சினி, திரோணன் (ஆசிரியர், யா/இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுஜீவனின் மாமனாரும் கனகவல்லி காலஞ்சென்ற உருத்திரமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கஜானியின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2017) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அலுக்கை, அளவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர். 077 4336 906**



### கேழ்வரகு

தானியங்களில் அதிக சத்துமிக்கது 'ராகி' எனப்படும் கேழ்வரகு. கிராமங்களில் ராகிக் களி, ராகி தோசை, ராகிப் பிட்டு, ராகிக் கூழ் போன்ற உணவுகள் இன்றளவும் உண்டு. ராகியில் புரதச்சத்து, தாதுஉப்பு, சுண்ணாம்புச்சத்து, இரும்புச்சத்து மற்றும் உயிர்ச்சத்துக்கள் இருக்கின்றன. குடல் பிரச்சினைகளைப் போக்கும். உடல் சூட்டைச் சீராக்கும். உயர் குருதி அழுத்தம், இதய நோய், ஆஸ்துமா போன்ற பிரச்சினைகளுக்கு உகந்தது. ராகியில் உள்ள லெ்சித்தின், மெத்தியோனைன் ஆகிய அமினோஅமிலங்கள், கல்லீரலில் உள்ள அதிகப்படியான கொழுப்பை வெளியேற்றி, கொழுப்பின் அளவைக் குறைக்க உதவு கிறது. உடலின் நைதரசன் அளவைச் சமப்படுத்தவும், சேதமடைந்த திசுக்களைச் சரி செய்வதற்கும் ராகி முக்கிய உணவாக விளங்குகிறது.

## புலம்பெயர் தமிழர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஒக். 23
அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக புலம்பெயர் தமிழர்கள் லண்டனில் ஒன்று கூடி நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. மதியம் ஒரு மணி முதல் மாலை 5 மணி வரை பிரித்தானிய தலைமை அமைச்சரின் அலுவலகத்துக்கு முன்பாகப் போராட்டம் நடைபெற்றது.
அரசியல் கைதிகளை உடன் விடுவிக்க வேண்டும், இராணுவம் அபகரித்து வைத்திருக்கும் மக்களின் காணிகளை மீளக் கையளிக்க வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான உண்மைகளை வெளியிட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்தப்பட்டது.
இது தொடர்பான மனு ஒன்றும் பிரித்தானிய தலைமை அமைச்சருக்கு வழங்கப்பட்டது .
"தமது கோரிக்கைகளை வெளிப்படுத்த வேறு வழிகள் ஏதுமில்லாமல் தமது உயிரைப் பணயம் வைத்து, அரசியல் கைதிகளாக இருக்கின்ற எமது உறவுகள் 25 நாள்களையும் கடந்து போராடி கொண்டிருக்கின்றனர். ஆனாலும் அரசு இதுவரை இந்தப் பிரச்சினைக்குச் சரியானதொகுபதிலைச் சொல்லாமல் இழுத்தடிப்புகளை மேற்கொண்டு வருகின்றமை மிகவும் மனவருத்தத்துக்கு உரியது. எனவே, இனியும் இத்தகைய இழுத்தடிப்பைத் தொடர்வதன் மூலம் உணவு ஒறுத்திருக்கும் அரசியல் கைதிகளின் உயிரோடு விளையாடாமல் விரைவான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியது கட்டாயம்" என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. (உ-21)

## 2 கிலோ...

வவுனியா, ஒக்.

வவுனியா, பேருந்து நிலையத்தில் 2 கிலோ 136 கிராம் கேரளக் கஞ்சா நேற்று மாலை மீட்கப்பட்டது. கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என வவுனியா மதுஒழிப்பு பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி நோக்கிச் செல்லும் பேருந்தில் பயணித்த இளைஞன் ஒருவரின் செயற்பாட்டில் சந்தேகம் வந்தது. அதனடிப்படையில் குறித்த இளைஞனின் கைப்பை சோதனையிடப்பட்டது. இதன் போது அதில் 2 கிலோ 136 கிராம் கேரளக் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டது. இளைஞரும் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரை நீதிமன்றில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. குறித்த கஞ்சா இந்தியாவின் தெலுங்குப் பத்திரிகை ஒன்றில் பொதி செய்யப்பட்டிருந்தது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுள்ளன என்று வவுனியா மதுஒழிப்பு பிரிவுப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(21)

## அரியாலையில்....

னர்கள் தெரிவித்தனர்.

**கூடப்பயணித்தவரின் தகவல்**

டெஸ்மனுடன் சென்றிருந்த அவரின் நண்பர் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்ததாவது:

"நானும் டெஸ்மனும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தோம். நண்பனின் மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் இல்லை என்று கூறியதால் எமது மோட்டார் சைக்கிளிலிருந்து சிறிது பெற்றோலை எடுத்துச்சென்று கொடுத்து விட்டு வந்துகொண்டிருந்தோம். மணியந்தோட்டம் சந்தியை அண்மித்தபோது எதிரே மோட்டார் சைக்கிளில் முகத்தை மூடிய தலைக்கவசம் அணிந்தபடி இருவர் வந்தனர். எம்மை அண்மித்ததும் திடீரென அவர்களது மோட்டார் சைக்கிள் நின்றது. அதில் பயணித்தவர்களில் ஒருவர் துப்பாக்கியை எடுத்துச் சுட்டார். டெஸ்மனின் முதுகில் காயம் ஏற்பட்டது. பயப்பீதிக்குள்ளான நான் மோட்டார் சைக்கிளை இன்னும் வேகமாகச் செலுத்தி அந்த இடத்தை விட்டு ஓடிச் சென்றேன். செல்லும் வழியில் தனக்கு மயக்கம் வருகிறது என்று டெஸ்மன் கூறினார். உடனடியாக அங்கு இருந்த ஓட்டோவில் அவரை ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றேன்" என்று தெரிவித்தார்.

**வைத்தியசாலையில்**

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் காயப்பட்ட இளைஞனின் உறவுகளுக்குத் தெரியவந்ததும், அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிரடியாகக் கூடினர். அதனால் வைத்தியசாலையில் பதற்றமான நிலை ஏற்பட்டது.

அதனைச் சமாளிக்க மேலதிக பொலிஸார் வைத்தியசாலையில் குவிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். டெஸ்மனுடன் பயணித்தவர் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

துப்பாக்கிச் சூடு நடந்த பகுதியில் பொலிஸார் தேடுதல் நடத்தினர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை. (உ-4-8,101)

## கைதிகளுக்கு...

இன்று நண்பகல் 12 மணிக்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக் கப்படவுள்ளது. (5,31)

## குளத்திலிருந்து...

குறித்த நபரின் சடலம் காணப்பட்டது. ஈச்சங்குளம் பொலிசாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளில் குறித்த நபருக்கு வலிப்பு வருவதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர். சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளின் பின்னர் இன்று சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்படும் என ஈச்சங்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(உ-21)

## சிறை...

தொடர் உணவு ஒறுப்புப் போராட்டம் காரணமாக அவர்களது உடல் பலவீனமடைந்து, சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். கடந்த 17ஆம் திகதி, தமது உயிருக்கு ஆபத்து ஏதாவது நேர்ந்தால் தாமே பொறுப்பு என்று கடிதம் எழுதி சிறைச்சாலை மருத்துவமனையில் கொடுத்து விட்டு சிறைக் கூடத்துக்குத் திரும்பினர்.

அதன் பின்னரும் அவர்களது உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்ந்தது. இந்த நிலையில் நேற்றைய தினம், அரசியல் கைதிகள் மூவரையும் நிர்ப்பந்தப்படுத்தி சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்த்துள்ளதாக சக அரசியல் கைதிகள் குறிப்பிட்டனர். (உ-5)

## சுமந்திரன்...

கலந்துகொண்டது அதனையே வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரமேச்சந்திரன் தெரிவித்தார். கூட்டமைப்பு என்கின்ற பேரில், தமிழரசுக் கட்சி தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு, இவ்வாறான விடயங்களைக் கையாள்வதாகவும் அவர் கூறினார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே, சுரேஸ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

காணாமற் போனவர்கள், அரசியல் கைதிகளுடைய விடயங்களில் எந்த வித மாறுதல்களும் இல்லாது அரசு தனது முடிவில் உறுதியாக இருக்கின்ற நிலமை கண்டிக்கப்படவேண்டியது. அரசு கூறுகின்ற நல்லெண்ணங்கள் எல்லாம் அரசாலேயே குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன. நேற்றையதினம் (நேற்று முன்தினம்) வவுனியாவுக்கு வருகை தந்த அரச தலைவர் தமிழர்களது பிரதேசங்களைக் கபளீகரம் செய்து, அதற்கு சிங்களப் பெயரிட்டு அந்தப் பிரதேசங்களை தமிழர்களிடம் இருந்து பறித்து சிங்கள மக்களுக்கு விழங்குவதான உறுதிமொழிகளை வழங்கினார். இந்தச் சம்பவம் நேற்று (நேற்று முன்தினம்) நடைபெற்றது.

இந்தப் புதிய, நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற அரசு கூட எந்தவிதமான மாற்றங்களையும் செய்யயாமல், மகிந்த எவ்வாறு தமிழ் மக்களுக்கு மாறான செயற்பாடுகளைச் செய்தாரோ, அதே விடயங்களுக்காக உறுதி வழங்கும் நிகழ்வையே நேற்றுச் செய்திருந்தது.

அந்த வைபவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் கலந்து கொண்டமையானது நிச்சயமாக இவர்கள் எல்லோரும் சேர்ந்து தமிழர் பூமியை சிங்களப்பூமி ஆக்குவதற்கு அரசுடன் உடந்தையாகப் போகின்றார்களா என்ற விமர்சனங்கள் எமது மத்தியகுழு க்கூட்டத்தில் எழுப்பப்பட்டது.

இந்த விடயங்கள் ஆரோக்கியமான விடயங்கள் அல்ல. முக்கியமாகக் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழரசுக்கட்சி, மிகவும் தான்தோன்றித்தனமாக இந்த விடயங்களைக் கையாளுகின்றது. அது மாத்திரமல்லாமல் அது தமிழ் மக்களுக்கு விரோதமான முறையில், இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கிறது என்ற அடிப்படையில் இது தொடர்பான சரியான முடிவுகளை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) சரியான முறையில் விரைவாக எடுக்கும் என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே இருக்கக் கூடிய தமிழரசுக் கட்சி ஏற்கனவே தமிழ்மக்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஆணையில் இருந்து வெளியேறியிருக்கின்றது. தேர்தல் விஞ்ஞாபனங்களிலே கூறப்பட்ட கொள்கைகள் எல்லாம் கைவிடப்பட்டு தமிழ்மக்கள் வழங்கிய ஆணைகளில் இருந்து அந்தக் கட்சி விலகியுள்ளது என எமது மத்தியகுழுக்கூட்டத்தின் பலரது கருத்துக்களாக உள்ளன - என்றார். (உ-21)

## மைத்திரியின்...

பிரேரணையைக் கொண்டு வரும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும் எந்தவொரு சாதகமான பதிலும் அரச தரப்பால் வழங்கப்படவில்லை. அரச தலைவருடனான சந்திப்பும் திருப்தியாக அமையவில்லை என்று அந்தச் சந்திப்புக்களில் கலந்து கொண்டவர்கள் கூறியுள்ளனர்.

அரச தலைவர் கடந்த காலங்களில் பல்வேறு வாக்குறுதிகளை பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்தாலும் அவை நிறைவேற்றப்படவில்லை.

அரச தலைவரினதும், அரசினதும் நிலைப்பாடுகளைப் பார்க்கும்போது, தொடர்ச்சியான போராட்டங்களும் அதனூடாக ஏற்படுத்தப்படும் அழுத்தமும்தான் தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் அவர்களைச் சிந்திக்க வைக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்திவைப்புப் பிரேரணையுடன் நின்றுவிடாது. நாடாளுமன்றத்தைப் புறக்கணித்தோ அல்லது வேறு காத்திரமான போராட்டங்களின் ஊடாகவோ அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் வேண்டி நிற்கின்றோம். தவறும் பட்சத்தில் சனநாயக ரீதியான போராட்டங்கள் இன்னும் வலுவாக முன்னெடுத்துச் செல்லப்படும் என்றுள்ளது. (உ-5)

## உதயன்...

உடுப்பிட்டித் தொகுதி தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுடனாக சமகால அரசியல் கலந்துரையாடல் கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்துக்கு அண்மையில் இடம் பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு சீறிப்பாய்ந்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மகாநாயக்க தேரர்கள்தான் இந்த நாட்டின் சட்டதிட்டங்களைத் தீர்மானிப்பது என்றால் நாடாளுமன்றம் தேவையில்லையே மக்களின் கருத்துக்கணிப்புத் தேவையில்லையே! இது பற்றி நாடாளுமன்றத்தில் நான் பேசியிருந்தேன்.4 மகாநாயக்க தேரர்கள் இந்த நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதாக இருந்தால் இந்த நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுங்கள், எதற்கு இங்கு வந்து நாம் துன்பப்பட வேண்டும் என்று கேட்டேன். ஒருவரும் வாய் திறந்து ஒரு வசனம் பேசவில்லை.

அவர்களுக்கு இல்லாத ஒரு மதிப்பை நீங்கள் ஏன் கொடுக்கிறீர்கள்? நீங்கள் என்று சொல்கின்றபோது தமிழ் ஊடகங்களிடம்தான் கேட்கிறேன். மாகாநாயக்க தேரர்கள் சொல்லிவிட்டார்கள் என்று துள்ளிக் குதித்துக்கொண்டிருப்பது தமிழ் ஊடகங்கள்தான். ஏதோ அவர்கள்தான் (மகாநாயக்கர்கள்) இந்த நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கிறவர்கள் மாதிரி.

மகாநாயக்க தேரர்கள் சொல்லவேயில்லை (புதிய அரசமைப்பு வேண்டாம் என்கிற செய்தி). அது முதலே வந்த கூற்று, செய்தி, அதைத் திருப்பி எடுத்து திருப்பி வெளியிட்டுள்ளன. இடையில் மகாநாயக்க தேரர்கள் வித்தியாசமாகப் பேசியிருக்கிறார்கள். தினேஸ் குணவர்த்தன போய்ப் பேசும்போதும் சொல்லியிருக்கிறார்கள். புதிய அரசமைப்பு வரும் வரையில் ஏன் தேவையில்லாமல் பேசுகின்றார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அவர்களைக் கையாள வேண்டியவர்கள் அவர்களைக் கையாளட்டும். அவர்களுக்கு இல்லாத முக்கியத்துவத்தை நாங்கள் ஏன் பதறியடித்துக்கொண்டு துடிச்சுக்கொண்டு அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை.

இன்றைக்கு உதயன் பத்திரிகையை எடுத்துப் பார்த்தீர்களானால், அரச தலைவர் பேசிய பேச்சு எப்படி வெளியிடப்பட்டுள்ளது? நான் இருந்தேன் வவுனியாவில். ஒற்றையாட்சி என்ற சொல்லை அவர் பயன்டுத்தவே இல்லை. ஏக்கிய ராஜிய என்ற சொல்லுப் பயன்படுத்தப்படவே இல்லை. பயன்படுத்தியிருந்தாலும் அது ஒற்றையாட்சி இல்லை இதன்படி (இடைக்கால அறிக்கை) . ஆனால் அப்படிக்கூட அவர் பாவிக்கவில்லை. ஏக்கிய ராஜிய என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. ஏக்கிய பாவய என்ற சொல்லையே பயன்படுத்தினார். ஏக்கிய பாவய என்றால் நாட்டின் ஒருமைத் தன்மை. அவர் அப்படிச் சொன்னதற்கு உதயன் கொடுத்துள்ள தலைப்பு ஒற்றையாட்சி. அரச தலைவர் சொல்லாததை, தமிழ்ப் பத்திரிகை போடுது - என்றார்.

தென்பகுதியில் எதிர்வரும் 30ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது. அத்தகைய பேரணியை நடத்தி நாட்டைக் குழப்பகரமான சூழ்நிலைக்கு இட்டுச்செல்ல இத்தகைய தமிழ் ஊடகங்களே மூலகாரணங்களாகின்றன என்றும் தெரிவித்தார்.

உதயன் பத்திரிகை பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலையும் காட்டுகின்ற வகையிலான அரசமைப்பு என்று அண்மையில் எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் தற்போதைய இடைக்கால வரைவு தொடர்பாக தவறாக எழுதியதையும் காணக்கூடியதாகவுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

1. அரச தலைவரின் உரைக்கு உடனுக்குடன் தரப்பட்ட மொழிபெயர்ப்பில் 'ஒற்றையாட்சி' என்ற வாசகமே பயன்படுத்தப்பட்டது. அதனை நிரூபிப்பதற்கான ஒலிப்பதிவை நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தரமுடியும்.
2. வவுனியா நிகழ்வில் கூடியிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் என்பதாலேயே அரச தலைவரின் உரைக்கு உடனடி மொழிபெயர்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அங்கிருந்த தமிழர்கள் அனைவரும் அரச தலைவர் ஒற்றையாட்சி பற்றிப் பேசினார் என்றே எடுத்துக்கொண்டார்கள்.
3. அந்த மொழிபெயர்ப்பு இடம்பெற்றபோது அவர் சொன்னதைப் போன்றே சுமந்திரனும் மேடையில் அமர்ந்திருந்து கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது அவர் அந்தத் திருத்தத்தைச் செய்யவில்லை.
4. மூன்று தசாப்தங்களாக, பௌத்த சிங்களத்திடம் இருந்து பிரிந்து தனிநாடு கேட்டுப் போராடிய ஒரு சமூகத்திடம் இருந்து இந்தளவு ஆழமான சிங்கள மொழி அறிவை நாடாளுமன்ற உறுப்பினர் எதிர்பார்ப்பது கொஞ்சம் அல்ல அளவுக்கு மீறிய ஆசை.
5. மகாநாயக்கர்கள் சக்தியற்றவர்கள் இந்த நாட்டிலே என்றால், பண்டா செல்வா ஒப்பந்தத்துடனேயே இனப் பிரச்சினை தீர்ந்திருக்க வேண்டும். அந்த ஒப்பந்தத்துக்கு என்ன நடந்தது என்பதும் அது யாரால் நிகழ்ந்தது என்பதும் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரியாததல்ல.
6. மகாநாயக்கர்கள் எந்த சக்தியும் அற்றவர்கள் என்றால், அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அரச தலைவர்கள் மாறி மாறி ஏன் கருத்துரைக்கிறார்கள் என்பதையும் அவர்களைச் சென்று ஏன் சந்திக்கிறார்கள் என்பதையும் அண்மையில்கூட தினேஸ் குணவர்த்தனவை அனுப்பி ஏன் அவர்களுடன் பேசினார்கள் என்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர் மக்களுக்குத் தெளிவுபடுத்தினால் நல்லது.

(உ-108, 26)

## நாட்டை...

நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய சபாநாயகர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு இன்னும் உருவாக்கப்படவில்லை. சபாநாயகர் என்ற வகையில் அதை நான் இன்னும் கண்டதும் இல்லை. தற்போதுதான் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இனிமேல்தான் நடவடிக்கைகள் இடம்பெறும்.

எவர் வேண்டுமானாலும் கருத்துக்களை, யோசனைகளை முன்வைக்கலாம். இவற்றுள் சில கோரிக்கைகள் நாட்டைப் பிளவுபடுத்துவ தற்கான யோசனையாகவும் இருக்கக்கூடும். அவை வெறும் யோசனைகள் மட்டுமே. சபாநாயகர் என்ற வகையில் நான் கையொப்பமிட்டால் மாத்திரமே அது சட்டப்பூர்வமானதாக மாறும்.

நாட்டைப் பிளவுபடுத்தும் - கூறுபோடும், பௌத்த மதத்துக்கோ அல்லது ஏனைய மதத்துக்கோ பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு அரசமைப்பையும் சட்டபூர்வமாக்குவதற்குரிய கையொப்பத்தை நான் இடமாட்டேன் என்றார். (5)

## சிங்கள...

சிங்கள, பௌத்த மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த விடயத்தை குறுகிய நோக்கில் பார்க்கக் கூடாது.

சிங்கள பௌத்த அடையாளத்தை தக்க வைத்து, ஒற்றையாட்சியைப் பாதுகாப்ப அரசின் நோக்கம். இது தொடர்பில் மகாநாயக்க தேரர்களின் ஆசீர்வாதமும் பெறப்படு அவர்களின் ஆலோசனையின்றி நடவடிக்க இடம்பெறாது.

நாட்டில் இனவாதிகள் இருக்கின்றனர். எ போது நாடு பற்றி எரியும் என்று பார்த்து கொண்டிருக்கின்றனர். பிரபாகரன் காலத்தி இவர்கள் வாய் திறக்கவில்லை. பன்சலைகள் மீது தாக்குதல் நடத்தும்போது பௌத்த மதம் பற்றிப் பேசவில்லை. இப்போதுதான் வீரர்களா கியுள்ளனர் - என்றார்.

(உ-5)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 23
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் காலிறுதி ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-23)



## தலைவராக பெரேரா

பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 தொடரில் இலங்கை அணியின் தலைவராக திசர பெரேரா நியமிக்கப்பட்டார்.

இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. அங்கு பாகிஸ்தான்-இலங்கை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் அபுதாபியில் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. அதே மைதானத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி இரண்டாவது ரி-20 ஆட்டம் நடைபெறவுள்ளது. மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி லாகூரில் நடைபெறவுள்ளது.

இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிய போது வீரர்கள் பயணித்த பேருந்து மீது ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தினார்கள். இதனால் மீண்டும் அங்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள இலங்கை அணியின் சில வீரர்கள் தயக்கம் காட்டுகின்றனர். குறிப்பாக முன்னணி வீரர்களான மலிங்க, தரங்க ஆகியோர் பாகிஸ்தானுக்குச் செல்ல இயலாது என்று தெரிவித்து விட்டனர். ஒவ்வொரு ஆட்டத்துக்கும் தனித்தனியாக அணியை அறிவிக்க இயலாது. எனவே பாகிஸ்தானில் விளையாட மறுக்கும் வீரர்களை அணியில் இருந்து நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதன்படி அணித்தலைவர் தரங்க அணியில் இருந்து நீக்கப்பட்டார். இதனால் பொறுப்புத் தலைவராக பெரேரா பெயரிடப்பட்டார்.
(ம)

## தெல்லிப்பழை மகாஜனவை வீழ்த்தியது சென். ஜோன்ஸ்

யாழ்ப்பாணம், ஒக். 23
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 14 வயதுப்பிரிவு அணிகளுக்கான ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் சென். ஜோன்ஸின் சார்பாக இரண்டு கோல்கள் பதிவானது. பவிந்தன், அச்சேயன் இருவரும் இந்தக் கோல்களைப் பதிவுசெய்தனர். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
(ம-23)

## போராடி வென்றது சண்டிலிப்பாய் இந்து

யாழ்ப்பாணம், ஒக். 23
மைலோ வெற்றிகிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் கோலைப் பதிவுசெய்தார் அருள் பிரகாஸ். முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
(ம-23)




## சென். ஹென்றிஸ் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 23
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற 16 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்மொன்றில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது சென். ஹென்றிஸ். இந்தக் கோல்களை ஜெலக்சன், சானுஜன் இருவரும் பதிவுசெய்தனர்.

தொடர்ந்து இரண்டாம் பாதியில் ஆதிக்கம் செலுத்திய இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி முடிவில் 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ம-23)

## போராடி வென்றது மத்தி.

யாழ்ப்பாணம், ஒக். 23
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 14 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி போராடி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய கல்லூரி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் மத்தியின் சார்பாக அபிசன் ஒரு கோலைப் பதிவு செய்தார். அந்தக் கோலே ஆட்டத்தின் இறுதிக்கோலுமாக அமைய முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.
(ம-23)



## துர்க்கா சம்பியனானது

யாழ்ப்பாணம், ஒக். 23
அல்வாய் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் கோண்டாவில் துர்க்கா விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.

அல்வாய் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் குறித்த கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கோண்டாவில் துர்க்கா விளையாட்டுக் கழகம் மோதியது. 28:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கிண்ணம் வென்றது துர்க்கா விளையாட்டுக் கழகம்.
(ம-108)



## 'பாகிஸ்தான் பந்துவீச்சு வரிசையே உலகில் ஆகச் சிறந்தது'

"பாகிஸ்தானின் பந்துவீச்சு வரிசையே உலகில் ஆகச் சிறந்த பந்து வீச்சு வரிசை" என்று தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் தலைவர் அகமட்.

"மினி உலகக்கிண்ணத் தொடரில் இருந்து நாங்கள் சிறப்பாகப் பந்து வீசி வருகிறோம். எமது பந்து வீச்சாளர்களுக்கு கட்டாயம் நன்றி சொல்லியாக வேண்டும். குறிப்பாக ஹசன் அலிக்கு. அவர் நாளுக்கு நாள் தனது பந்து வீச்சில் வளர்ந்து வருகிறார். தற்போது பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளார். எங்கள் அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் அவரை நான் பாராட்டுகிறேன்" என அஹமட் மேலும் தெரிவித்தார்.
(ம)

# பலம்பெற்றது மே.இ.தீவுகள்

மேற்கிந்தியத் தீவுகள் - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்தில் வெற்றி பெறக்கூடிய அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளது மேற்கிந்தியத் தீவுகள்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி 219 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹோப் ஆட்டம் இழக்காமல் 90 ஓட்டங்களையும், பவல் 56 ஓட்டங்களையும், சேஸ் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கிரீமர் 4 இலக்குகளையும், வில்லியம்ஸ் 3 இலக்குகளையும், யாவிஸ், மொபு, ரசா மூவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே அணி 159 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக மசகட்சா 42 ஓட்டங்களையும், எர்வின் 39 ஓட்டங்களையும், மிரி 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிஸ்கூ 5 இலக்குகளையும், கோல்டர், றோச் இருவரும் தலா 2 இலக்குகளையும், கபிரியேல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு இலக்கை இழந்து 88 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் நாள் முடிவுக்கு வந்தது. (ம)



# திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் மகாலிங்கம் தொடரில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தால் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான ரி-20 தொடரில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 20-பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக லவகாந் 35 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியின் சார்பாக ஜனாந்தன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

130 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி 19 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 105 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. நிதர்சன் அதிகபட்சமாக 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சுரேந்திரன் 3 இலக்குளைக் கைப்பற்றினார். (ம-23)



# வழித்துத் துடைத்தது தென்னாபிரிக்க அணி

பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரை 3:0 என்ற அடிப்படையில் மிகமிக இலகுவாகக் கைப்பற்றியது தென்னாபிரிக்க அணி.

இந்தத் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வந்தது. முதலிரு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதி செய்திருந்த நிலையில் நேற்றைய மூன்றாவது ஆட்டம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 6 இலக்குகளை இழந்து 369 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக பிளாசிஸ் 91 ஓட்டங்களையும், குயின்டன் டி ஹொக் 73 ஓட்டங்களையும், மார்க்ரம் 66 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் மிராஸ், அகமட் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் கமிறங்கிய பங்களாதேஷ் அணி 169 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 200 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரை 3:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது தென்னாபிரிக்க அணி.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. (ம)

# சென். மேரிஸ் அணி அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 23

இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் முதலாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுப்பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிவில் பாதுகாப்பு அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் சென். மேரிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது. மேரிஸின் சார்பாகப் பதிவான கோல்களை நிதர்சன், யூட் இருவரும் பதிவு செய்தனர். சிவில் பாதுகாப்பு விளையாட்டுக் கழக அணி சார்பாக பதிவான கோலை ஏ.ஆர். விக்கிரமசிங்க பதிவுசெய்தார்.

இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது (ம-23)



# கோக்லிக்கு டோனியின் ஆலோசனை அவசியம்


## கங்குலி தெரிவித்தார்

“இந்திய அணியின் தலைவர் கோக்லிக்கு டோனியின் ஆலோசனைகள் அவசியம் தேவைப்படுகின்றன என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி.

கோக்லியின் தலைமையில் இந்திய அணி தொடர்ந்து வெற்றிகளைக் குவித்து வருகின்ற போதிலும் அவருக்கு டோனியின் வழிகாட்டுதல் தொடர்ந்து தேவைப்படுகிறது என்று பலரும் வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் கங்குலியும் இவ்வாறு வலியுறுத்தினார்.

“டோனி இந்திய அணியில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று விராட் கோக்லி விரும்புகிறார். தற்போது டோனிக்கு 36 வயதாகிறது. 2004ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடிய டோனியாக அவர் இல்லை. என்றாலும், தற்போது மாறுபட்ட வீரராக உள்ளார். டோனியை விராட் கோக்லி வெறும் இலக்குக் காப்பாளராக மட்டும் பார்க்கவில்லை. தலைமைப் பதவிக்கான அனைத்து தகுதியும் உள்ள டோனியிடம் இருந்து சிறந்த அறிவுரையை கோக்லி பெறுகிறார். இன்னும் ஏராளமான அறிவுரையை கோக்லி டோனியிடம் இருந்து பெற வேண்டும்” என கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)

# சொந்த மண்ணில் சுருண்டது இந்தியா





இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்திய அணிக்கு அதிர்ச்சித் தோல்வி வழங்கியது நியூசிலாந்து அணி.

நியூசிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்ப வீரர்களாக ரோகித் மற்றும் தவான்.

9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தவான்.

20 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார் ரோகித் சர்மா. இந்திய அணியின் தலைவர் கோக்லி ஒரு முனையில் நிலைத்துநின்றார். அவருக்கு நீண்ட இணைப்பாட்டத்தை வழங்க எவராலும் இயலவில்லை. டினேஸ் கார்திக் 37 ஓட்டங்களையும், டோனி 25 ஓட்டங்களையும் சேர்த்த போதிலும் துடுப்பாட்டத்துக்குச் சாதகமான மும்பை வான்கடே



மைதானத்தில் இமாலய இலக்கை நிர்ணயிக்கக்கூடிய வகையில் எவரும் அதிரடியானதொரு இன்னிங்ஸைக் கட்டமைக்கவில்லை. இலக்குச் சரிவுகளால் அதிகம் நிதானித்துச் சதம் கடந்தார் கோக்லி. அவர் 121 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்த 121 ஓட்டங்களுக்காக அவர் 125 பந்துகளை எதிர்கொண்டார். முடிவில் 8 இலக்குகளை இழந்து 280 ஓட்டங்களைக் குவித்தது இந்தியா.

பந்துவீச்சில் போல்ட் 4 இலக்குகளையும், சவுத்தி 3 இலக்குகளையும், சான்நெர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 48 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் முன்றோ. 6 ஓட்டங் களுடன் வில்லியம்சன் ஆட்டமிழந்தார். ரெய்லர், லாதம் இருவரும் இணைந்து நீண்டு நிலைபெற்றனர். படிப்படியாக் இந்தியாவின் வெற்றி கேள்விக் குறியானது. சதம் கடந்தார் லாதம். இணைப்பாட்டமாக 200 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 95 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரெய்லர். எனினும் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் லாதம். (ம)

**CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931362
follow us : cnrworldwideexpress

**குஜராத், அகமதாபாத், நேப்பாள் காசி யாத்திரை**

நாள்கள்: 16 ஆரம்பம்: 25.11.2017 யாத்திரீகர்: 20

**மிகவும் புனிதமான யாத்திரை**


**செல்லும் இடங்கள்: குஜராத்தில்:** பாவ்நகர், கடலுக்குள் பஞ்சலிங்கம், சோமநாதர், ஜோதிலிங்கம், தையூர், கங்கேஸ்வரர் பஞ்சலிங்கம் அம்பாஜி 51 கலசமுடைய சக்தி பீடம் (பெரிய ஆலயம்), காபர்மலை பார்வதிதேவியின் இருதயம் விழுந்த இடம், 51 சக்தி பீடங்களில் முதன்மையான ஆலயம், **காசி:** விஸ்வநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காலபைரவர் உட்பட 15 இடங்களைத் தரிசிக்கலாம். **கயா:** முன்னோர்களுக்கு சிரார்த்தம் செய்யுமிடம். **அலகாபாத் :** கங்கா, ஜமுனா, சரஸ்வதி திருவேணி சங்கமம், வேறு இடங்களும் காணலாம். சீத்தாமடியும் காணலாம். **நேப்பாள் :** கோராப்பூர், லூம்பினி, புத்தபிரான் பிறந்த இடம், **காத்மாண்டு:** கமக்கயா, போக்ரா, சுயம்புநாதர், பெரியகுகை, ஜெலநாராயணரை, தண்ணீரில் மிதக்கும் விஷ்ணு, குச்சேஸ்வரர், பசுபதிநாதரையும் தரிசிக்கலாம். **சென்னை - இராமேஸ்வரம்:** நவபாஷாணம், திருப்புலாணி, உத்திரகோசமங்கை, **மதுரை:** மீனாட்சி சுந்தரேஸ்வரரையும் தரிசிக்கலாம்.

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை**

விமானப் பயணச்சீட்டு, மூன்றுவேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர், A/C வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள் இவை அனைத்தும் எமது சேவை. இத்துடன் ஒருநாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம்.
பிராமண சமூகத்தினரும் தயக்கமின்றி கலந்துகொள்ளலாம்.

**விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்**
**No: 59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11**
**T.P : 077 768 0102, 077 736 2154**

## மரண அறிவித்தல்



## தம்பு கனகரத்தினம்

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் செபஸ்ரியார் ஒழுங்கை, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கனகரத்தினம் 21.10.2017 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - அன்னமுத்து தம்பதியரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் கனகரஞ்சினி, கனக்ரஞ்சன்(கனடா), கனகபாலன்(கனடா), கனகரமணி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் சிவமலர்(கனடா), தங்கேஸ்வரி(கனடா), வைத்திலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மனோன் மணி, தங்கம்மா மற்றும் கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரேணுகா - நகுலன்(பிரதேச செயலகம் நல்லூர் கிராம உத்தியோகத்தர்), சுகுந்தன்(ஜேர்மனி), மேனகா - கேதீஸ்வரன்(லண்டன்), சுதர்சன், ராஜிகா, பானுஜன், வினோஜன், ரேணுஜன், அஜந்தன், நிலோஜன், தனுசன் (கனடா), அஜித்குமார், அக்ஷனா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் அபிஷன், அக்ஷயன், ஆதீஸ், ஆர்த்திக், அஸ்மித், ஆதர்ஷ், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.10.2017) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப 10 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வண்ணார்பண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செபஸ்தியார் லேன்,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்: பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்**

**077 044 9887**

**வீடு வாடகைக்கு**

வவுனியாவில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு - 077 374 7825, 077 615 2992

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
பேராதனை பல்கலைக்கழகம் வெளிவாரி விரிவுரைகள்

**ஆரம்பம் : 28.10.2017**

மெய்யியல் : கலாநிதி யுகபாலசிங்கம்
அரசியல் : திரு.பொன்.சந்துரு BA(Hons), MEd
தமிழ் : திரு.N.பரன் BA(Hons),M.Phil (Tamil)
இந்துநாகரிகம் : திரு.P.சந்திரன் BA(Hons),MA
புவியியல் : திரு.PSV.டினேஸ் BA(Hons)

**தனிப்பாடங்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.**

*Further Details*
**Jaffna College**
**Undergraduate Dept.**
**464, Hospital Road,**
**Jaffna,**
021 222 3382/ 021 222 9149

**காணி தேவை**

25 ஏக்கரிற்கும் அதிகமான அளவு கொண்ட காணி தேவை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மட்டும்.

**தொடர்புகளுக்கு;**
**கற்பகவனம் - 078 284 5000**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.10.2017 இல்